விதியின் கூறு

(தத்துவ ஸம்வாதம்)

இது

ஸ்ரீ A. S. பஞ்சாபகேச ஐயர், I. C. S.

அங்கிலத்தில் எழுதியதைக்கொண்டு

தமிழில்

ஸ்ரீ T. A. ஸ்வாமிநாத ஐயர்

எழுதியது

சென்னை

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1940

[விலை 6 அணா

ஸம்வாத பாத்திரங்கள்

1. ரங்கராஜு	....	பாரிஸ்டர்
2. சுபத்திரை	....	அவனது மனைவி
3. நாகம்மாள்	....	அவனது தாயார்
4. மங்கம்மாள்	....	அவனது மகள்
5. சூரய்யன்	....	அவனது மகன்
6. ஆனந்தசுவாமி	....	சந்நியாசி

விதியின் கூறு

3570

[மதராஸில பாரிஸ்டர் ரங்கராஜு பங்களாவின் தாழ்வாரம். மாலை 3 மணிக்கு அவர் ஈஸிசேரில் அமர்ந்து "இல்லஸ்டிரேடெட் நியூஸ் ஆவ் இண்டியா" என்னும் பத்திரிகையைப் படித்துக்கொண் டிருக்கிறார். அவர் மனைவி சுபத்திரை என்பவள் அருகில் ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து, பூநூலினால் ஒரு சவுக்கம் பின்னிக்கொண் டிருக்கிறாள்].

ரங்கராஜு — இதோ அம்மா வந்துகொண்டிருக்காளே. அவளைப் பார்த்தால் ஏதோ புது சங்கதியொன்று சொல்வதற்கு ஆதுரத்தோடு வருவதாகத் தெரிகிறது.

சுபத்திரை — ஆமாம், சந்தேகமென்ன? ஏதோ ஒரு கோவிலைப்பற்றிச் சொல்லுவாள். அதிலுள்ள விக்கிரகத்துக்கு அடிமையாகத் தொண்டு செய்துகொண்டிருந்தவனொருவன் அளித்த காணிக்கைகளினால் திருப்தியடைந்து அந்த விக்கிரகம் அவனுக்கு இருந்த நோயை அற்புதமாகப் போக்கிவிட்டது என்பாள்; அல்லது காணிக்கை அளிக்கிறேனென்று நேர்ந்துகொண்டிருந்த தௌர்ப்பாக்கியனொருவன் அந்த காணிக்கை யளிக்காத குற்றத்திற்காக அந்த விக்கிரகம் அவன்மீது பழி வாங்கி,

அவனைப் பெரிய துர்க்கதியில் ஆழ்த்திவிட்டது என்பாள்; அது இல்லாவிட்டால், சிலாரிஷப மொன்று நாளுக்கு நாள் பெரிதாக ஓங்கி வளர்ந்து கொண் டிருந்தது, அதன் திமில்மீது பழுக்கக் காய்ச்சின கடப்பாரை யொன்றினல் சூடு போட்டபின், அதன் வளர்ச்சி அடங்கியது, அது முதல் அந்தச் சூட்டுக் காயத்திலிருந்து வருஷந்தோறும் நிஜமான இரத்தமும் சீழும் வழிந்து வருகின்றன — என்பது போன்ற அதிசய வர்த்தமானமொன்றை ஆவலோடு சொல்ல வருவாள். ஓ அப்பா, அவளுக்குச் சாஸ்திரப் பித்து அதிகம்; ஆசாரத்தில் அவளுக்கு மிஞ்சினவர்கள் இல்லை. பாருங்களேன் அப்போதைக் கப்போது நாம் புலாலுண்பதையும் கொஞ்சம் மது உண்பதையும் பற்றி என்ன கூச்சல் போடுகிறுள், என்ன பிரமாதம் பண்ணுகிறுள்! அதோடேயா! அவளுடைய பேச்சுவார்த்தைகளினுலும், சுவர்க்கத்திற்கு வழி காட்டுகிறேன் என்கிற ஆண்டிகள் பலரை அழைத்துவந்து பேசவைப்பதனுலும், அவள் உங்களையும் தன் வழிக்குப் பெரும்பாலும் திருப்பிக் கொண்டு வருகிருளே. அடேயப்பா! மதசம்பந்தமான புஸ்தகங்கள் எத்தனை நீங்கள் படிக்கிறீர்கள்! இப்பொழுது நீங்கள் கிளப்புக்குச் சரியாக வருகிறதில்லை. மதுவும் மாமிசமும் எப்பொழுதேனும் அரிதாக உட்கொள்கிறீர்களே யல்லாமல், சாதாரணமாகப் புசிக்கக் காணேம். இன்னும் இரண்டொரு மாதத்திற்குள் நீங்களும் அவளைப்போல் ஆகிவிடுவீர்கள்.

[ரங்கராஜுவின் தாய் நாகம்மாள் வருகிருள். அவளுக்கு வயது 52: விதவை; வைதிகக் கோலமாக வெள்ளைச் சேலை உடுத்திருக்கிருள்].

ரங்கராஜு — வா, அம்மா, வா, என்ன செய்தி?

நாகம்மாள் — பெயர்பெற்ற ஆனந்த சுவாமி இன்னும் சிறிது நேரத்தில் இங்கே வருவார். நமது வீட்டுக்கு எழுந்தருளி நாம் அளிக்கத்தக்க எளிய காணிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவரை நான் கேட்டுக்கொண் டிருக்கிறேன்.

சுபத்திரை — என்ன காணிக்கை கொடுக்கப் போகிறீர்கள்?

நாகம்மாள் — வழக்கமாயுள்ள பழம் புஷ்பத் தோடு ஒரு தங்கப்பவுன் வைத்துக் கொடுக்கலா மென் றிருக்கிறேன்.

சுபத்திரை — இம்!

நாகம்மாள்—அப்பா ரங்கராஜு, இப்பொழுது நீ ஆனந்தசுவாமிகளைப் பார்த்து, நீ தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களை யெல்லாம் கேட்டு மனத் திருப்தி யாகிறமட்டும் தர்க்கித்துச் சர்ச்சித்துத் தெரிந்துகொள்வதற்கு நல்ல சமயம் நேர்ந்திருக் கிறது. அவர் வாக்குவாதத்திற்குப் பெயர் பெற்ற வர். வாதகேஸரி எனத் தக்கவர். அவர் உன்னைப் போல அவ்வளவு தெளிவாகவும் தாராளமாகவும் இங்கிலீஷும் பேசுவர். சாஸ்திர ஞானத்திலும்

புராணுதி விசாரத்திலும் எவ்வளவு தேர்ந்திருக்கிருரோ அவ்வளவு இக்காலத்து வியவகாரங்களிலும் நாகரிகக் கலேகளிலும் தேர்ந்தவரென்று சொல்லுகிருர்கள். அவர் உன்னேப் பெரிய ஆஸ்திகனுக்கி மது மாமிஸாதிகளே அறவே ஒழிக்கும்படி செய்வது திண்ணம்.

சுபத்திரை — நவநாகரிகத்தில் தேர்ந்தவரென்று சொல்கிற அவர் உணவு விஷயத்தில் இவ்வளவு சைவம் கொண்டாடுகிரு ரென்று சொல்வது விந்தையா யிருக்கிறதே. முற்றும் மது மறுத்தாரென்பார் பலர் அப்போதைக்கப்போது கொஞ்சம் கள் அருந்துகிறவனேக்காட்டிலும் அதிகமாகக் குடித்துக் கூத்தாடுகிருர்கள்; சைவம் கொண்டாடுவார் பலர் புலால் உண்பவனும் கூசத்தக்க கொலேக் குற்றக்கொடுமைகளுக்கு ஆளாயிருக்கிருர்கள். அது நிற்க, நமது ஜாதிக்கு மது மாமிசம் கூடாதென்னும் விலக்கு இல்லே. க்ஷத்திரியர்களுக்கு மதுவும் மாமிசமும் நிஷேதமாகா. எவ்வளவு பெரிய ரிஷியானுலும் அந்தந்த ஜாதிக்காரர் தத்தம் ஜாதிக்குரிய ஆசாரங்களேயே அனுஷ்டிக்க வேண்டுமென்று சொல்வாரெனக் கேட்டிருக்கிருேம். க்ஷத்திரியராகக் கடவுள் ஸ்ரீராமாவதாரம் எடுத்தபோது மாமிசம் புசிக்கவில்லேயா ? அதுபோலவே பலராமாவதாரத்தில் அவரும் மது உண்ணவில்லேயா ? அப்படியிருக்க, நாம் ஓரோர்போது கொஞ்சம் மது மாமிசம் அருந்துவது குற்றமென ஆனந்தசுவாமிகள் கூறத்தகுமோ ?

நாகம்மாள் — இந்தப் பெரியார் மற்றவர்களைப் போலல்ல. துராசாரம் ஜாதிக்கேற்றதே யானாலும் அதைக் கைவிட வேண்டுமென்பது இவரது கொள்கை. அப்பா மகனே, இந்த விஷயத்தைப்பற்றி அவருடன் நீ நேரிற் கலந்து பேசித் தெளிவாய்.

ரங்கராஜு — நல்லது, அப்படியே, அம்மா. அவரை வழிபட்டு நீ காணிக்கை யளித்தபின், இங்கே அழைத்துவா.

நாகம்மாள் — ஆஹா, அழைத்து வருகிறேன். ஓ, அவர் இதோ வந்துகொண்டிருக்கிறாரே.

[காந்தியும் அழகும் வாய்ந்த முண்டித சந்நியாசி ஒருவர் வருகிறார். அவருக்கு வயது 45 இருக்கலாம். காவியாடை தரித்து, ஒரு கையில் தண்டமும், மற்றொரு கையில் கமண்டலமும் ஏந்தி இருக்கிறார். வாயிற்படியைக் கடந்து அவர் வந்தவுடனே சுபத்திரை வீட்டுக்குள் தன் அறைக்குப் போய்விட்டாள். தாழ்வாரத்திலிருந்த தன் அறைக்கு ரங்காராஜுவும் சிறிது நேரம் போயிருக்கிறான். ஆனந்தசுவாமிகளைக் கண்டவுடன் தாழ்வாரத்தில் நாகம்மாள் பாதம் பணிந்து வரவேற்றுக் கூடத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறாள். அங்கே ரங்கராஜுவின் மக்களாகிய மங்கம்மாவையும் சூரய்யாவையும் வேலைக்காரி அழைத்துக்கொண்டு வந்திருந்தாள். ஆனந்தசுவாமிகளைக் கூடத்திற்கு அழைத்துக்கொண்டு போய் நாகம்மாள் அவரை ஆசனத்தில் அமரச் செய்த பின் ரங்காராஜு தாழ்வாரத்தில் திரும்பி வந்து முன்னிருந்த நாற்காலியில் உட்காருகிறான்].

நாகம்மாள் (கூடத்தில் ஆனந்தசுவாமிகளுக்குத் தன் காணிக்கைகளை ஒரு தட்டில் வைத்துக் கொடுக்கிறாள்.)— அடியேன் அளிக்கும் இவ்வெளிய காணிக்கையைத் திருவுளம் கூர்ந்து ஏற்கப் பிரார்த்திக்கிறேன். (நாகம்மாளும் வேலைக்காரியும் அவ்விரண்டு குழந்தைகளும் சுவாமிக்குத் தண்டம் சமர்ப்பிக்கிறார்கள்).

ஆனந்தசுவாமி (அக் காணிக்கைகளைக் கையினால் ஸ்பரிசித்து, அவைகளை யெடுத்துத் தமது கப்பறையில் வைத்துக்கொள்கிறார்)— ஆயுராரோக்கிய ஐசுவரியாபி விருத்தி ரஸ்து!

நாகம்மாள் — தங்கள் பாததூளி எங்கள் பவனத்தில் படியப் பெற்றதனால், நாங்கள் தன்னியர்களாயினோம்.

ஆனந்தசுவாமி — நாம் கூடத்திற்கு வரும்போது வழியிற் கண்ட யுவன் யாவன்? அவன் முகத்தில் நல்ல தேஜசு இருக்கின்றது. அவன் உன் மகனா?

நாகம்மாள் — ஆம்.

ஆனந்தசுவாமி — ஓ, அந்தப் பெயர் பெற்ற வக்கீலா? அந்த யுவதி அவருடைய மனைவியா?

நாகம்மாள் — ஆம்.

ஆனந்தசுவாமி (அங்கிருந்த குழந்தைகளிரண்டையும் சுட்டிக் காட்டி)— இவர்கள் உன் பேரப்பிள்ளைகளா?

நாகம்மாள் — ஆம்.

ஆனந்தசுவாமி (குழந்தைகளைப் பார்த்து) — என் கண்களா, உங்கள் பெயரென்ன ?

மங்கம்மாவும், சூரய்யாவும் — மங்கம்மா, சூரய்யா.

ஆனந்தசுவாமி— நல்லது, உங்கள் வயது என்ன ?

மங்கம்மாள் — எனக்கு 8 வயதாகிறது, சூரய்யாவுக்கு ஐந்து. ஆமாம், நீங்கள் ஏன் தலையை மொட்டை யடித்துக்கொண்டு, காவியாடை உடுத்திருக்கிறீர்கள் ?

ஆனந்தசுவாமி — (அந்தக் குழந்தையின் முதுகில் தட்டிக்கொண்டு) நான் ஒரு சந்நியாசி. என்னைப் போலக் கல்லாடை தரித்தவர்களை நீ பார்த்ததில்லையா ?

மங்கம்மாள் —'ஆஹா, பார்த்திருக்கிறேன். ஆனால், அவர்களெல்லாரும் பிச்சைக்காரர்களென்று நினைத்திருந்தேன்.

நாகம்மாள் — மங்கம்மா ! (அந்தக் குழந்தை பயப்பட்டு வாயை மூடிக்கொள்கிறாள்).

ஆனந்தசுவாமி (திரும்ப அந்தக் குழந்தையைத் தட்டிக்கொடுத்துக்கொண்டு நாகம்மாவைப் பார்த்துச் சொல்கிறார்) — குழந்தைமீது கோபித்துக்கொள்ளாதே. அவளுக்குத் தோன்றியதையே அவள் சொன்னாள். மெய்யுரையை மட்டம்தட்டி ஒருபோதும் அடக்கலாகாது. (குழந்தையைப் பார்த்து) குழந்தாய்! நானும் ஒரு பிச்சைக்காரனே. உன்

பாட்டியார் எனக்கு என்ன கொடுத்திருக்கிறார் பார். என் கப்பரையைப் பார் (அதைக் காட்டுகிறார்).

நாகம்மாள் — சுவாமிகளே, என் பிள்ளை உங்களோடு சில விஷயங்களைப் பற்றிப் பேசித் தெளிய விரும்புகிறான்.

ஆனந்தசுவாமி — அப்படியே ஆகலாமே, நான் சித்தமாயிருக்கிறேன் (இடத்தைவிட்டெழுந்திருக்கிறார். பிள்ளைகளை வேலைக்காரி அழைத்துக்கொண்டு போகிறாள். அதன்பின் ஆனந்தசுவாமிகளைத் தாழ்வாரத்திற்கு நாகம்மாள் அழைத்துக்கொண்டு போகிறாள். ரங்கராஜு எழுந்து சுவாமிகளை வரவேற்று, சுபத்திரை விட்டுப்போன பிரம்பு நாற்காலியில் உட்காரச் சொல்கிறான். ரங்கராஜுவும் தனது ஈஸிசேரில் அமருகிறான். நாகம்மாள் வீட்டுக்குள் போய்விடுகிறாள்).

ரங்கராஜு — சுவாமிஜீ, நமஸ்காரம்.

ஆனந்தசுவாமி — மகனே, சிரஞ்சீவியாக வாழ்வாய்.

ரங்கராஜு — ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய நூல்களையும் விவேகானந்த சுவாமிகளின் நூல்களையும் நான் படிக்கத் தலைப்பட்டது முதல் ஒரு வருஷ காலமாக எனக்குப் பல சந்தேகங்கள் தோன்றி என் மனத்தை வாதிக்கின்றன. அவைகளைக் குறித்து உங்களுடன் தாராளமாகத் தர்க்கித்துத் தெளியவேண்டுமென்பது எனது விருப்பம். இஷ்டானிஷ்டம் பாராட்டாமல் நீங்கள் தர்க்கமாடுவதில்

மிக்க விருப்பமுடையவர்களென்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஆனந்தசுவாமி — தங்கத்தை மாசு படியாமல் காப்பாற்றி வைக்கவேண்டுமானல், அதை அடிக்கடி நெருப்பிலிட்டு உருக்கலே வேண்டும். அதுபோல, சத்தியமும், மாசின்றித் துலங்க வேண்டுமானல், அதைத் தர்க்கமென்னும் தீயில் அடிக்கடி இட வேண்டும்.

ரங்கராஜு — நல்ல உபமானம் சொன்னீர்கள். இனி நான் ஆரம்பிக்கிறேன். பிற நாடுகளுக்குச் சென்று நான் பிற மதங்களையும் பிற தத்துவ நூல்களையும் ஆராய்ந்துள்ளேன், பிற நடை யுடை ஆசார வியவகாரங்களையும் பார்த்துள்ளேன். ஆதலால், அநாதிகாலமாக நாம் பாராட்டி வருகிற ஆசாரங்களையும் கொள்கைகளையும் மதிக்காமல் நான் பேசுவதாக ஒருவேளை உங்களுக்குத் தோன்றினல் என்னை மன்னிக்க வேண்டுகிறேன். என் முதற் கேள்வியாவது, கடவுள் ஒருவர் இருக்கிறர் என்பதற்கு நீங்கள் ஏதாவது ருஜு காட்டுவீர்களா? அந்த ருஜு ஸஹேதுகமாகவும் விவேகமுள்ளவனெருவன் ஒப்புக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

ஆனந்தசுவாமி — அப்படிப்பட்ட ருஜு ஒன்றுமில்லை. நம்பிக்கையில்லாத நாஸ்திகன் ஒருவன் ஒப்புக்கொள்ளும்படி செய்வதற்கேற்ற ருஜு ஒன்றுமில்லை. ஆனல், கடவுள் ஒருவர் உளரென்பதை ஐயமற நிரூபிக்காவிட்டாலும், ஆஸ்திகத்துவமே நீதி

நியாயங்களுக்கு இசைந்த கொள்கையென அந்த நாஸ்திகனும் ஒப்புக்கொள்ளத்தக்க ஹேதுவாதங்கள் பல உள. அவற்றுள் முதலாவது அனுமானம் (Ontological argument). தெய்வம் இல்லையென மறுக்கிறவர்களுள்பட எல்லா மானிடர் மனத்திலும் தெய்வம் என்னுமொரு பாவனை ஏற்பட்டிருப்பதனால், தெய்வம் உளதெனவே நாம் அனுமானிக்க வேண்டியிருக்கிறது. தெய்வம் இல்லையென மறுக்கிறவனைத் தர்க்கித்துக் கேட்போமானால், தெய்வம் இன்னதெனத் தனக்குத் தெரியுமென அவன் ஒப்புக்கொள்ளவே வேண்டும். அங்ஙன மில்லையெனின், தெய்வம் உளதெனச் சாதிக்கவு முடியாது, இலதென மறுக்கவு முடியாது. பார்க்கப்போனால், உளதெனச் சாதிப்பதற்கு எவ்வளவு தெரியவேண்டுமோ அதைக் காட்டிலும் இலதென மறுப்பதற்கு அதிகமாகவே தெரியவேண்டும். 'ஆம்', தெய்வம் உளது எனச் சொல்வதற்குச் சாமானியமாகக் கொஞ்சமட்டும் தெரிந்தாற் போதும். 'அன்று', தெய்வம் இல்லையெனக் கூறுவதற்குத் தெய்வத்தின் தன்மை முழுதும் நன்ருகத் தெரிந்திருக்கவேண்டும். ஆகையால், தெய்வம் இல்லையென அவன் சொல்லின், தெய்வம் இன்னதெனத் தனக்குத் தெரியுமென அவன் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகையால், தெய்வம் உளதெனவே சித்தாந்தமாகின்றது.

ரங்கராஜு — இது வெறும் சொற்புரட்டு எனத் தகும். இந்த வாதத்தினல் என்ன வெளியாகின்றது?

தெய்வமென மற்றவர்கள் நினைக்கிறது இன்ன தெனது அந்த நாஸ்திகன் தனக்குத் தெரியுமெனச் சொல்கிறானே யொழிய வேறொன்றுமில்லை. உதாரணமாக, கொம்பு முளைத்த மனிதர் இல்லை, பூதங்கள் இல்லை, யக்ஷிணிகள் இல்லை, பிசாசுகள் இல்லை என நான் கூறினால், அவையெல்லாம் உள எனப் பொருள்படுமோ? அப்படிப்பட்ட பிராணிகள் உண் டென்பதை நாம் ஒப்புக்கொள்வதாகுமோ ?

ஆனந்தசுவாமி — மேற்பார்வைக்கு அது சொற் புரட்டு என உனக்குத் தோன்றுகிறதாயினும், உண்மையில் அப்படியன்று. ஆதியந்த மில்லாத அகண்டாகாரம், பரிபூர்ணம், பரமம், கேவலம் என்னும் பாவனை ஒன்று எல்லா மனிதர்களுக்கும் இருக்கின்றது. அந்த பாவனையைக் கொண்டே ஆதியந்தம் உள்ளது, எல்லையுள்ளது, அறைகுறை யானது, பரஸ்பர சம்பந்தம் உள்ளது ஆகிய இவை களை மனிதர்கள் ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். ஆதி யந்தம் மில்லாததொரு பாவனையும், அறைகுறை யில்லாத பூர்ண பாவனையும் நமக்கு இல்லாவிட்டால், இது ஆதியந்தமுள்ளது, அறைகுறையானது என நாம் எப்படித் தெரிந்துகொள்கிறோம். நம் மனத் தினால் பிரபஞ்சத்தைத் தெரிந்துகொள்வதற் காகு மென நாம் நினைக்கிறோமல்லவா ? அப்படி நினைப் பது நியாய மெனவும் நமக்குத் தோன்றுகிறதல் லவா ? நல்லது, நமது வாழ்நாளோ 100 வருஷத் திற்குக் குறைவா யிருக்கின்றது. இந்தக் காலத்திற்

குள்ளாக, எத்தனையோ கோடி வருஷங்களாக நிலைத்திருக்கிற நக்ஷத்திரங்களின் இரகசியங்களை நாம் ஆராய்ந்து அறிவதற்காகுமோ? அன்றி, அவை நமக்குப்பின் இன்னும் எத்தனையோ கோடி வருஷங்கள் இருக்கத்தக்கவை. அப்படிப்பட்ட நக்ஷத்திர மண்டலத்தின் தன்மையைச் சில நாளைக்குள் நாம் தெரிந்துகொள்வது எங்ஙனம்? அந்த நக்ஷத்திரங்களைக் காட்டிலும் நமது மனம் மிகப் பெரிதாகவும், மிகச் சூக்ஷ்மமான தன்மை வாய்ந்ததாகவும் இல்லாவிடில், அவைகளின் தன்மையை நாம் அறிவதற்காகாதல்லவா? அகண்டமாகவும் எல்லாவற்றிற்கும் பரமாகவும் உள்ளதொரு வஸ்துவின் அம்சம் நம்மில் அமைந்திருக்கிறது, அதற்கும் நமக்கும் சம்பந்தம் இருக்கின்றது, அதற்குள்ள தன்மையே நம்மிடத்தும் அமைந்திருக்கின்றது என்னுமோர் உணர்ச்சி நம் ஒவ்வொருவருக்கும் இயற்கையில் ஏற்பட் டிருக்கின்றது. அந்த அகண்ட வஸ்து என்பது நமக்கு முற்றும் அந்நியமானதன்று, புறம்பானது மன்று, நம்முள்ளேயே அந்தர்க்கதமா யிருக்கின்றது. அப்படியிருந்தும், இந்திரியாதிகளுக்குப் புலப்படாமல் சர்வாதீதமா யிருக்கின்றது என்னும் உணர்ச்சியும் நம் ஒவ்வொருவருக்கும் இயற்கையில் ஏற்பட்டிருக்கின்றது. அப்படி அனந்தமாகவும் பரமமாகவும் பரிபூர்ணமாகவும் உள்ளதே தெய்வம். கடவுள் என நாம் கொள்வதும் அதுவே.

தெய்வம் உளதென்பதற்கு இரண்டாவதுவாதம் ஜகத் உற்பத்தி காரணமாகும். (Cosmological

argument) இந்தப் பிரபஞ்ச மெல்லாம் ஏதோ ஒன்றிடமிருந்து தோன்றியிருக்க வேண்டும். காய் தோன்ற வேண்டுமாயின், அதற்கு மூலம் (வேர்) ஒன்று இருக்கவேண்டும். விதையின்றி விருக்ஷம் தோன்ருது. கனியைக் காணுமிடத்து இதற்கு ஓர் மூலம் நமக்குப் புலப்படாவிடினும், மறைந்து இருக்க வேண்டுமென்றே நாம் அனுமானிக்கிருேம். கண்ணுக்குப் புலப்படுகிற உலகத்தைக் கொண்டு இதனைப் படைத்தவன் ஒருவன் நம்முடைய கண்ணுக்குத் தெரியாமல் இருக்கவேண்டு மென்று அனுமானிக்கிருேம். வேறு விதமாகச் சொல்லின், யந்திரம் ஒன்று இருக்குமானல் அதை ஆக்கியோனும் பாதுகாப்போனும் ஒருவன் இருத்தலே வேண்டும். நாம் பார்த்துள்ள யந்திரங்களுள் உலகத்தைக் காட்டிலும் நன்கமைந்த யந்திரம் வேறென்றில்லை. அப்படிப்பட்ட யந்திரத்திற்கு கர்த்தா ஒருவன் இருத்தலே வேண்டு மென்பது அவசியமாக ஏற்படுகின்றது. மனிதன் இவ்வுலகத்தைப் படைக்கவில்லை. ஆதலால், இதைக் கடவுள் படைத்தாரென்றும், கடவுள் ஒருவர் இருக்கிருரென்றும் சொல்கிருேம்.

ரங்கராஜு — படைத்தவன் ஒருவன் இருக்க வேண்டுமென்னும் ஆவசியகமென்ன? ஒவ்வொன்றுக்கும் படைத்தவனெருவன் இருக்கவேண்டுமானல் கடவுளைப் படைத்தது யார்?

ஆனந்தசுவாமி — கடவுள் எப்பொழுதும் இருந்தார், இருக்கிருர், இருப்பார். அவர் படைக்கப் பெற்றவரல்ல.

ரங்கராஜு — அப்படியானுல், உலகமும் எப்போதும் இருந்தது, இருக்கின்றது, இருக்கும், அதனையும் ஒருவர் படைக்கவில்லை என்று சொல்லலாமே.

ஆனந்தசுவாமி—அப்படிச் சொல்வதற்கு உங்கள் வானசாஸ்திரம் இடந்தருகின்றதோ?

ரங்கராஜு — எனக்குத் தெரிந்தவரையில் நம்மைச் சூழ்ந்துள்ள பிரம்மாண்டமான சூன்யவெளியைப் பற்றியே வானசாஸ்திரம் சொல்லுகின்றது. அந்தச் சூன்ய வெளியில் இடை இடையே காண்கிற நக்ஷத்திரங்கள், அந்த வெளியின் விஸ்தாரத்தை எண்ணிப்பார்க்கும்போது, மிகச் சொற்பம்; பசுபிக் மகா சமுத்திரத்திலுள்ள தீவுகள், அதிலுள்ள நீர் விரிவை எண்ணிப் பார்க்கும்போது எவ்வளவு சொற்பமாகத் தோன்றுகின்றனவோ, அதைக் காட்டிலும் நக்ஷத்திரங்கள் வான விஸ்தாரத்தை எண்ணிப் பார்க்கும்போது மிகக் குறைவு. அந்த நக்ஷத்திரங்களுக்கு இடையில் வெகு விஸ்தாரமான சூன்ய வெளிகள் இருக்கின்றன. அவைகளிலெல்லாம் ஒன்றுமே இல்லை.

ஆனந்தசுவாமி — அந்தச் சூன்ய வெளிகளில் இந்தப் பிரபஞ்சம் என்னும் யந்திரத்தை நடத்திக் கொண்டிருக்கிற கடவுளைத் தவிர வேறொன்றும் இல்லையென்பது உண்மையே. எந்த யந்திரமாவது தனக்குத் தானே உண்டானதைப் பார்த்திருக்கிறாயா, அந்த அங்கங்கள் தமக்குத்தாமே ஒன்றுகூடி

அமைவதைக் கண்டிருக்கிறாயா, அன்றி யந்திரம் தனக்குத்தானே இயலுவதைப் பார்த்ததுண்டா?

ரங்கராஜு — இல்லை.

ஆனந்தசுவாமி — ஆகையால், பிரபஞ்சத்தின் உற்பத்தி, வியவகாரக்கிரமம் முதலியவைகளைத் தெரிந்து பேசுவதற்கு மிகவும் நியாயயுக்தமாக நாம் செய்யக் கூடிய கற்பனை யாது? மகத்தான மனம் ஒன்று இருக்கவேண்டும், அது இயற்கை என்று நாம் சொல்கிறதல்ல, இயற்கையையும் கடந்தது என்று சொல்லவேண்டிய தாகிறது. ஆகையால், எல்லாவற்றிற்கும் பரமாயுள்ள தொன்றைச் சுட்டிக் காட்டவேண்டியே இருக்கிறது. இயற்கையைக் கடந்த தொரு மனத்தின் உதவியில்லாமல், இயற்கைக்கு நாம் பொருள் கூறமுடியாது, இயற்கையில் நடக்கும் காரியங்களுக்குச் சமாதானம் சொல்ல முடியாது. இயற்கையைக் கடந்த மனமென்பதே கடவுள். அந்த மனத்தில் எழுந்தவைகளே அநாதியாயும் அனந்தமாயுள்ள உருவங்கள்.

தெய்வம் உளதென்று சாதிக்க மூன்றாவது வாதம் புத்தி பூர்வக நியாயம் (Teleological argument) எனப்படும். பிரபஞ்சத்தில் ஒவ்வொரு காரியமும் ஒவ்வோர் உத்தேசத்தோடே நடைபெறுகிற தென்று நமக்கு வெளிப்படையாகத் தெரிகிறது. பிரபஞ்சமானது அவியவஸ்தையிலிருந்து வியவஸ்தைக்கு வந்துகொண்டிருக்கிறது. ஒழுங்கீனமா

யிருந்து ஒழுங்குக்கு வந்துகொண் டிருக்கிறது. மேலும் மேலும் உயர்தரமானதை உண்டாக்கும் நோக்கம் பிரபஞ்சத்தில் காண்கின்றது. உயர் தரமான ஜீவராசிகளும் அனுபவ முதிர்ச்சியும் மேலும் மேலும் உண்டாகின்றன. உதாரணமாக, ஆதியில் புழுவடிவமாயுள்ள ஜீவாணுவானது படிப் படியாக அனுபவம் முதிர்ந்து, மேலும் மேலும் பெரிய ஜந்துவாகிக் கடைசியில் மனித வடிவமும் புத்தி சாமர்த்தியமும் பெற்றுள்ளதைப் பார். இந்த திருஷ்டாந்தங்களைக் கொண்டு பார்த்தால், இவ்வளவு படிக் கிரமத்தையும் ஒழுங்கையும் அமைத்து நடத்து வதற்கு எல்லாவற்றிற்கும் பரமாயுள்ள ஒரு மூலம் இருக்கவேண்டு மென்றும், அந்த மூலமானது இத் தனை காரியங்களைச் செய்வதற்கு ஓர் உத்தேசமும், அந்த உத்தேசத்தைச் சாதிப்பதற்குத் தகுந்த புத்தி சாமர்த்தியாதிகளும் இருக்க வேண்டுமென்று தெரி கிறதல்லாவா? அந்த மஹத்புத்தியே கடவுள் என வழங்குகிறோம்.

ரங்கராஜு — ஒன்றிலிருந்து மற்றொரு வஸ்து பரிணாமத்தினால் ஏற்பட்டு உலகம் முழுதும் அமைந் திருக்கின்றது. பரிணாமமாவது ஒரு வஸ்துவின் அபி விர்த்தி அல்லது விகாஸம். இதுவே பிரபஞ்சத்திற் குக் காரணமென்று பௌதிக சாஸ்திர விற்பன்னர் கள் வெகுகாலம் ஆராய்ந்து தெளிந்து ஸித்தாந்தப் படுத்தியிருக்க, உலகமானது ஒருவரால் சிருஷ்டிக்கப் பட்டதென்று நீங்கள் சொல்வது பொருந்துமோ?

ஆனந்தசுவாமி — உலகமானது யந்திரத்தைப் போல் தனக்குத்தானே விகஸித்து அபிவிர்த்தியாகி இருக்கின்றது (Mechanical Evolution) என்னும் கொள்கை நெடுநாளைக்கு முன்னரே நிராகரிக்கப் பட்டுப்போயிற்று. அந்தக்கொள்கையை இப்பொழு தும் எவரும் ஏற்பதில்லை. வஸ்து பரிணாமத்தில் நம் முடைய அறிவுக்கு எட்டாததொன்று கலந்திருக்கிற தென்பதை ஜனங்கள் உணரத் தொடங்கியிருக்கிறார் கள். அந்த மறைபொருளான வஸ்துவே ஊர்வன இனத்து ஜந்துவைப் பறக்கும் பறவையாக்கிப் பின்னர் நடக்கும் மிருகமாக்கியது ; குரங்கு இனத்தி லுதித்த பிராணியை அதற்கு முற்றும் மாறான மனிதனாக்கியது. இந்தக் காரணங்களினாலே பௌதிக சாஸ்திரிகள் "ஆகஸ்மிக விகஸனம்" (Emergent Evolution) என்னும் பதமொன்றைக் கற்பனை செய்திருக் கிறார்கள். இது சாஸ்திரச் சொற்புரட்டே யல்லாமல் வேறன்று. அறிவுக்கெட்டாத தொன்று சிருஷ்டிக் கப்பெற்று வஸ்து பரிணாமக்கிரமத்தில் சேர்க்கப்பட் டுளது என்பதை மறைபொருளாகக் கூறுவதற்கு அவர்கள் இந்தப் பதத்தைக் கற்பித்திருக்கிறார்கள்.

கடவுள் ஒருவர் உண்டு என்று நிரூபிப்பதற் குள்ள நான்காம் வாதம் ஆசார நீதியாகும் (Moral Argument). குற்றவாளி யுள்பட எல்லா மனிதர்க ளுக்கும் ஆசாரநீதி என்பதொன்று இருக்கின்றது. தெரிந்தோ தெரியாமலோ அவர்கள் எல்லாரும் ஒருவிதமான நீதியை அனுசரித்து நடக்கிறார்கள்.

தர்மமென்று அவர்கள் நினைத்துக்கொண் டிருக்கிற தொன்றைச் செய்யவேண்டியது தங்களுடைய கடமை யென அவர்கள் நினைக்கிறார்கள். எவ்விதத்திலும் எந்தப் பாடு பட்டும் அதைத் தவிர்க்காமல் நிறை வேற்ற வேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். தர்மம், கடமை, ஆசாரம், நீதி என்னும் நியம மொன்று வைத்துக்கொண்டு எல்லாரும் அதை அனு சரிக்கிறார்கள். இப்படிப்பட்ட கடமைக்குச் சூக்ஷ்ம மான ஆதாரமாகக் கடவுள் இருக்கிறா ரென்பது இதனால் தெரிகிறது. அந்தக் கடமையை மீறினால் அவருக்கு அதிருப்தி உண்டாகுமென்னும் எண் ணமோ, அவர் தண்டிப்பார் என்னும் எண்ணமோ இருப்பதனாலே அவர்கள் அந்தக் காரியத்தைச் சிரத்தையோடு செய்கிறார்கள்.

அதுநிற்க, சாதுக்களும் முனிவர்களும் ஞானி களும் ஒருவிதமான தர்ம மார்க்கத்தை, நீதி நிய மத்தை அனுசரிக்கவேண்டுமென்று இரவும் பகலும் இடைவிடாமல் முயன்றுகொண் டிருக்கிறார்கள். அந்த முயற்சி யெல்லாம் ஏதோ ஒரு நற்பயனைக் கருதியே இருக்கவேண்டும். அந்த நற்பயன் என் பது நியாயமானதாகவும், மனிதருடைய புத்திக்கும் யுக்திக்கும் ஒவ்வினதாகவும் இருக்க வேண்டும். ஏனெனின், அந்த முயற்சி செய்கிறவர்கள் மானிட ருள் சிறந்த விவேகமும் பரிபக்குவமும் அனுபவமும் வாய்ந்தவர்களே யல்லாமல், சாமானியமான பாமர ஜனங்களல்ல. இவர்கள் நாடுகிற பெரும்பேறு கண் ணுக்குத் தெரியாத சாசுவதமான நிலையிலேயே

யல்லாமல், இந்த உலகத்திலேயே பின்னெரு காலத்தில் அடையத்தக்கதல்ல. ஏனெனின், அந்தப் பேறு இந்த உலகத்தில் அடையத்தக்கதைக் காட்டிலும் மிக உயர்தரமானது. ஆதலால், தர்மநீதி ஆசாரமான முயற்சி அவசியமானதென்றும் யுக்திக்கும் புத்திக்கும் ஒத்ததென்று ஏற்படுவதனல், இப்பொழுது நாம் காணத்தக்க உலகத்து ஒழுங்கைக் கடந்து எல்லா விதத்திலும் பரிபூர்ணமாயுள்ள பரமநிலை யொன்று இருக்கிறதென நாம் கொள்ளவேண்டிய தாகின்றது. அப்படிப்பட்ட நிலை என்பது ஆகாசத்திலுள்ளதோர் இராஜ்யமாயிருப்பினும் அல்லது நகரமாயிருப்பினும் சரியே. அது வைகுண்டமாயினும் கைலாசமாயினும் சுவர்க்கமாயினும் சரியே.

ஐந்தாம் வாதம் யாதெனின், இயற்கையில் காணப்படுகிற அழகும் ஒற்றுமையும் தெய்விகமான சித்திரகாரன் அல்லது கவிவாணன் வர்ணித்ததென்றே சொல்லவேண்டும். அப்படிப்பட்ட சித்திரகாரன் அல்லது கவிவாணனே கடவுள்.

கடைசியான ஆரும் வாதம் யாதெனின், உலகத்தில் தோன்றிய மிக்க பிரபலமும் பெருந்தன்மையும் வாய்ந்தவர்கள், தீர்க்கதரிசிகள், ஞானிகள், முனிவர்கள் முதலானவர்களுடைய அத்தாட்சியேயாகும். அதுவல்லாமல் உலகத்தில் மிக வியாபகமாயுமுள்ள பெரிய மதங்களை ஸ்தாபித்த ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர், முகம்மது, ஜோரோ ஆஸ்டர், மோசஸ், இயேசு கிறிஸ்து, பின்னர் இக்காலத்தில்

தோன்றிய ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆகிய இவர்களுடைய அத்தாட்சியைக் கொண்டும் கடவுள் இருக்கிறாரென்று நாம் தெரிந்துகொள்ள வேண்டியதாகும். கடவுள் இருக்கிறார், அவரை நாங்கள் பிரத்தியக்ஷமாகக் கண்டு தெரிந்திருக்கிறோம் என்று இவர்களெல்லாரும் ஒரேகுரலாக உறுதி கூறுகிறார்கள். இவர்களுடைய வார்த்தையை நாம் நம்பாதிருக்க முடியுமா ?

ஆனால், எவ்வளவு சொன்னாலும் செய்தாலும் கடவுள் இருக்கிறாரென்று புத்தி வாதத்தினால் மாத்திரமே, ஆக்ஷேபனைக்கு இடமில்லாமல், முற்றும் நிரூபிக்க முடியாது. ஆஸ்திகம் என்பது அழியாத திடமான நம்பிக்கையைப் பொறுத்தது. இந்த விஷயத்தில் முடிவான வார்த்தை "நான் நம்புகிறேன்," "எனது மதம்" என்பதேயாம். புத்தி வாதங்களெல்லாம் அப்படிப்பட்ட நம்பிக்கை அஸங்கதமானதன்று, யுக்திக்கு ஒவ்வாததன்று, அநுபவத்திற்கு மாறானதன்று என்று மாத்திரமே காட்டும். ஒரு குளத்தில் அநேக அன்னப் பறவைகள் இருக்கின்றன. அவைகளிற் சில அந்தக் குளத்தை விட்டு நீங்கிப் போகின்றன. முரட்டுத் தன்மையுள்ள ஓர் அன்னம் மாத்திரம் குளத்தை விட்டு அகலேனெனப் பிடிவாதமாகத் தங்கி யிருக்கின்றது. திடமான ஆஸ்திகன் அந்த முரட்டு அன்னத்தைப் போன்றவனாவன். விஸ்தாரமான நீர்த்திரளிற் படிந்துள்ள சூரிய வெப்பத்தை அந்த நீர்த்

திரள் தணிக்க முடியாதிருப்பதுபோல, தெய்வம் உளதென்னும் நம்பிக்கையானது ஆஸ்திகனுடைய மனத்தைவிட்டு நீங்காதிருக்கின்றது. இந்த பக்தியின் பலத்தைக்கொண்டு அவன் சிறிதும் அச்சமின்றி மரணாவஸ்தையைக் கடந்து மேற் செல்லுகிறான். கடவுளுக்கு மேலதிகாரி எவனும் இல்லையென்றும், அவரே ஸ்வதந்திர யஜமானரென்றும், அவர் மனம் வந்தவாறு செய்ய வல்லவரென்றும் ஆஸ்திகனுக்குத் தெரியும். சிலந்திப் பூச்சியைப் போலக் கடவுள் தமது உடலினின்று வெளிவந்த நூல்களினால் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தும் தாம் சிறிதும் லோபமில்லாமல் அகண்டமாக, முழுமையாக இருக்கிறாரென்றும், அவரிடத்திருந்து பிரபஞ்சம் தோன்றியதாயினும் இந்தப் பிரபஞ்சத்திற்கு அவர் பரமாக இருக்கிறாரென்றும் ஆஸ்திகனுக்குத் தெரியும். கடவுள் விபுத்தன்மையில் பல்லாயிரம் உருவமும் முகமும் உடையவராயினும், பரமோத்தமத் தன்மையில் உருவமே இல்லாதவரென்றும் ஆஸ்திகனுக்குத் தெரியும். மனிதருக்கு உள்ளது போன்ற குணாதிசயங்கள் கடவுளுக்கு இல்லை; அவர் அணுவினும் அணுவா யிருக்கின்றார், மகத்தினும் மகத்தாயிருக்கின்றார்; குப்பையின்மீது பிரகாசிப்பதனால் சூரியனுக்கு மாசு ஒட்டாததுபோல, எந்த உருவமும் அவருக்கு ஒட்டுவதில்லை. ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்துள்ளும் அவர் இருக்கின்றாராயினும், பெரும்பாலார் அவரைத் தெரிந்து கொள்வதில்லை. அது எப்படிப்போல என்னின்,

நாள்தோறும் தான் மிதித்து நடந்து உழலுகிற நிலத்தின் கீழ் நிதி இருக்கிறதென்பதை உழவன் உணராதது போலாகும்; அந்தக் கடவுளை அடைவதற்குப் பெரிய அகாத மொன்றைக் கடக்க வேண்டும். அகாதத்தைக் கடப்பதற்கு ஒரு பாலம் உண்டு. அது மயிர்ப்பாலம் எனத்தகும். அதாவது, அதன் அகலம் மயிரிழையளவே ஆகும். கடவுள் இருக்கிறாரென்பதைப் புத்தி வாதத்தினால் நிரூபிக்க முடியாது; அவரவரும் தமக்குத் தாமே அனுபவித்தறிய வேண்டும். அப்படிப்பட்ட சுவானுபவம் நேர்ந்த காலத்தில், நீரோடு நீர், வாயுவோடு வாயு, நெருப்போடு நெருப்பு கலப்பதுபோல, மனிதன் கடவுளோடு ஒன்றித்து லயமாகிறான். ஒவ்வொரு மதமும் கடவுளை ஒவ்வொருவிதமாகப் பாவிக்கின்றது. அந்தப் பாவனை குற்றமற்றதென்றே சொல்வதற்கில்லை. ஆனபோதிலும், கடவுளினிடத்து ஒருவிதமான குற்றமும் குறையும் இல்லை. எதுபோலவெனின், ரேகா கணிதத்தில் பிந்து அல்லது புள்ளி என்று கணக்கிட்டு வழங்குகிறோம். உண்மையில் அப்படிப்பட்ட புள்ளி ஆகாசத்தில் இல்லை. ஆயினும், அந்த பிந்துவைக் குறிப்பதற்கு காகிதத்தின்மீது ஒரு புள்ளி இடுவோமானால், அதற்காகக் கொஞ்சம் இடம் வேண்டியே இருக்கிறது. அப்படி இடத்தை அடைக்காமல் பிந்துவை எவனும் காட்ட முடியாது.

ரங்கராஜு—நான் கேட்கிறேனென்று கோபித்துக் கொள்ளக்கூடாது: ஆனால், கடவுளை நீங்கள் சுவானுபவத்திற் கண்டதுண்டோ?

ஆனந்தசுவாமி — நான் கண்டதில்லை என்றால் என்ன ?

ரங்கராஜு — அப்படியாயின் கடவுளைப் பற்றி நீங்கள் எனக்குப் போதிக்கலாகுமோ ?

ஆனந்தசுவாமி — பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸர் சொல்லியதுபோல, துடைப்பம் அழுக்கா யிருக்கலாம்; ஆயினும், அது அழுக்கான இடத்தைச் சுத்தமாக்க வல்லது.

ரங்கராஜு — கடவுள் இருக்கிறார் என்பதற்கும், ஆத்மா ஒன்று உளதென்பதற்கும் பௌதிக சாஸ்திரிகள் எவரும் எவ்விதமான ருஜுவும் கண்டு பிடிக்கவில்லை.

ஆனந்தசுவாமி— அப்படிச் சொல்வதனால் என்ன ருஜுவாயிற்று ? அவர்கள் ருஜுப்படுத்தியது ஒன்றுமே இல்லை. பிராணன் என்பதொன்று இருக்கின்றதே, அதை அவர்கள் தனியே பிரித்துப் பார்த்திருக்கிறார்களா ? மானிட சரீரமானது ரஸாயன ஸங்கட்டனத்தினால் (Chemical Composition) அமைந்துளது. அந்த ரஸாயன ஸங்கட்டனத்தைப் பௌதிக சாஸ்திரிகள், பிராணன் போவதற்கு அரை விநாடி முன்னர் பார்த்தாலும், பிராணன் போனபின்னர் அரைவிநாடியில் பார்த்தாலும் அதில் அவர்களுக்கு வித்தியாஸம் இல்லை. அப்படி யிருந்தபோதிலும், எந்த பௌதிக சாஸ்திரியேனும் தன் காதலியான மனைவியாவது, அருமையான புத்திரனாவது இறந்து போனால் சரீரத்து ரஸாயன ஸங்கட்டனத்தில்

வித்தியாசம் இல்லை என்பதைக் கொண்டு மனதை ஆறுதல் படுத்திக்கொள்வனு? அந்தப் பிணத்தைப் பார்த்து உயிரோடுள்ள தன் மனைவியென்றேனும் மகனென்றேனும் ஒருபோதும் பாவித்துக் கொண்டிருக்க மாட்டான். பௌதிக சாஸ்திரப் பேய்கள் தெரிந்திருப்பதைக் காட்டிலும் அதிகமான விஷயங்கள் எத்தனையோ மண்ணிலும் விண்ணிலும் இருக்கின்றன.

ரங்கராஜு — அறிவைப் பரவச் செய்ய வேண்டாமென்பது உங்கள் மதமா? பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியினுல் மனிதருக்கு எத்தனையோ விஷயங்கள் தெரிகின்றனவே. அந்த ஆராய்ச்சியும் அறிவும் வேண்டாமென்கிறீர்களா?

ஆனந்தசுவாமி — அறிவை வளர்க்கவேண்டாமென்று நான் சொல்லவேயில்லை. ஆஸ்திகன் எவனும் அப்படிச் சொல்லவும் மாட்டான். 'இவ்வுலகில் ஞானத்தைப்போலப் பரிசுத்தம் செய்யத்தக்கது வேறென்றில்லை' என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் சொல்லியிருக்கிறுர். சீன தேசத்துக்குப் போயாயினும் ஞானம் சம்பாதித்துக் கொள்ளுங்கள் என்று முகம்மது நபி முஸ்லீம்களுக்குப் போதித்திருக்கிறுர். சரியான ஞானம் பரமோத்கிருஷ்டமானதென்று கௌதம புத்தர் வற்புறுத்தி யிருக்கிறுர். இயேசு கிறிஸ்து நாதர் தம் சீடர்களை நோக்கி, 'நீங்களெல்லாரும் தெய்வங்கள்' என்று சொல்லி, உங்களை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள் என உபதேசித்

திருக்கிறார். வாழ்க்கையின் இடையில் சாவு நடமாடுகின்றது. மனிதர் ஒவ்வொருவனுக்கும் நிச்சயமாக நேரக்கூடியது மரணமே. இந்த உண்மையைத் தெரிந்துகொள்ளாததனாலே லக்ஷக்கணக்கான ஜனங்கள் நாஸ்திகரா யிருக்கின்றார்கள். ஆஸ்திகர்களுள்ளும் நிஜமான ஞானமில்லாதவர்கள் எத்தனையோ லக்ஷம் ஜனங்கள் உண்டு. அன்றியும், அறிவு மிக்க ஆஸ்திகர்களுள்ளும் பலர் குறுகிய மனமுடையவராய்த் தம் கொள்கையே உயர்வென மதித்து மற்ற மதத்தவர்களைத் தம் மதத்தை ஏற்கும்படி திருத்தவும் விரும்புகிறார்கள்; அவசியமானால், கத்தியைக் காட்டி அச்சுறுத்தியேனும் பிற மதத்தவர்களைத், தம் மதத்திற்குக் கொண்டுவர முயலுகிறார்கள். ஆனால், இதைக் காட்டிலும் அஸங்கதமானது வேறொன்றுமில்லை.

ரங்கராஜு — ஏன்?

ஆனந்தசுவாமி — கடவுள் சர்வ வல்லமையுள்ளவர், சர்வ ஞானமுள்ளவர், சர்வ வியாபி என்று அவர்களெல்லாரும் ஒத்துக்கொள்கிறார்கள். அவர் எங்குமிருக்கிறார், எல்லாம் தெரிந்திருக்கிறார், எதையும் நினைத்த மாத்திரத்தில் செய்யக்கூடியவரா யிருக்கிறார். அப்படியானால், நினைத்த மாத்திரத்தில் அவர் மனிதர்களெல்லாரையும் கிறிஸ்து மதத்திற்காவது இஸ்லாம் மதத்திற்காவது, இந்து மதத்திற்காவது திருப்பிவிட முடியுமல்லவா? அவர் ஏன் அப்படிச் செய்யாமலிருக்கிறார்? பல பல மதானுசாரி

கள் உலகத்தில் செழிக்கும்படி அவர் ஏன் விட்டிருக்கிறார்? அவர் இப்படி விட்டிருப்பதனால், பல மதங்களும் வழங்கப்பெறுவது அவருக்கு இஷ்டமாயிருக்கிற தென்பது தெரிகிறதல்லவா? மதம் என்னும் ரத்ன கம்பளமானது மங்கலான ஒரே வர்ணமாக இருக்கக்கூடாது, பல வர்ணங்களோடு பிரகாசித்து இனிமைதரவேண்டும் என்பதே கடவுளுடைய கருத்து என்று வெளியாகின்றதல்லவா? அப்படியிருக்க, அவருக்கு அடிமைகளென்று சொல்லிக் கொண்டு வியவகரிக்கிறவர்கள் தங்கள் கடவுளைக் காட்டிலும் தாங்கள் புத்திசாலிகளென நினைத்து, கடவுளுடைய அமிதப் பொறுமையை அவமாக்க முயலுவானேன்?

ரங்கராஜு — அப்படியானால், உலகத்திலுள்ள பெரிய மதங்கள் ஒன்றுக்கொன்று உண்மையில் முரண்பாடுள்ளவை யல்லவென நினைக்கிறீர்களா?

ஆனந்தசுவாமி — ஒன்றுக்கொன்று கொஞ்சங் கூட முரண்பாடே இல்லை. ஸ்ரீகிருஷ்ணன், இயேசு கிறிஸ்து, கௌதம புத்தர், கன்பியூஷியஸ், ஜோராஆஸ்டர், மோசஸ், முகம்மது நபி ஆகிய இவர்களெல்லாரும் சந்திக்க நேர்ந்தால், இவர்கள் ஒருவருக் கொருவர் சகோதரர்களாகத் தழுவி ஆலிங்கனம் செய்துகொண்டு அவரவரது கொள்கையையும் விநயமாகவும் சந்தோஷமாகவும் கேட்டுக் களிப்பார்கள். ஆனால் அந்தோ! அவர்கள் சந்திப்பதில்லை, அவர்களுடைய சீடர்களென்று சொல்லிக்

கொள்பவர்களே சந்திக்கிருர்கள். அதனுல், உண்மையான ஞானம் வெளிப்படாமல், தீராப் போரும் தணியாத்தாபமும் விளைகின்றன.

ரங்கராஜு — அப்படியானுல், ஒருவன் தன்னுடைய மதத்தின் மீது விசேஷ அபிமானம் வைக்காமல், எல்லா மதங்களையும் ஒரே மாதிரியாக அபிமானிக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களா?

ஆனந்தசுவாமி — இல்லை, சாமானிய லௌகிகன் பிற மதங்களைக் காட்டிலும் தன் மதத்தை அதிகமாகப் பாராட்டுவது ஞாயமே. எதுபோலவெனின், மற்ற ஸ்திரீகளைக் காட்டிலும் அழகிலும் குணத்திலும் மிகக் குறைவாயிருக்கிற தன் தாயாரை மற்றவர்களைக் காட்டினும் அதிகமாகப் பாராட்டவேண்டியது தர்மமேயல்லவா? ஆயினும், தாயாரிடத்துள்ள அபிமானத்தினுல் பிறருடைய தாய்மார்களின் விஷயத்தில் இவன் மரியாதையும் கௌரவமும் பாராட்டுவது பொருந்தாதோ? அதுபோல, அவன் பிற மதங்களெல்லாவற்றையும் நன்மதிக்கவேண்டும். எல்லா மதங்களினிடத்தும் ஒரேமாதிரியாக அன்பு பாராட்ட வேண்டுமென்று சொல்வது எளிது, செய்வது அரிது. அப்படிச் சொல்வதனுல், சாமானிய லௌகிகனுக்கு எம் மதத்திலும் அன்பில்லாமற் போகும். மத சம்பந்தமான விஷய மென்ருலே கடு வெறுப்பு உண்டாகும். பிளேடோ என்னும் யவன தேசத்துத் தத்துவ ஞானி ஸ்திரீகளை எல்லா மனிதர்களுக்கும் பொதுவாக்கவேண்டுமென்றும், எல்லாப் பிள்ளைகளை

யும் எல்லாருக்கும் பிள்ளைகளாக மதிக்கவேண்டு மென்றும் ஓர் ஆலோசனை சொல்லியதும், அதன் மீது அரிஸ்டாட்டில் என்னும் மற்றொரு ஞானி பிள்ளைகளைப் புத்திரர்களென்று சொல்வதற்குப் பதிலாக, தூரத்து ஞாதி என்று சொல்லவேண்டிவரும் என்றதும் கேட்டிருக்கிறு யல்லவா? அதுபோல, சாமானிய லௌகிகன் பல பட்டரை மதங்களின் தொகுதியைச் சேர்ந்தவனென்று சொல்வதை விட இந்து என்றேனும், முஸ்லீம் என்றேனும், கிறிஸ்தவன் என்றேனும், பௌத்தன் என்றேனும், வேறு மதத்தினன் என்றேனும் சொல்லிக்கொள்வது நலம். இது இப்படியாக, மனப்பயிற்சி மிக்க துறவியோ வெனின், அவன் எல்லா மதங்களின் விஷயத்திலும் ஒரே மாதிரியாக அபிமானம் காட்டவல்லான்.

ரங்கராஜு — இந்து லௌகிகர்கள் இந்துக்களல்லாதவர்களோடு விவாக சம்பந்தம் வைத்துக் கொள்ளா திருப்பதும், பிற மதம் தழுவிய குடும்பத்தவ னொருவன் ஸ்வமதத்திலேயே இருக்கப்பட்ட நெருங்கிய உறவினர்களோடு ஏக குடும்பமாக வாழக் கூடாதென்பதும் நியாயமே என நினைக்கின்றீர்களோ?

ஆனந்தசுவாமி — ஆம், அவர்கள் பலாத்கார முறைகளை மேற்கொள்ளா திருந்தால் மாத்திரமே அது நியாயமாகும். அப்போது அது வெறும் தற்காப்புச் சாதனமேயன்றி, வேறாகாது — தத்தம் உணவு, ஒழுக்கம், ஆசாரம், பயிற்சி ஆகிய இவை

களை அவரவரும் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதே அல்லவா? அந்தந்த மதத்திற்கும் அந்தந்த ஜன சமூகத்திற்கும் ஆசாரவியவகாரங்கள் வேறு வேருக இருக்கின்றனவாதலால், அவரவரும் பிரிந்திருப்பதே நலம். தேங்காய் எண்ணெய் நல்லதே, எள் எண்ணெயும் நல்லதே; இரண்டையும் கலந்தால் இரண்டின் குணமும் கெட்டுப் போகின்றது. அதுபோலவே, இந்து மதத்தையும் இஸ்லாம் மதத்தையும் அல்லது வேறு எம் மதத்தையும் ஒன்ருகப் பிணைக்கக் கூடாது. முஸ்லீம் ஸ்திரீகள் முஸ்லீம் அல்லாத காபிரிகளை மணந்து கொள்ளக் கூடாதென்று அவர்களுடைய வேதமாகிய குர்ஆன் விதித்திருக்கின்றது. கிறிஸ்தவ ஸ்திரீகள் முழுமனத்தோடு கிறிஸ்தவர்களல்லாதவர்களை மணந்து கொள்ள விடுவதில்லை. இந்துக்கள் மாத்திரமே இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் செய்கிருர்களென்று நினைக்க வேண்டாம். சில சமயங்களில் ஆழத்தைக் குறுக்கி அகலத்தை அதிகரிக்கலாம்; ஆயினும், தரைமீது ஓடிவருகிற எல்லா ஜலங்களையும் ஏந்திக்கொள்கிற ஆழமில்லாத குட்டைநீரைக் குடிப்பதைக் காட்டிலும், ஆழமான கிணற்று நீரைக் குடிப்பதே உத்தமமென்பதையும் மறவாதே. பிற மதத்தவர்களோடு பரஸ்பர விவாக சம்பந்தம் வைத்துக்கொள்ளாததனுல் பிற மதத்தவர்களை இழிவுபடுத்தியதுபோலாகாது. ஒரு கன்னிகை ஒரு புருஷனை வரித்து அவனை மணந்துகொள்வதனுல், மற்ற புருஷர்களெல்லாரையும் அவள் இகழ்ந்ததுபோலாகுமோ?

ரங்கராஜு — கேவலப்பிரம்மமே தெய்வமா, அல்லது, வியக்தீசுவரனே தெய்வமா? நிர்க்குணப் பிரம்ம உபாசனையே சரியென்று நினைக்கிறீர்களா? சகுணப் பிரம்மோபாசனையே சரியென்று நினைக்கிறீர்களா? விக்கிரக ஆராதனை குணக்குறைவானதே யல்லவா?

ஆனந்தசுவாமி—எல்லாம் ஒவ்வொரு படித்தரமான உண்மையே, அவனவன் தன்னுடைய ஆத்ம பரிபக்குவத்திற் கேற்ற படித்தரத்தைத் தெரிந்து கைக்கொள்ள வேண்டும். சிறு குழந்தையும், மனப் பயிற்சி மிகும் பருவத்திலுள்ள இளைஞனும் குணங் குறிகளில்லாத பரம வஸ்துவை மனத்தடத்தில் பாவனை செய்ய முடியாது. பரப் பிரம்மத்தைப் பற்றி அவர்களுக்குப் பெரிய பிரசங்கம் செய்வதனால் பயனில்லை, அப்படிப்பட்டவர்களுக்கு விக்கிரகங்களைக் காட்டி அவையே தெய்வம், சத்தியம் ஞானம் அனந்தம் கருணை ஆனந்தம் எங்கும் நிறைந்த தன்மை ஆகிய அனைத்தும் விக்கிரகமாகிய தெய்வத்தினிடத்துப் பொருந்தியுள்ளன என்று அவர்களுக்குச் சொல்வது மிக்க நன்மை தரும். மனம் சற்று முதிர்ந்த பின், விக்கிரகங்களே தெய்வமல்ல, அவை தெய்வத்தின் அறிகுறி, மனம் ஒரு நிலைப்படுவதற்கு அவைகள் சாதனங்களாகும் என்று அவர்களுக்குச் சொல்லலாம். அதற்குமேல் மனம் அதிக முதிர்ச்சி அடைந்தபின், கடவுள் எங்கும் இருக்கிறார், ஆலயங்களில் மாத்திரமல்ல, அவர்

சர்வ சக்தியுள்ளவர், எல்லாம் உணர்ந்தவர், எங்கும் நிறைந்தவர், ஆலயங்களிலுள்ள தெய்வ விக்கிரகங்களெல்லாம் அந்தக் கடவுளின் பற்பல வடிவத்திற்கு அறிகுறியாகும், அந்தக் கடவுளே தந்தையும் தாயும் மனைவியும் மக்களும் எல்லாமுமாவர், அவர் எல்லாம் கடந்த பரம் பொருளாயிருந்தும் எல்லாவற்றிலும் அந்தர்க்கதமாக அமைந்திருப்பதன்றி வெளிவந்து கொண்டும் இருக்கிறார் — எனப் போதிக்கலாம். முடிவில், அவர்களுடைய மனப்பயிற்சி மேலு மதிகமாகித் தேர்ந்தபின், அந்தக் கடவுள் கேவலம் பரம் பொருள், மானிடர் வழங்குகிற குணங் குறிகள் அவருக்கு இல்லை என்று உபதேசிக்கலாம். இந்தப் போதனைக் கிரமமானது பூ விவர சாஸ்திரத்தைக் குழந்தைகளுக்குப் படிப்படியாகக் கற்பிப்பது போன்றதாகும். அதாவது, பூமி உருண்டையாக இருக்கிறதென முதலிற் போதித்துப் பின்பு, அந்த உருண்டை வடிவம் மாறி அண்ட வடிவமாவது இரண்டு பாரிசங்களிலுள்ள துருவம் அல்லது கேந்தரங்களில் ஏற்படுகிற மாறுபாடு என்று முதலாகப் படிப்படியாகக் கற்பிப்பது போலவாகும்.

ரங்கராஜு—கடவுள் உண்மையில் பரிபூர்ணராக இருந்தால், அபூர்ணமான இந்தப் பிரபஞ்சத்தை ஏன் படைத்தார்?

ஆனந்தசுவாமி—பிரபஞ்சத்தில் திருத்தம் செய்து விட்டோமென்று சொல்லக்கூடிய மாறுமாடு எதுவும் தமக்குத் தோன்றவில்லையென புத்திசாலிகள் பலரும்

அமைதியான வேளையில் ஆராய்ந்து தெளிந்திருக்கிறார்கள்.

ரங்கராஜு — பாம்பு தேள் எலி பெருச்சாளி என்னும் இவைகளைக் கடவுள் ஏன் படைத்தார்? அவைகளினால் என்ன பிரயோசனம்?

ஆனந்தசுவாமி — அவைகளினால் மனிதனுக்குப் பிரயோஜன மில்லாதிருக்கலாம். ஆனால், உலகம் மனிதனுக்காக மாத்திரமே படைக்கப்படவில்லை. இந்தப் பிராணிகளெல்லாம தம் மட்டில் உபயோக மானவைகளே; உயர்நோக்கம் ஒன்று உளதென் பதற்கு இவை பிரத்தியக்ஷ சாக்ஷிகளாகும்.

ரங்கராஜு — இப்படிப்பட்ட கோர வடிவங்களைப் படிப்படியாக உண்டாக்கிப் பின்பு, உயர்படைப்பாகிய மனிதனை ஆக்குவதைக் காட்டிலும் ஒரே தடவையில் மனிதனை ஏன் கடவுள் படைக்கவில்லை?

ஆனந்தசுவாமி — ஏனெனில், கடவுள் தமது லீலையில் அங்ஙனம் சங்கற்பித்தார்; அன்றி, படைப்பில் மனிதன் தன்னுடைய நிலைமையை உணரும் பொருட்டும் அங்ஙனம் செய்தார். பிரபஞ்சத்தில் மனிதனே உத்தமமான படைப்பன்று. மனிதனைக் காட்டிலும் அதிக பரிபூர்ணமான முனிவர்களும் சாதுக்களும் தேவர்களும் ஸித்தர்களும் உளர். பாம்பு தேள் எலி பெருச்சாளி என்னும் இவைகளை ஏன் படைத்தாரென்று நீ கேட்பதுபோல, மனிதனை ஏன் படைத்தாரென்று அவர்கள் கேட்கலாமே.

ஆனால், அவர்கள் அப்படிக் கேட்பதில்லை, எனெனில் அவர்களுக்கு விஷயம் தெரியும். அதுநிற்க, பாம்பு தேள் எலி பெருச்சாளி புலி 'சிறுத்தை நரி புனுகுப் பூனை மரநாய் நாய் கழுதை இன்னும் உலகத்திலுள்ள எல்லாப் பிராணிகளின் தன்மை வாய்ந்த மனிதர்கள் இப்பொழுதும் இருக்கிறார்கள். அவர்களை உள்ளபடி தெரிந்துகொள்ள வேண்டுமானால், அந்தந்தப் பிராணியைப் பார்த்தே நாம் உணரவேண்டும். அந்தப் பிராணிகள் படைப்பில் முன் தோன்றியவைகள்.

ரங்கராஜு—கடவுள் சர்வசக்தி உள்ளவரானால், மதவிரோதிகள் அவருடைய ஆலயங்களை யழிப்பதற்கு ஏன் இடங் கொடுத்தார்?

ஆனந்தசுவாமி—கல்கத்தாவிலுள்ள காளியின் கோயிலை முகம்மதியர் இடித்துத் தகர்த்து விட்டார்களே யென்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் துக்கப்பட்டுக்கொண் டிருக்கையில், காளி அவருடைய கனவில் தோன்றி, கடவுள் தமது மக்களிற் சிலர் தமக்கு ஆலயங்கள் அமைப்பதைக் கண்டு சந்தோஷிப்பது போல, வேறு சில மக்கள் அவ்வாலயங்களை அழிப்பதைக் கண்டும் சந்தோஷிக்கிறார் என்று அவருக்குச் சொன்னாள். அது எப்படிப் போலவெனின், மின்சாரம் ஒளி தரும்படியாகச் சிலர் அதன் கீல்கம்பியைத் தட்டுகிறார்கள்; வேறு சிலர் அப்படியே அணைப்பதற்கு அந்தக் கீல்கம்பியைத் திருப்பித் தட்டுகிறார்கள். இவ்விரண்டையும் கண்டு

மின்சாரம் சந்தோஷிப்பதுமில்லை, துக்கிப்பதுமில்லை. இவ் விருவகைக் காரியங்களினுலும் பாதிக்கப் பெருமல் மின்சாரம் அவ்விரண்டு செயல்களையும் ஒரே மாதிரியாகப் பார்த்துக் கொண்டு இருப்பது போலவாகும். மின்சார தீபங்கள் மின்சாரத்துக்கு ஏற்பட்டிருப்பது போல, தேவாலயங்களும் கடவுளுடைய வியக்திகரணத்திற்கு மாத்திரமே ஏற்பட்டிருக்கின்றன. தீபங்கள் இல்லாவிடினும் மின்சாரம் இருப்பது போல, ஆலயங்களில்லாவிடினும் கடவுள் இருக்கின்ருர்.

ரங்கராஜு—கடவுள் அன்பே உருவாகக் கொண்டவரென்று சிலர் சொல்லுகிருர்களே? உண்மையில் அவர் அன்பு வடிவமேயானல், பச்சைக் குழந்தைகள் இறந்து போகும்படி அவர் ஏன் விடுகிருர்?

ஆனந்தசுவாமி—கடவுள் அன்பு வடிவாக இருப்பதோடு, நீதி வடிவமாகவும், உண்மை வடிவமாகவும் இருக்கிருர். ஆகையால், அவருடைய அன்பும் ஆதரவும் உண்மையையும் நீதியையும் பொறுத்திருக்கும். அதனல், அறைகுறையான நமது மானிடக் கொள்கையின்படி அவரது செய்கை நமக்கு அன்பெனத் தோன்ருதிருக்கலாம். ஆயினும், சிசுக்களைப் பற்றி நீ சொல்லுகிற வாதம் நிலைக்காது. அந்தச் சிசுக்கள் மரணந்தரம் இருக்கத்தக்க உலகத்தைக் காட்டிலும் இந்த உலகத்தில் க்ஷேமப்படுவார்களென்று நீ எப்படிச் சொல்லலாம்? சிசுக்களை இழந்தோமென்னும் துக்கத்தினல் உனக்கு உண்டாகிற

வருத்த வுணர்ச்சியைக் கொண்டு அந்தச் சிசுக்கள் வருத்தப்பட்டார்களென்று நீ கொள்ளல் தகாது.

ரங்கராஜு — அது இருக்கட்டும், உலகத்தில் நமக்கு அப்படிப்பட்ட துக்கங்களும் துன்பங்களும் நேருவதற்குக் கடவுள் ஏன் இடங் கொடுக்கிறார்? அவர் ஏன் அவ்வளவு கன்னெஞ்சுள்ளவரா யிருக்கிறார்?

ஆனந்தசுவாமி — அந்தக் கேள்வி கேட்பதற்கு நாம் யார்? அதெல்லாம் நமது நன்மையின் பொருட்டல்ல வென்று நமக்கு எப்படித் தெரியும்? நமக்காக மாத்திரமே கடவுள் இருக்கிறாரென்று நாம் சொல்லத் துணியலாமா? வெகு விஸ்தாரமாக இருக்கிற இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு துளி மண்ணின் மீது வாழ்கிற இந்த மானிட வர்க்கத்தின்பொருட்டே கடவுள் இருக்கிறாரென்று நாம் சொல்லலாமா? இந்த மானிட வர்க்கமோ எப்படிப்பட்டதெனின், மிக இழிவானது, சீரும் சீலமும் அற்றது, பேய்த் தன்மையும் வாய்ந்தது. நமக்கு ஏதோ நிரம்பத் தெரிந்து விட்டதாக நாம் அகங்கரிக்கலாகாது. சத்தியம், ஞானம், நீதி என்னும் இவைகளுக்கு விரோதமான தெதையும் கடவுள் செய்யமாட்டாரென்று நாம் நம்பியிருப்போம். இந்த நம்பிக்கையினாலும் நமது செய்கைகளினாலும் நமக்கு நிஜமான ஞானம் இருக்கிறதென்று காட்டுவோம். இதுவே முக்திக்கு வழியாகும்.

ரங்கராஜு — கடவுள் அற்புதங்கள் செய்வாரென்று நம்புகிறீர்களா?

ஆனந்தசுவாமி — நிச்சயமாகச் செய்வார். மானிட மனம் அவரால் ஆக்கப்பட்டதே யல்லவா? நீ நினைக்கக்கூடிய அற்புதங்களுள் இது பெரிய அற்புதமல்லவா? சாமானிய மனிதரே ஆகாசவாணீ, தூர சிரவணம், தூரதிருஷ்டி முதலான பௌதிக அற்புதங்களைச் செய்துள்ளதைக் காணும்போது பிரம்மாண்டமான பிரபஞ்சத்தையும் இந்த மனிதர்களையும் படைத்த கடவுள் பிணியாளரைக் குணப்படுத்தல், மரித்தாரைப் பிழைப்பித்தல், பாபிகளை ஈடேற்றல் முதலான அற்புதங்களைச் செய்யலாகுமென்று நீ நம்ப முடியாதோ? அந்தக் கடவுள் எல்லாவற்றையும் கடந்து தனித்து நின்றபோதிலும் தம்முடைய ஓர் அம்சத்தைக் கொண்டு உலகம் முழுவதிலும் வியாபிக்க வல்லார் என்றும் நீ நம்ப முடியாதோ?

ரங்கராஜு — அவரிடமிருந்து ஓர் அம்சத்தைப் பிரித்தெடுத்த பின் அவர் எப்படி முழுமையாய் இருக்கமுடியும்? அது அசங்கதமென்று கணித முறை தெரிந்தவனெவனும் சொல்வானே.

ஆனந்தசுவாமி—அது மானிடக் கணிதமுறையேயல்லாமல், தெய்வீகக் கணிதமன்று. அதனாலேயே இயேசுகிறிஸ்துவானவர் தமது அற்புத மகிமையினால் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு 5,000 ஜனங்களுக்குப் போதிய உணவளித்துப் பின்னும் 12 கூடை நிரம்ப மிகுத்து வைத்தார்

என்பதை நமது கணித சாஸ்திரிகள் நம்பமாட்டா திருக்கிறார்கள். ஆனால், அவர்களைக் காட்டிலும் நமது வக்கீல்கள் அறிவு மிகுந்தவர்களே. ஸ்மித்து என்பவனுக்கும் வில்சன் என்பவனுக்கும் நிகழ்ந்த தொரு வழக்கில் ஓராயிரம் என்பது ஊர் வழக்கத் தைத் தழுவி ஓராயிரத்து இருநூறையாவது, வேறு எந்தத் தொகையையாவது, குறிக்குமென்று இங்கி லீஷ் நியாய சபைகளில் தீர்மானித்திருக்கிறார்கள். நம் நாட்டில் பல பல பிரதேசங்களில் மாங்காய் வாங்கும்பொழுதும் வரட்டி வாங்கும்பொழுதும் 100 என்பது 125 அல்லது 112 அல்லது 108 என நமது வீட்டுப் பெண்பிள்ளைகளுக்குத் தெரியும். இங்கிலீஷ் நியாய சபைகளைக் காட்டிலும் வரட்டி வியாபாரி களைக் காட்டிலும் கடவுளுக்குச் சக்திக் குறைவா? மற்றும் "பழைய கடன்களைத் தீர்ப்பதற்காகப் புதிய கடன்கள் வாங்குவதனால் ஒருவனுக்குக் கடன் நிவர்த்தியாயிற்றென்று எப்படிச் சொல்ல முடி யாதோ அப்படியே — 4 × — 4 என்பது + 16 ஆகாது" என்று சொல்லி யிருக்கிறார்கள். தீமையைத் தீமையினால் பெருக்க நன்மை விளையுமோ? கடன் களைக் கடன்களினால் பெருக்க ஆஸ்தியாகுமோ? நண்பனே. இந்த மானிட கணித சாஸ்திர விதிக ளெல்லாம் முற்றுமே சரியல்ல. மூன்றையும் இரண் டையும் சேர்த்துக் கடவுளானாலும் 6 ஆக்க முடியா தென்று சில கணித சாஸ்திரிகள் சொல்லுகின்றனர். வரட்டி வாங்குகிறவர்கள் 100ஐ 125 ஆக்கக் கூடியதா யிருக்க, மூன்றையும் இரண்டையும் 6 ஆக்க முடி

யாத கடவுள் பெண்பிள்ளையைக் காட்டிலும் சக்தி யற்றவராக இருக்கவேண்டும். இந்நாளில் மனித னுக்கு உண்மையான ஆத்ம நிச்சயம் (துணிவு, தைரியம்) குறைந்து போயிற்று, மமதை (இறுமாப்பு) அதிகரித்தது. எந்தச் சங்கதியையும் பெருமை குறைத்து வர்த்தமானப் பத்திரிகைகள் சர்வ சாமா னியமான மட்டத்திலாக்கி இழிவு படுத்துகின்றன. இதனுல் இக்காலத்தில் அற்புதங்களில் நம்பிக்கை மனிதருக்குக் குறைந்து போயிற்று. ஒரு பூகம்பம் ஒரு நகரத்தை யாழ்த்திப் பாழாக்கக் கூடுமானுல் கடவுள் அப்படிப்பட்ட காரியம் செய்ய முடியாதோ? தரை எஃகுவதனுல் கடலுக்குள்ளிருந்து இமயமலையை வெளித்தள்ளக் கூடுமானுல், அப்படிப்பட்ட காரி யத்தைக் கடவுள் ஒரு பூகம்பத்தினுலோ, அல்லது, தம் வசமாயுள்ள எண்ணிறந்த வேறு வகைகளி னுலோ செய்ய முடியாதா?

ரங்கராஜு — அப்படியானுல், நாம் அற்புதங் களின்மீதே சார்ந்திருக்கவேண்டுமா?

ஆனந்தசுவாமி—வேண்டாம். ஏனெனில், கடவுள் அவ்வற்புதங்களைத் தம் மனம் வந்தபோது செய் கிருரே யல்லாமல், நாம் வேண்டும்போ தெல்லாம் செய்வதில்லை. அவர் பணத்துக்காக நம் இஷ்டத் திற்கேற்பவும் நமது கட்டளைப்படியும் அற்புதம் செய்யத்தக்க ஜால வித்தைக்காரரல்ல. ஆகையால், கடவுள் செய்யும் அற்புதங்களின் மீதல்லாமல் நமது சொந்த முயற்சியின்மீது சார்ந்தொழுகுவதே நமக்கு

நல்ல வழி. உனது செய்கைகள் (கர்மாக்கள்) என்னும் சேற்றில் உன் பாதங்கள் புதைந்திருப்பினும், உன் தலை (புத்தி) ஆகாயத்தையளாவி நின்று அழியாவுண்மைகளை உணர்ந்து ஒப்புக்கொள்ளச் சித்தமாயிருக்க வேண்டும்.

ரங்கராஜு — ஆனல், மனிதர்களும் உளத்துறை மனச்சக்திகளைப் பெருக்கிக்கொண்டு சில்லறையான அற்புதங்களைச் செய்ய முடியாதோ?

ஆனந்தசுவாமி — செய்யமுடியும். ஆனல், நாளடைவில் அது பயன்படாது. இவ்வுண்மையை ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு கதையினல் விளக்கியிருக்கின்றார். ஆத்மவித்தை பயில வெண்ணி ஒருவன் உலக வியவகாரங்களினின்றும் ஒழிந்து ஒதுங்கினன். 12 வருஷ காலம் சொல்ல முடியாத கஷ்டங்களையெல்லாம் பட்டு நீர் மேல் நடக்கவும், மந்திரத்தால் யானைகளைக் கொல்லவும் உயிர்ப்பிக்கவும் சக்தி வாய்ந்தான். அவன் தன் கிராமத்துக்குத் திரும்பி வந்து இந்தச் சக்திகளைத் தனது பழைய நண்பர்கள் அறியக் காட்டினன். அவன் உலகத்தை விட்டு ஒதுங்கினபோது அவனை மிக மெச்சின அந்தப் பழைய நண்பர்கள் இப்போது தலையை அசைத்து, "அண்ணு, அருமையான 12 வருஷங்களைப் பாழாக்கினையே. இந்த யானையைக் கொன்று திரும்பப் பிழைப்பிப் பதனல், உனக்கு வந்த ஆத்மலாபம் என்ன? அன்றி, படவுக்காரனுக்குக் கொடுக்கத்தக்க காலணு காசை மீத்து நீர் மேல் நடந்து நதியைக்

கடப்பதனுல் உனக்கு வரும் ஆத்மலாபமென்ன? உன்னைப் போன்ற புத்திசாலி 12 வருஷகாலம் பெரும் பாடுபட்டு பெறத்தக்கவை இப்படிப்பட்ட அற்ப ஜாலங்களா? இவை ஒரு லாபமா? இவ்வளவு அருமையான காலத்தையும் எல்லையில்லாத் தொல்லை யையும் கடவுளைத் தேடுவதற்கு விநியோகப்படுத்தி வாழ்க்கையின் மர்மத்தைத் தெரிந்து கொள்ள நீ பிரயத்தனப் பட்டிருக்கக் கூடாதா? எல்லாவற்றை யும் வீணுக்கி விட்டாயே, ஐயோ! மந்திரத்தினுல் யானைகளைக் கொன்று அவைகளைத் திரும்ப உயிர்ப் பிக்கும் வித்தையைக் கற்றுக் கொள்வதைக் காட் டிலும் அது எவ்வளவு மேன்மையாயிருக்கும், படகுக் காரனுக்கு கூலியில்லாமற் செய்வதைக் காட்டிலும் அது எவ்வளவு சிறந்த காரியமாயிருக்கும்?'' என்று அவர்கள் கேட்டார்கள். அந்த மனிதன் வெட்கப் பட்டு, அற்புதச் செய்கைகளின் மீதிருந்த பித்தை விட்டொழித்து நிஜமாகத் தவம் செய்ய மேற் கொண்டு உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளின் க்ஷேமத்திற்காகவும் உழைத்துப் பெரிய துறவி யெனப் பிரஸித்தியும் பெருமையும் பெற்றுன்.

ரங்கராஜு — எல்லா ஜீவராசிகளின் க்ஷேமத் திற்கும் நாம் பாடு படவேண்டுமா? இந்த உலகம் மனிதனுக்காகவே யல்லவா படைக்கப்பட் டிருக் கின்றது?

ஆனந்தசுவாமி — உலகம் மனிதனுக்காக மாத் திரமே யல்லாமல் ஜீவராசிகளெல்லாவற்றிற்குமே

படைக்கப்பட்டிருக்கின்றது. மனிதன், கேடு கெட்ட மனிதன், தனக்காகவே கடவுள் உலகத்தைப் படைத்தாரென்று இறுமாப்புற்முன்; அன்றியும். அதோடு நில்லாமல் மானும், ஆடும், பறவைகளும், மீன்களும் அவைகளுக்காகவல்லாமல் தன் உணவுக்காகவே படைக்கப்பட்டன வெனச் சாதிக்கலானுன். வர வர இந்த மமதை முதிர்ந்தது. மமதை மிகுதியால் பிராமணர் யூதர் சீனர் யவனர் உரோமர் ஆங்கிலோ-சாக்கோனியர் முதலான வகுப்பினர் கடவுளின் அன்புக்குரிய சாதியார் தாங்களே எனவும், உலகத்தைக் கடவுள் தங்களுக்காகவே படைத்தாரெனவும், மற்றச் சாதியார்க ளெல்லாரும் தங்களுடைய சௌக்கியத்தின் பொருட்டே உண்டாக்கப் பட்டனரெனவும் நினைத்து அகங்கரிக்கலானுர்கள். அப்போதைக் கப்போது, அலெக்ஸாண்டரையும் நெப்போலியனையும் போன்ற ஆட்கள் தோன்றி, தாங்களே விதி வகுக்கத்தக்க அதிகாரிகளெனவும், உலகம் தமக்காகவே படைக்கப்பட்டதெனவும், தங்களுடைய மனேபீஷ்டத்தை நிறைவேற்ற, துணைப் படுவதற்காகவே மற்ற மனிதர்களெல்லாரும் படைக்கப்பட்டன ரெனவும் நினைப்பார் போல வியவகரித்தனர். ஆனல், பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா சொல்வதுபோல, நிஜமான யோகியானவன், எல்லா வஸ்துக்களிலும் கடவுளைக் காண்பான், கடவுளினிடம் எல்லா வஸ்துக்களையும் காண்பான்; கடவுள் அவைகளினிடமும் கடவுளினிடம் அவைகளும் இருந்தபோதிலும், கடவுள் அவைகளினின்

றும் வேருனவர், அவர் தமது ஓர் அம்சத்தைக் கொண்டு அவைகளிலெல்லாம் வியாபித்திருந்தும் தாம் அகண்டமாக இருப்பவர் எனவும் தெரிகிறுன்.

ரங்கராஜு — அப்படியாளுல், மனிதர்களெல்லாரும் சமானர்களென நம்புகிறீரா?

ஆனந்தசுவாமி — எந்த விஷயத்தில் சமானமாவென்று கேட்கிருய்? பிறவியினுலும் சந்தர்ப்ப வசத்தினுலும் மனிதர்கள் சரீரப்பாங்கு மனப்பாங்கு நீதிப்பாங்கு ஆகிய இவைகளில் தாரதம்மியம் வாய்ந்தவர்களே. அவரவருக்கும் ஆரம்ப சாதனத்திலும் முற்பயிற்சியிலும் மிகுந்த வித்தியாசங்கள் உண்டு. உதாரணமாக, மனிதர்களெல்லாருமே நல்ல சங்கீத வித்துவான்களாகவாவது, சித்திரகாரராகவாவது கவிவாணர்களாகவாவது இருக்க முடியாது. ஆனுல், கடவுளுக்கு எல்லா மனிதர்களும் சமானர்களே; எல்லாரிடத்தும் அவர் ஒரே மாதிரியாக அன்பு காட்டி, கடைத் தேறுவதற்கான சாதகங்களையும் அமைக்கிருர்.

ரங்கராஜு — எல்லாருக்கும் சமமான சாதகமும் சந்தர்ப்பமும் கடவுள் அமைக்கிருரென்று சொல்லுகிறீர்களே. வர்ணுசிரமம் தர்மக் கட்டுப் பாட்டினுல் எல்லாருக்கும் சமமான சாதக சந்தர்ப்பம் இல்லாமற் போகின்றதன்றே? சமானத்துவமும் இல்லாமற் போகின்றதன்றே?

சரியாகத் தெரிந்துகொண்டால் வர்ணுசிரம தர்மத்தினுல் சமானத்துவத்துக்குப் பங்கம் இல்லை.

பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நான்கு வருணத்தவரும் பிரம்மாவின் சரீரத்தினின்றே தோன்றியவர்கள். அவர்கள் முறையே பிரம்மதேவரின் முகம் புஜம் தொடை பாதங்களினின்று வந்தார்களென்று சொன்னால் என்ன? ஒரு தேகத்தின் ஒரு பாகம் மற்றொரு பாகத்தைவிட உயர்ந்ததென்று எப்படிச் சொல்லலாம்? பிராமணர்கள் பிரம்மாவின் முகத்தினின்று வந்ததாகச் சொல்லப்படுகிறது. அதற்குத் திருஷ்டாந்தமாக, அன்றுமுதல் இன்று வரையில் இந்தியாவுக்குள் அதிகப் பேச்சுக்காரர்கள் அவர்களாகவே இருக்கிறார்கள். க்ஷத்திரியர்கள் பெரும் போர் வீரர்களாக இருந்திருப்பதனால் பிரம்மாவின் புஜத்தினின்று தோன்றியதாகச் சொல்லப்படுகின்றனர். வைசியர்கள் பனியர் (வணிகர்), மார்வாரி, கோமுட்டி, நாட்டுக் கோட்டை செட்டி, சேட் (சிரேஷ்டி) என முதலாக எந்தப் பெயரால் வழங்கினபோதிலும் நாட்டில் மிக்க தனவந்தர்களாக இருந்திருக்கிறார்கள்; தேகத்தை எப்படித் தொடை தாங்கி நிற்கின்றதோ, அப்படிப்போல ராஜாங்கத்தைத் தாங்கத் தக்க திடமான திரவிய சகாயிகளாக இருக்கிறார்கள். சூத்திரர் பிரம்மாவின் பாதங்களினின்று வந்ததாகச் சொல்லப்படுகின்றனர். ஏனெனில், நாட்டுக் குடிகளுள் பெரும்பான்மையார் அவர்களே. அவர்களுடைய பெருமையான உழைப்பைக் கொண்டே ராஜாங்கம் நடைபெறுகின்றது.

ஒவ்வொரு தேசத்திலும் செல்வம் சௌக்கியம் அதிகாரம் இன்பம் முதலானவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாமல் சத்தியத்தையும் தெய்வத்தை யுமே நாடித் தேடி உழைக்கிறவர்கள் ஒரு சாரார் இருக்கிறார்கள். அவர்களே நிஜமான பிராமணர் கள், பிரம்ம வித்துக்கள் (தெய்வத்தைத் தெரிந்தவர் கள்). எளியாரை வலியார் துன்புறுத்தினால் எளி யார்க்கும் ஏழைகளுக்கும் பரிந்து தர்ம யுத்தம் செய்ய முன் வருகிறவர்கள் ஒரு சாரார் இருக் கிறார்கள். அவர்களே நிஜமான க்ஷத்திரியர்கள். யோக்கியமான வியாபாரமும் விவசாயமும் செய்து திரவியம் திரட்டுகிறவர்கள் ஒகு சாரார் இருக்கிறார் கள். அவர்களே நிஜமான வைசியர்கள். மேற் சொல்லிய மூவகைக் காரியங்களைச் செய்வதற்குப் போதிய ஊகமும் ஊக்கமும் இல்லாத பெரும் பான்மையாரான மற்ற ஜனங்கள் தாமாகச் செய்ய மாட்டாதவராயினும், பிராமண க்ஷத்திரிய வைசியர் கள் சொற்படிப் பொறுமையாக உழைக்கக் கூடி யவர்களா யிருக்கிறார்கள். அவர்களே நிஜமான சூத்திரர்கள்.

இந்தப் பாகுபாடு மிக நியாய மானதே. ஆனால், அவ் வரம்புகள் வலுத்து ஓங்கித் தடுத்துக் கட்டுப் படுத்துவது அநியாயம். அங்ஙனம் வரம்புகள் வலுப் பதற்குக் காரணம் வர்க்கோன்னதி நோக்கமே. வர்க் கோன்னதியாவது, பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் தங்கள் தங்களுக்குரிய அஸல் குணதிச யங்கள் கலப்பினாற் கெட்டுப் போகாமல் பரம்பரை

யாகப் பாதுகாக்க வேண்டுமென்னும் எண்ணமாம். இந்த எண்ணங்கொண்டு செய்த முயற்சியினுல் அந்தந்தச் சாதிக்கட்டு பலப்பட்டது. அப்படிப் பலப்பட்டதனுல் ஒரு சாதிக்காரன் மற்ருெருசாதியிற் புக முடியாதாயிற்று. நன்ருகக் கவனித்துப்பார், மற்றவர்களைப் போலச் சூத்திரர்களும் மிக உபயோகமானவர்களே, அவர்கள் பொறுமையுடன் ஒத்துழைக்காவிட்டால் பிராமணர்கள் தியானம் முதலான நிஷ்டைகளில் அமர முடியாது, க்ஷத்திரியர் போர்புரிய முடியாது, வைசியர்கள் வியாபாரம் செய்யவும் விவசாயம் செய்யவும் முடியாது. ஆய்ந்தோய்ந்து பார்த்தால் மற்றவர்களுக்குஉணவளிக்கிறவர்கள் சூத்திரர்களே. பிராமணர்களுக்கு மனுேபலமும் மனப்பயிற்சிக்குரிய அவகாசமும் அளிக்கிறவர்கள் அவர்களே. க்ஷத்திரியர்கள் போர்புரிவதற்கு வேண்டிய புஜபலம் அளிக்கிறவர்கள் அவர்களே. வைசியர்கள் விவசாயம் செய்வதற்கு வேண்டிய உழவுழைப்பும் வியாபாரம் செய்வதற்கு வேண்டிய பண்டங்களும் அளிக்கிறவர்கள் அவர்களே.

பற்பல ஜாதியார் கூடிய நாட்டில் அமைக்கக் கூடிய நியாயமான பரிகாரம் ஆதிகாலத்தில் வருணுசிரம தருமமேயாகும். ஒரு ஜாதியாரை அழித்துவிடுவது, அல்லது, ஆட்கொண்டு அடிமைப்படுத்துவது, அல்லது, ஒரு ஜாதியோடு மற்ருெரு ஜாதியைக் கலப்பது என்னும் முறைகளைக் காட்டிலும் வருணுசிரம தர்மமே உத்தமமானதாக இருந்தது. முதன்

முதலில் இது யுக்தியால் குணவிபாகங்களின் மீது அமைக்கப்பட்டது. அந்தந்த வருணத்தவர் அவரவருக்கு முக்கியமானதாகக் கொள்ளப்பட்ட குணங்களை அபிவிருத்தி செய்துகொள்ளவேண்டு மென்று விதிக்கப்பட்டது. அப்போது எல்லாம் ஒழுங்காகவே நடைபெற்றுக்கொண் டிருந்தது. அப்படியிருக்க, பிற நாட்டார் பலர் வந்து இந்தியாவில் ஓங்கிப் பரவலானார்கள். அவர்களில் அநேகரை நாம் வென்று நமது வர்ணாசிரமக் கட்டுப்பாட்டிற் சேர்த்து இணைத்துக் கொண்டோம். முடிவில், ஆக்கிரமித்து வந்த பிற நாட்டார் நம்மினும் பலத்தில் மிகுந்தவராகி நம்மை வென்று கீழ்ப்படுத்தி விட்டனர். ஆனால், அவர்கள் நம்மை அடியோடு அழிக்க முடியவில்லை. நம்மை அவர்கள் தம் இனத்தோடு இணைத்துக்கொள்ளவுமில்லை, நாமும் அவர்களை இணைத்துக்கொள்ளவுமில்லை. அவர்களை உயர் ஜாதியாராக ஆக்குவதனாலும் நாட்டில் அமைதி குடிகொள்ளாதாயிற்று.

ஆனால், இந்து அரசர்கள் ஆண்டு வந்த காலத்தில் இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது நாம் நன்றாயிருக்கிறோமா? அன்றியும் இந்த பயங்கரமான படை யேற்றங்களும் வெற்றிகளும் நேர்ந்திராவிட்டால் நமது வர்ணாசிரம தர்மம் தனக்குத்தானே திரும்பவும் அமைதியுறப் பொருந்திக் கொண்டிராதா? பொது விதிக்கு எப்பொழுதும் விலக்குகள் உண்டல்லவா? மகரிஷிகளுள் பெரிதும் போற்றப் பெறுகிற வியாஸர் செம்படவச்சிக்குப் பிறந்தவ

ரல்லவா, பராசரர் குலங் கெட்டவளுடைய புத்திர ரல்லவா, வஸிஷ்டர் தேவதாஸியின் புத்திரரல்லவா? இப்படியிருந்தும், இவர்களைப் பிராமணர்கள் பணிந்து போற்றுகிறார்களல்லவா? ஒழுக்கம் தவறின தாய்க்கும் இன்னானெனத் தெரியாத தந்தைக்கும் பிறந்த சத்தியகாமனுக்கு மாமுனிவரொருவர் பிராமணச் சிறுவர்களுக்குச் செய்வதுபோல உபநயனம் செய்வித்து வேதம் கற்பிக்கவில்லையா? நமது மனோரத பாவனைகள் உலகத்தில் மற்றெந்த நாட்டாருடைய பாவனைகளினும் சிறந்தவைகள். உதாரணமாக, ஒருவனுக்குள்ள உரிமை கடமை என்னும் இரண்டினுள் கடமையே பெரிதென்பது நமது கொள்கை; விவாகமென்பது காமியத்தின் பொருட்டு ஸ்திரீ புருஷர் கூடி வாழ்வதென்பதல்லாமல், உலகத்துக் கடமைகளை இருவரும் ஒன்றித்துச் செய்வதற்காகவே ஏற்பட்ட கூட்டுறவு என்பது நமது கொள்கை; வாழ்க்கையில் நாம் பெறத்தக்க பேறுகளுள் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கே சிறந்தவை என்பது நமது கொள்கை; வியவகாரத்துப் படிகளுள் பிரம்மசரியம் கிருகஸ்தம் வானப்பிரஸ்தம் ஸந்யாஸம் என்னும் நான்கே சரியான படிக்கிரமமென்பது நமது கொள்கை; கூலியின் பொருட்டு வேலை செய்யாமல் கடமையின் பொருட்டு வேலை செய்வதே சிறந்ததென்பது நமது கொள்கை. இந்த நமது உத்தம பாவனைகளை உலகத்தவரெல்லாரும் இன்றைக்கு இல்லையெனினும் என்றைக்கேனும் சரியென்று ஒப்புக்கொள்வார்கள்.

ரங்கராஜு — தீண்டக்கூடாது, நெருங்கக் கூடாது, பார்க்கக்கூடாது என்கிறார்களே ஏன்?

ஆனந்தசுவாமி — ஸ்பரிஸதோஷம், உபகம்ய தோஷம், திருஷ்டிதோஷம் பாராட்டுகிறவர்கள் அவ் வாசாரம் தவறென உணர்ந்து பச்சாத்தாபப்பட்டுத் தமது ஒழுக்கத்தைத் திருத்திக் கொள்கிற வரையில் கடவுளும் அவர்களைத் தீண்டார், அணுகார், கண் ணுற் பாரார்.

ரங்கராஜு — ஆனால், அந்த இழிகுலத்தவர்கள் முற் பிறப்புக்களிற் செய்த பாப கர்மத்தினால் அவர்கள் அந்த நிலைமையில் இருக்கத்தக்கவர்களானார்களென்று சொல்லுகிறார்களே?

ஆனந்தசுவாமி — அப்படியே வைத்துக் கொண்டாலும் உயர்குலத்து இந்துக்கள் அந்த ஆசாரத்தைக் கொண்டாடுவதனால் இந்த ஜன்மத்தில் பாபகர்மம் தேடிக் கொள்வானேன்?

ரங்கராஜு — நமது கர்மதத்துவ சாத்திரத்தை உலகத்தவர் கொண்டாடுவாரென்று நினைக்கிறீர்களா? குருடனைப்பார்த்து அவனுக்கு நேர்ந்திருக்கிற குருட்டுத்தனம் முற்பிறப்பில் அவன் செய்த பாபத்தின் பயனென்று சொல்வது புண்ணிற் கோலெடுத்துக் குத்தியதுபோ லாகுமென்று தோன்றவில்லையா? இந்தக் கர்ம சித்தாந்தத்தினால் இந்துக்களாகிய நாம் எல்லாம் விதிப்பயன் எனச் சொல்லிக் கொண்டு அசேதனர்களாய் விட்டோமல்லவா?

ஆனந்தசுவாமி — நீ கொண்டிருக்கிற அபிப்பிராயத்தில் பல பிழைகள் இருக்கின்றன. முதலாவது, கர்ம சித்தாந்தத்தினுல் விதி வாதம் ஏற்பட வேண்டியதில்லே. கர்ம சித்தாந்தம் என்ன சொல்கின்றது? நாம் இப்பொழுது ஜன்மமெடுத்திருப்பது தற்செயலாக அன்று, முற் பிறப்புக்களில் நாம் செய்த காரியங்களின் பயனுக இப்பொழுது சிற்சில மனச் சார்புகளும் வாசனேகளும் வாய்ந்து, தேக சம்பந்தமாகவும் மனசு சம்பந்தமாகவும் சதாசார சம்பந்தமாகவும் ஒருவகைப் பயிற்சி வாய்ந்து தோன்றியிருக்கிறே மென்பது கர்ம சித்தாந்தம். அந்த வழக்க பழக்கங்களே நம் இஷ்டப்படி நாம் உபயோகிக்கக் கூடாதென்று அது சொல்வதில்லே. ஒருவன் தனக்கு வாய்ந்துள்ள சிறிய மூலதனத்தை, ராக்பெல்லரைப் (Rockfeller) போல பிரம்மாண்டமாக வளர்ப்பினும் வளர்க்கலாம், அல்லது, தனக்கு வாய்த்த பெரு நிதியை, டைமன் ஆவ் ஏதென்ஸை (Timon of Athens) ப்போலப் பாழாக்கினும் பாழாக்கலாம். அவ்வளவு செய்வதற்கு ஒரு மனிதனுக்கு ஸ்வதந்திரம் உண்டு. நிமிஷந்தோறும் ஒருவன் புதிய கர்மா செய்துகொண்டே யிருக்கிருன். இந்தப் புதிய கர்மாவானது ஏற்கெனவே வாய்த்துள்ள பழைய கர்மாவுடன் சேர்ந்து அதை அதிகரிக்கின்றது, அல்லது, அதைப் பரிகரிக்கின்றது.

இப்படியிருக்க, எல்லாம் விதிவசமென்று ஒருவன் எப்படிச் சொல்வதற்காகும்? கர்ம சித்தாந்தத்

தோடு ஜோதிஷ சாஸ்திரத்தைக் கலந்து கொண்டால் விதிவாதம் ஏற்படும். ஜோதிஷத்தைக் கலந்து கொள்ளாவிட்டால் ஒருவன் தன் இஷ்டப்படி ஸ்வேச்சையாக நடந்தேறுவதற்காகும், அப்படி நடப்பதிலும் தனது தேகசக்தி மனச் சக்தி ஆத்மசக்தி என்னும் இவைகளுக்குத் தக்கபடி மாத்திரமே நடந்து கொள்வதற்காகும். வருங்காலத்து நிகழ்ச்சிகளையெல்லாம் தவருமல் முன்னர் அறிவிப்பதாக ஜோதிஷ சாஸ்திரம் பாசாங்கு பண்ணி, அதைப் பார்த்து ஏமாறுகிறவனை நிச்சேஷ்டிதனைக்குகின்றது; அதாவது, அவன் ஸ்வதந்திரமாக ஒரு காரியமும் செய்ய முயற்சி கொள்ளாமல் ஊக்கமற்று ஆழ்ந்து போகிருன். ஏனெனில், அவன் என்ன முயற்சி செய்தபோதிலும் ஜோதிஷ சாஸ்திரத்திற்சொல்லிய பயனைத் தவிர்க்க முடியாதென் றெண்ணி, வந்தது வரட்டும் நடக்கிறது நடக்கட்டும் என ஓய்ந்து ஒடுங்குகிருன்.

குருடனை அவமானப்படுத்துகிறதாகச் சொன்னுயல்லவா? தான் குருடாய்ப் போனதற்குக் காரணம் என்னவென்று அவன் கேளாதிருக்க, அவனண்டை போய் உனது பூர்வ கர்மத்தினுல் நீ இப்பொழுது குருடாக இருக்கின்றனையென்று எவரேனும் சொல்ல வேண்டுமெனச் சாஸ்திரம் இல்லையே. "ஸத்யம் வத, நப்ருயாத் ஸத்யமப் பிரியம்...." அதாவது, 'உண்மையைப் பேசு. ஆனுல், பிரியமாக இராததைப் பேசாதே. பிரியமானதைப் பேசு. ஆனுல், அஸத்யத்தைப்

பேசாதே' என்று தர்ம நீதி சாஸ்திரம் விதிக்கின்றது. குருடன் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டு மென்று பிடிவாதமாக நாடினால் அவன் தெரிந்து கொள்ளட்டுமே. அவனுடைய குருட்டுத்தனத்துக்கு இதைக் காட்டிலும் வேறு நல்ல சமாதானம் உன்னாற் சொல்ல முடியுமா? எல்லா விஷயத்திலும் உனக்கு ஸ்வதந்திரமும் ஸ்வேச்சையும் இருக்கிறதென்று நினைக்கிறாயே. அது இல்லை, இல்லை. பூர்ண ஸ்வேச்சை இருக்கிறதென்றே கொள்வோம்; குருட்டுக் குழந்தை வேண்டுமென்று எந்தத் தாய் தந்தையர் விரும்புவர், எந்தக் குழந்தை குருடாக இருக்க உடன்படும்?

ரங்கராஜு — நீங்கள் சொல்வது சரியாயிருக்கலாம். ஆயினும், உலகத்திலுள்ளதெல்லாம் மாயையென்னும் வெறும் வார்த்தையான சித்தாந்தத்தைப் போதித்து நாம் எல்லாவற்றையும் கெடுத்துவிட்டோமல்லவா?

ஆனந்தசுவாமி — எல்லாம் மாயை என்பது ஒரு சார்பாருடைய போதனையேயாகும். அதுவும் நீ சொல்கிற அளவு விகாரமானதன்று. கேவல சத்தியம் ஒன்றே உளது; அதுவே கடவுள்; உலகத்துத் தோற்றங்களெல்லாம் அதை யொட்டித் தாற்காலிகத்தில் நிஜமாகத் தோன்றுகின்றது. பரிபூர்ண தெய்வ ஞானம் வாய்ந்தவர்களுக்கு உலகத்துத் தோற்றங்களெல்லாம் உண்மையான சத்தில்லாத மாயையே யாகும் என்பதே அவர்களுடைய சித்தாந்-

தம். கனவு காணும்பொழுது காண்கிறவைக ளெல்லாம் அப்போதைக்கு உண்மையாயிருக்கின் றன; ஆனால், விழிப்புற்ற பின் அவை யெல்லாம் மாயையாக இருக்கின்றன. அதனினும் குறைந்த விதமாக, நாடகம் நடக்கும்பொழுது அந்த நிகழ்ச்சி களெல்லாம் உண்மையாகத் தோன்றுகின்றன; நாடகம் முடிந்த பின் அந் நிகழ்ச்சிகள் மாயமாய்ப் போகின்றன. அதுபோலவே, இந்த உலகத்து வஸ் துக்களும் சம்பவங்களும் உலக ஞானமுள்ளவனுக்கு மிகவும் உண்மையாகத் தோன்றினும், அவனுக்குத் திவ்விய ஞானம் உதயமானபோது அவை யெல்லாம் அஸத்து என்றும் வெறும் மாயை யென்றும் அவன் தெரிந்துகொள்வான். உங்களுடைய தத்துவ சாஸ் திரிகளுள் மிக மிகத் தேர்ந்த பெரிய ஞானிகளும் கடைசி முடிவான ஸத்தியத்தின் தன்மை யாது, அது மனமா அல்லது பிரகிருதியா (சித்தா அசித்தா) என்று இன்னும் ஒருவருக்கொருவர் வாதிட்டுப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அசித்து அல்லது பிரகிருதியே ஆத்யந்தமான வஸ்து (ஸத்து) என்று வாதிக்கிறவர்களும் பிரகிருதி சோதனையில் முடிவாகத் தோன்றுகிற வஸ்து அவர்களுக்குப் புலப்படாத தன்மையுள்ளதாக இருப்பதைக் கண்டு திகைக்கிறார் கள். பௌதிக சாஸ்திரிகள் பிரகிருதியை விபஜனை செய்துசெய்து பார்த்து, இனி விபஜனை செய்யமுடியா தெனக் கண்டிருக்கிற பிரகிருதி ஸத்து 'புரோடன்ஸ்' (protons) என்றும், 'இலெக்ட்ரன்ஸ்' (electrons) என் றும், 'ப்ரோடன்ஸ்' (protons) என்றும் சொல்கிறார்

கள். அவை இவர்களுடைய கைக்குப் பிடிபடுவ தில்லை, மனத்திற்கும் புலப்படுவதில்லை.

ரங்கராஜு — அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம் என்னும் தத்துவ தரிசனங்களுள் நீங்கள் எதைச் சார்ந்தவர்கள் ?

ஆனந்தசுவாமி — நீ சொல்லுகிறவை மூன்றும் இந்து தத்துவ சாஸ்திரங்களுள் பிரஸித்தமானவை. அத்வைதமென்பதுபொதுப்படச்சொல்லின்,ஐக்கிய வாதம் (Monism); துவைத மென்பது நானத்துவ வாதம் (Pluralism) ; விசிஷ்டாத்வைத மென்பது மேற்சொல்லிய இரண்டும் கலந்தது. நான் அத்வைத மதத்தைச் சேர்ந்தவன். ஆனால், அம் மூன்று மதங்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான தத்துவ திருஷ்டி என்பது எனது அனுபவத்தினால் நான் அறிந்த விஷயம். அதாவது, ஒவ்வொரு மதமும் தத்துவத்தை (உண்மையை) ஒவ்வொரு விதமாக எடுத்துச் சொல்கின்றது. நாம் உச்ச (உன்னத) பதவியிலிருக்கும்போது அத்வைதிகளைப் போல நினைக்கிறோம்; சோர்வுற்றிருக்கும்போது துவைதிகளைப் போல நினைக்கிறோம்; அவ்விரண்டுமில்லாமல் சாமானிய நிலையிலிருக்கும்போது விசிஷ்டாத்வைதிகளைப்போல நினைக்கிறோம். இவற்றுள் எது உயர்வு எது தாழ்வு என்பதைப் பற்றித் தத்துவ சாஸ்திரிகள் வாதிட்டுக்கொண் டிருந்தால் இருக்கட்டும். அது பாண்டித்தியத்தைக் காட்டத்தக்க வாதமாகுமே யல்லாமல் வேறன்று. அந்த வாதமெல்லாம் ஒரு

சம திரிகோணத்துக்குரிய மூன்று ரேகைகளுள் எந்த ரேகைஅம் முக்கோணத்திற்கு முக்கியாதாரம் என்பது போன்ற வாதமாகும். உண்மையை உள்ளபடி முழுதும் தெரிந்துகொள்வதற்கு மேற் சொல்லிய மூன்று தரிசனங்களும் அவசியமாகும். அவற்றுள் எது உயர்வென வாதிப்பது பக்தி மார்க்கம் உயர்வா, ஞான மார்க்கம் உயர்வா, கர்ம மார்க்கம் உயர்வா என்னும் பழைய விவாதத்திற்கு ஒப்பாகும்.

ரங்கராஜு — ஞான மார்க்கம் கர்ம மார்க்கம் பக்தி மார்க்கம் என்னும் மூன்றும் ஒன்றுக்கொன்று விரோதமானதல்லவா?

ஆனந்தசுவாமி — அவை ஒன்றுக் கொன்று விரோதமே யில்லை. அவை ஒன்றோடொன்று சேர்ந்து முக்திக்குப் பரிபூர்ண சாதனமாகும். முதன் முதலில் பக்தி வேண்டும். அது மற்றெல்லாவற்றினுள் முக்கியமானது. ஆத்ம பரிபக்குவத்திற்கு அடிப்படை அதுவே. பக்தி என்னும் நிலத்திலேயே ஞானமும் கர்மமும் வளர்ந்தோங்க வேண்டும். இது தர்மத்திற்கு (Religion) இன்றியமையாதது. பக்தி இல்லாவிட்டால் ஞானமும் பெறவே முடியாது. ஏனெனில், எந்த ஞானம் பெறவேண்டினும், ஆசானிடத்தும் உற்றாரிடத்தும் உன்னிடத்தும் பக்தி இருக்கவேண்டும். ஆசான் எழுத்துக்களின் பெயர்களைச் சரியாகச் சொல்லிக் கொடுக்கிறாரென்றும், பொய்ப் பெயர்களைச் சொல்லித் தன்னை ஏமாற்ற மாட்டாரென்றும் ஒரு பையனுக்கு நம்பிக்கையில்லா

விட்டால் அவன் அரிவரிகூடக் கற்றுக்கொள்ள முடியாது. ஓர் உதாரணம். மாத்திரம் எடுத்துச் சொன்னேன்.

அறிவு (ஞானம்) எவ்வளவு உயர்வாகப்போனலும் அதற்குஆதாரமாகப்பக்தி(நம்பிக்கை)இருந்தே அதைத் தாங்கி நிற்கும். அதுபோலவே, அவசியமான காரியம் என்ன செய்ய வேண்டுமானலும், பிரயோஜனமான காரியம் என்ன செய்ய வேண்டுமானலும் கொஞ்சமேனும் பக்தி (நம்பிக்கை) இல்லாவிட்டால் அது சிறிதும் ஈடேருது. மோக்ஷம் பெறுவதற்கான காரியமோவெனின், அது ஞானமே(அறிவே) ஆதாரமாகக் கொண்டது. ஆதலால், ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்கிறபடி, பக்தியினல் வாய்ந்த ஞானத்தோடு செய்கிற காரியமே மோக்ஷ சாதனமாகும்; பக்தி ஞானம் கர்மா என்னும் மூன்று மார்க்கங்களும் ஒன்றுக்கொன்று துணையாயிருக்கின்றன. வாழ்க்கை என்னும் பள்ளத்தினின்று மோக்ஷமென்னும் மேல் மாடிக்கு ஏறுவதற்கு இம்மூன்றும் ஒன்ருேடொன்று ஒட்டி இணைந்த ஏற்றங்களாகும்.

கடவுளுக்கு இனிமையா யிருக்கக்கூடிய காரியம் எதுவும் பக்தியுடனும் ஞானத்துடனும் கூடியதாயிருக்கவேண்டும். நரபலி கொடுத்தல் மோக்ஷ சாதனமாகாது. ஏனெனில், அதில் ஞானம் இல்லை. பக்தியில்லாமல் வெறும் வாய்மொழியாகச் செய்கிற பிரார்த்தனைகள் மோக்ஷ சாதனமாகா. பரிபூர்ண பக்தியும் ஞானமும் இருந்தாலும் அந்த பக்திக்கும்

ஞானத்திற்கும் அறிகுறியான காரியம் ஒன்றும் செய்யாவிட்டால் அவை மாத்திரமே முக்தி தர மாட்டா. மோக்ஷம் என்னும் பயிர் விளைந்து ஓங்கு வதற்கு பக்தியே நிலமாகும்; ஞானமே நீர்; கர்மமே விதை. நிலம் மாத்திரம் இருந்தாலும், நீர் மாத்திரம் இருந்தாலும், விதை மாத்திரம் இருந்தாலும் அந்தப் பயிர் விளையாது. தன் தேகம் நிலைத்திருப்பதற்காக ஒரு காரியமும் செய்ய வேண்டாதவன் எவனே அவனே கர்மம் செய்யாமலிருக்கத் தக்கவனுவன். அன்னமும் நீரும் வேண்டுமானால் அவன் வேலை செய்தலே வேண்டும். வேறு விதமாகச் சொல்லின், சரீரம் ஒன்று வேருக வைத்துக் கொண்டிருக்கு மளவும் அவன் கர்மம் செய்ய வேண்டும். தங்கள் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காகக் கர்மம் செய்ய வேண்டிய அவசியமேயில்லாத ஜனக மகா ராஜனையும், ஸ்ரீ கிருஷ்ண பகவானையும் போன்ற மகாத்மாக்களும் உலகத்தவர்க்கு நல்லுதாரணம் காட்டும் பொருட்டுத் தாமும் உலக வியவகாரங்களிற் கலந்து கர்மம் செய்தனர். அவர்கள் செய்த கர்மம்ஜீவ ராசிக ளெல்லாவற்றின் க்ஷேமத்தின் பொருட்டே யாகும். பெரியவர்களாகிய அவர்களே கர்மம் செய்யாது ஒழிவார்களானால் அவர்களைப் பார்த்துப் பாமர ஜனங்களும் கர்மம் செய்யாமற் கைவிடுவார் கள்; அதனுல் உலகமே பாழாய்ப்போம்.

ரங்கராஜு — அப்படியானல் முக்தி மார்க்கங் கள் யாவை?

ஆனந்தசுவாமி — முக்தி அடைவதற்கு நம் முனி புங்கவர்கள் கைக்கொண்ட மார்க்கங்கள் அனந்த மென்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவை நீருக்குள் மீன்கள் போகும் பாதைகளும், அந்த ரிக்ஷத்தில் பறவைகள் போகும் பாதைகளும் எண்ணித் தொலையாதிருப்பது போலவாம். மீனும் பறவையும் ஒருமுறை நமது கண்ணுக்குப் புலப்பட்டு ஓடிப் போனபின் அவைகள் போனவழியை நாம் எப்படி கண்டுபிடிக்க முடியாதோ அப்படிப் போலவே, முனிவர்கள் முக்தி பெற்ற மார்க்கங்களை யும் எண்ணிச் சொல்ல முடியாது.

ரங்கராஜு — புலாலையும் மதுவையும் மறுக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களா ?

ஆனந்தசுவாமி — நிச்சயமாக மறுக்கவேண்டும்.

ரங்கராஜு — இந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதியி னுலும் இந்தியர்கள் புலால் மறுத்துக் காய்கறி முத லான சைவ உணவே உண்பதனுலுமே பிறநாட்டார் அவர்களை வென்று இந்தியாவைக் கைப்பற்றிக் கொண்டு ஆள நேர்ந்ததென்று ஆராய்ச்சி மிகுந்து தகுதிவாய்ந்த சரித்திரகாரர்கள் சொல்கிறார்களே.

ஆனந்தசுவாமி — (சிரிக்கிறார்). — இந்த 'தகுதி வாய்ந்த' சரித்திரகாரர்களுக்கு உள்ள விஷயம் சிறிதும் தெரியாதுபோ லிருக்கின்றது. இமய மலைக் கும் தென் கடலுக்கும் இடையிலுள்ள இந்த தேசத் தைக் காட்டிலும், குறைந்த காலம் பிற நாட்டாரு டைய ஆட்சியிலிருந்த தேசமொன்றை உலகத்தில்

எங்கேனும் காட்டு, பார்ப்போம். பிரமாதமான பெரிய பெரிய பிற படையேற்றங்களினுல் எல்லாம் தலைகீழாக மாறினும், தனது மதம், வழக்க பழக்கங்கள், ஆசாரம் முதலியவைகளைச் சிறிதும் விடாமல், தொடர்ச்சியாக நமது தேசத்தைப்போல அனுசரித்துக்கொண் டிருக்கிற மற்ளுெரு தேசத்தைக் காட்டு, பார்ப்போம். மற்ற தேசங்களிலெல்லாம் படையெடுத்துப் பற்றிப் பரவி அவைகளின் சொரூபத்தை யழித்த ஹூணர்கள் இந்து நாகரிகத்தை அழிக்க மாட்டாமல் அதனில் ஐக்கியமாயினர். சென்ற இடங்களிலெல்லாம் பெருவெள்ளம்போலப் பரவி அங்கங்கேயுள்ள பழைய அறிகுறிகளை யெல்லாம் அழித்த முஸ்லீம்கள் நமது வர்ணுசிரமக் கட்டுப்பாட்டையும் முறிக்க முடியாராயினர். பிரிட்டிஷார் இந்தியாவில் ஆதிக்கம் பெறுவதற்கு நெடு நாள் முன்னர் நமது மஹாராஷ்டிரர்களும் சீக்கியர்களும் முகலாயரை வென்று அடக்கின ரென்பதை மறவாதே. மஹாராஷ்டிரரிற் பெரும்பாலார் புலால் மறுத்த சைவர்கள். அவர்களுடைய இருப்பிடமாகிய தக்ஷிணப் பிரதேசம் வெயிலின் தாபம் மிகுந்தது. அப்படியிருந்தும், அவர்கள் முகலாயரை வெல்வதற்கு அவர்களுடைய சைவ உணவும் கொளுத்துகிற வெயிலும் தடையாகவில்லை.

ரங்கராஜு — அதிர்ஷ்ட வசத்தினுலும் குருட்டு வாய்ப்பினுலுமே மஹாராஷ்டிரர்கள் வெற்றி பெற்றன ரென்று சிலர் சொல்லுகிருர்களே.

ஆனந்தசுவாமி — அவர்கள் ஆய்ந்தோய்ந்து பார்த்து அவ்வாறு சொன்னார்களென்று நீ நினைக்கிறாய் போலும். அவர்கள் நன்றாக ஆராய்ச்சி செய்யவில்லை. அதிர்ஷ்டம் என்று சொல்கிறாயே. இந்த அதிர்ஷ்டம் என்பது யாது? இவ் விஷயத்தில் அதிர்ஷ்டம் என்பது 'தாமதப் பயன்' எனல் வேண்டும். நெடுநாள் உத்தியோகம் செய்தவனுக்கு உபகாரச் சம்பளம் (Pension) எப்படி ஒற்றி வைத்த சம்பளம் என்பது போல இவர்களுடைய அதிர்ஷ்டமும் 'ஒற்றிவைத்த யோக்கியதை'. ஒருவன் சாமர்த்தியவானென்று சொல்லுகிறோமே. சாமர்த்தியம் என்பது என்ன? குருட்டு தசையாக நேருகிற வாய்ப்புக்களை ஒழுங்குபடுத்தித் தனது நயத்தின் பொருட்டுப் பயன்படுத்திக் கொள்ளலே நிஜமான சாமர்த்தியம். இந்த அதிர்ஷ்டமும் குருட்டு தசைகளும் தற்செயலாக நேருகிற வாய்ப்புக்களேயானால், மூகலாயருக்கு ஏன் இந்த வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை? அவர்கள் ஒரு நூறு வருஷகாலம் மேலும் மேலும் இழந்து கொண்டே வந்தது ஏன்? அது நிற்க, தேக வலியிலும் அங்கக்கட்டிலும் நமது சீக்கர்கள் பட்டாணியர்கள் ரஜபுத்திரர்கள் மாப்பிள்ளைகள் கூர்க்கர்கள் ஆகிய இவர்களை மிஞ்சினவர்கள் எங்கேனும் இருக்கிறார்களா? சாதாரண வங்காளியும் மதராஸியும் குஜராத்தியும் சாதாரண ஐரோப்பியரைக் காட்டிலும் தேக பலம் குறைந்தவர்களென்று சொல்லலாம். ஆனால், அவர்களுடைய பலக்குறைவு இந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதியினால் நேர்ந்ததன்று.

உலகத்திலுள்ள மிருகங்களுள் பலம் மிக்கவைகளான யானை, வங்கப்புலி, கங்கை முதலை, காண்டாமிருகம், இமயக் கழுகு, ஸர்ப்பராஜன் ஆகிய இவை இந்தியாவிலே இருக்கின்றன; அன்றியும், தங்களுக்குரிய அசாத்தியமான பலத்திலும், அற்புதமான சுறுசுறுப்பிலும் ஊக்கத்திலும் ஓர் அணுவளவும் குறையாமல் யுகாந்தர காலமாக இங்கே ஜீவித்துக்கொண்டிருக்கின்றன. இதனால், தேக பலக் குறைவுக்கும் நமது சீதோஷ்ண ஸ்திதிக்கும் ஒரு விதமான சம்பந்தமுமில்லை யென்று தெரிகிறது. யானை மாமிச உணவு உட்கொள்வதில்லை; கந்த மூலாதிகளைப் புசித்தே வளர்கின்றதாயினும், போராட்டத்திலும் சுமை தூக்குவதிலும் அதை மிஞ்சக் கூடியது எதுவுமே இல்லையென்று சொல்லலாம். அதனால், பலக் குறைவுக்கும் புலால் மறுப்புக்கும் ஒரு விதமான சம்பந்தமும் இல்லையென்று தெரிகிறது.

ரங்கராஜு — ஆயினும், சில மருந்துகளிலும் தாதுபுஷ்டி லேகிய முதலிவைகளிலும் மாமிசசத்து சேர்ந்திருக்கின்றது. சிற்சில சந்தர்ப்பங்களில் பிராணனைக் காப்பாற்றுவதற்கு அவை அவசியமென்று சொல்கிறார்களே. அதற்கு என்ன சொல்லுகிறீர்?

ஆனந்தசுவாமி — நாம் அக்கறையாக ஆராய்ந்து தேடினால், அவைகளைப்போன்ற குணமுள்ள தாது புஷ்டி சத்தமைந்த கந்த மூலாதிகள் கிடைக்காவென்று நான் சொல்ல முடியாது. அன்றியும், நீ

ஊக்கிக்கிறது போன்ற நோய்க்கூறு இருக்கிறதென்றே கொள்வோம். அது மற்றொரு மனிதனுடைய நல்ல இரத்தத்தை எடுத்து ஊட்டினலல்லாமல், பிழைக்கமாட்டானென்று எவனேனும் ஒருவனுக்குச் சொல்வதுபோ லாகும். அப்படிப்பட்ட அபூர்வமான சந்தர்ப்பத்திற்கும் தினசரியையான உணவுக்கும் சம்பந்தமே இல்லை. நித்தியப்படி உணவு கந்த மூலாதிகளாகவே இருக்கலாம். ஆனல், சாமானிய மனிதன் அத்யாவசியகமான சமயத்திலும் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்திலும் கோழிமுட்டையாவது மாமிச சத்தாவது உட்கொள்வதனல், அவன்மீது குற்றம் கூறலாகாது. ஏனெனில், அவன் விஷயத்தில் பிராணனை யுத்தேசித்து ஆஹார நியமம் இளகி இடங்கொடுக்க வேண்டியதே.

ரங்கராஜு — எல்லாரும் கந்த மூலாதிகளையே உண்பதானல் அனைவர்க்கும் போதுமானவளவு கந்த மூலாதிகள் கிடைக்குமா? மீன் பிடிக்காததனல் கடல்களில் மீன்கள் அதிகரித்துக் கப்பற் பிரயாணத்தைத் தடுக்காதா? மீன் உண்பதைத் தவிர்த்த பின்னும் ஜனங்கள் மீன்களைக் கொல்லமாட்டார்களென்று நினைக்கிறேன்.

ஆனந்தசுவாமி — உண்பதற்காகவே கொல்ல வேண்டுமென்பது இல்லை. வயல்களில் தானியத்தைத் தின்கிற எலிகளை உழவன் கொல்கிறன், ஆனல், அவைகளை அவன் புசிப்பதில்லை. அது

போலவே, கிருகஸ்தனும் தேளைக் கொல்கிறான், படை வீரனும் பகைவனைக் கொல்கிறான். ஆயினும், கந்தமூலாதி உணவின் முக்கிய தத்துவம் அஹிம்ஸை என்பதில் ஐயமில்லை. அஹிம்ஸையாவது அனுவசியகமாகப் பிறருக்குத் தீங்கு விளையாமை. எல்லாரும் கந்த மூலாதிகளை உண்ணும் சைவர்களாவதும், அதனால் கஷ்டம் விளையும் என்று நினைப்பதும், எல்லாரும் மோக்ஷத்திற்குப் போவார்களானால் மோக்ஷத்தில் இடமில்லாமல் நெருக்குண்டு கஷ்டப்பட வேண்டி வருமென்பதைப் போலவும், எல்லாரும் அறஞ் செய்ய விரும்பினால் அறம் ஏற்பவர் இல்லாமற் போகுமெனவும், அதனால் அறம் செய்வதற்கே இடமில்லாமற் போய் விடுமென நினைப்பது போலவும் இருக்கின்றது. இந்த நிலைமைகள் அர்த்த மில்லாதவை, நேரக்கூடியனவல்ல. ஒரு கால் நேருமாயின் அப்போது அவைகளைப் பற்றி ஆலோசித்துக்கொள்ளலாம்.

ரங்கராஜு — புலால் உண்பவனைக் காட்டிலும், சைவன் சிறந்தவனா?

ஆனந்தசுவாமி — எல்லா வகையிலும் சிறந்தவனென்று சொல்வதற்கில்லை. ஆயினும், உணவு விஷயத்திற் சிறந்தவனென்று நிச்சயமாகச் சொல்லலாம். ஒருவனைக் காட்டிலும் மற்றவன் சிறந்தவனென்றாவது குறைந்தவனென்றாவது சொல்வதற்கு எத்தனையோ அம்சங்களைக் கவனிக்க வேண்டும். அவற்றுள் உணவு என்பது ஓர் அம்சம் மாத்திரமே

யாகும். மொத்தத்தில் பார்க்கும்போது புலால் உண்பவர் பலர் சைவர்கள் பலரைக் காட்டிலும் சிறந்தவர்களாக இருக்கலாம். ஆனால், அந்தச்சிறப்புக்குப் புலால் உணவே காரணமாகாது. அது நீங்கலாக, மற்ற அம்சங்களினாலேயே அவர்களுக்குச் சிறப்பு உண்டாயிருக்கும்.

ரங்கராஜு — நீங்கள் சொல்கிற வார்த்தையை எல்லாருமே ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மாமிசம் உண்பதைக் காட்டிலும் மரக்கறி பதார்த்தங்களை உண்பது எப்படிச் சிறப்பாகும்? மரக்கறிகளுக்கும் உயிர் உண்டே?

ஆனந்தசுவாமி — மரக்கறிப் பதார்த்தங்களுக்கும் உயிர் உண்டென்பது உண்மையே. ஆனால், மிருகாதிகளை உண்பதானால் அவைகளுக்கு உண்டாகிற அளவு கஷ்டம் மரக்கறிகளை உண்பதனால் அவைகளுக்கு உண்டாவதில்லை. அது மாத்திரை (அளவு) வித்தியாசத்தைப் பற்றிய விஷயம். எது போலவெனின், மனிதர்களைப் புசிக்கும் கொடுமையைக் காட்டிலும், மிருகங்களைப் புசிக்கும் கொடுமை குறைவென்று எல்லாரும் ஒப்புக்கொள்வதுபோலாகும். அதுபோலவே, மிருகங்களைப் புசிப்பதைக் காட்டிலும் மரக் கறிகளைப் புசிப்பது கொடுமைக் குறைவென்று எல்லாரும் ஒரு காலத்தில் ஒப்புக்கொள்வார்கள். ஆகையால், தர்மத்தை ஆசரிக்கிறவர்கள் மாத்திரமாவது மாமிசம், மீன், முட்டை ஆகிய இவைகளைப் புசிக்காமல் தவிர்க்க வேண்டும்.

ரங்கராஜு — அவர்கள் மாத்திரமென்று ஏன் சொல்லுகிறீர்கள்? அது எல்லாருக்குமே நல்ல தல்லவா ?

ஆனந்தசுவாமி — ஆம் எல்லாருக்குமே நல்லது தான். ஆயினும், தர்மம் பக்தி ஆசாரம் அனுஷ்டானம் ஆகிய இவைகளைக் கைப்பற்றியிருக்கிறவர்கள் ஆத்மாபி விருத்திக்குரிய விஷயங்களில் தலைமை வகித்து மற்றவர்களுக்கு நல்வழி காட்டும் பொருட்டு புலால் மறுக்க வேண்டியது முக்கியமான கடமையாகும். எதுபோல வெனின், ராஜாங்கச் சட்டம் எல்லாரும் தெரிந்திருப்பது நன்மையே யானாலும் வக்கீல்கள் மாத்திரமாவது சட்டம் தெரிந்து நடக்கவேண்டு மென்பதுபோ லாகும்; ஆயினும், சட்டம் தெரியாதென்று ஏவனேனும் தப்பிதமாக நடப்பது குற்றமாகாமற்போகாது.

ரங்கராஜு — குடி விஷயத்தில் என்ன சொல்கிறீர்கள் ? எப்பொழுதாவது கொஞ்சம் மது வுண்பதனால் என்ன தீமை? கள் குடிக்க வேண்டுமென்னும் உத்தேசமில்லாவிட்டால் கடவுள் திராக்ஷைக் கொடிகளை ஏன் படைத்தார் ?

ஆனந்தசுவாமி — சிறுகளவு, சிறுஜாரம், சிறு பொய் முதலான அற்பமான அதர்ம காரியங்கள் செய்வதனால், எவ்வளவு குற்றமோ, கொஞ்சம் கள்ளைக் குடிப்பதனாலும் அவ்வளவு குற்றமென்று நினைக்கிறேன். திராக்ஷைக் கொடிகளை ஏன் படைத்தாரென்று வினவுகிறாய். அந்த வாதம் பயன்படா

தென்பது தெளிவு. விஷமயமாயிருக்கிற கனிதரும் மரங்கள் உலகத்தில் இருக்கின்றன. அவைகளைத் தின்று நாம் சாக வேண்டுமென்றே கடவுள் அவைகளைப் படைக்கவில்லை. அன்றியும், திராக்ஷைகளைத் தின்று திராக்ஷைக் கொடிகளின் பயனை மனிதர் நன்றாக அனுபவிக்கலாமே. அதைவிட்டு, புளிக்க வைத்துக் கள்ளாக்கிக் குடித்து மிருகப் பிராயமாவானேன்?

ரங்கராஜு — தினந்தோறும் சிறிது மது உண்பவர் பலரைக் காட்டிலும் மது மறுத்தார் பலர் விபரீதமான கொள்கைகள் உடையவர்களாய் இருக்கிறார்களே.

ஆனந்தசுவாமி — அதனால் என்ன ஏற்பட்டது? ஒன்றும் ஏற்படாது. புலால் உண்பதைப் போல மது உண்பதும் வாழ்க்கை வியவகார வகைகள் பலவற்றுள் ஒன்றும். மொத்தத்தில் பார்க்கும்போது மது மறுத்தும், விபரீதக் கொள்கைகளுடன் வியவகரிப்பவன் தனக்கு வாய்க்கக்கூடிய நயங்களை இழப்பவனாகலாம். முற்றும் ஆரோக்கியமாக இருக்க விரும்புகிறவனெவனும் மதுமாம்சங்களைத் தவிர்க்க வேண்டும்.

ரங்கராஜு — ஆரோக்கியமாவது என்ன?

ஆனந்தசுவாமி — சரீர சம்பத்து, மனஸ் ஸம்பத்து, தரும நீதி ஆகிய இம் மூன்றும் ஒத்து இசைந்திருத்தலே ஆரோக்கியம். வாத்திய கணத்திலுள்ள

பலவகை இசைக் கருவிகளும் ஒன்ருேடொன்ருெத்து மிளிினமாவதுபோல இம் மூன்றும் ஒத்து இசைந் திருத்தல் வேண்டும். ஓர் இசைக் கருவி பொருந்தா விட்டால் சுருதி கூடாது, அபஸ்வரமும் விகாரமும் தோன்றும். அதுபோல, ஆரோக்கிய தத்துவங்கள் மூன்றனுள் ஒன்று ஏற்றக் குறைவானல் முரண்பாடு உண்டாகும், அனரோக்கியம் விளையும். ஒருவன் சரீராரோக்கியம் மாத்திரம் வாய்ந்து, நல்ல எண் ணங்கள் இல்லாமலும் நீதி நியமங்களில்லாமலும் இருப்பானனல் அவன் போக்கிரியாவன், காலாடி யாவன், சிறைச்சாலை புகத்தக்கவனவன், அல்லது, நன்னடக்கைக்கு ஜாமீன் கொடுக்க வேண்டியவ னவன். ஒருவன் மனச்சம்பத்து மாத்திர முள்ளவ னய் சரீராரோக்கியமும் நீதி நியாயமும் இல்லாதவ னயின், அவன் வஞ்சகனவன், மோசக்காரனவன், பரிதான மேற்பவனவன், விசுவாஸத் துரோகி யாவன், ஜன சமூகத்துக்கு ஒரு பீடையாவன், சீர் பெற்றிலங்கும் எந்த ராஜ்யத்திலும் சிறைச்சாலைக் குப் போகத்தக்கவனவன். ஒருவன் நீதி நியமங்கள் மாத்திரம் மேற்கொண்டு சரீர சௌக்கியமில்லாமலும் நல்ல எண்ணமில்லாமலும் இருப்பானனல் அவன் மதிவலியற்றுப் பித்தர் சாலைக்கு அனுப்பத் தக்கவ னவன். இந்த மூன்று தத்துவங்களும் வேற்றுமைப் படாமல் ஒன்ருேடொன்று பொருந்தி யிருந்தா லொழிய சம்பூர்ண ஆரோக்கியம் எவனுக்கும் ஸித்திக் காது.

ரங்கராஜு — தர்ம விஷயத்தை ஏன் அவ்வளவு வற்புறுத்துகிறீர்கள் ?

ஆனந்தசுவாமி — ஏனெனில், மனிதர்கள் மிருகங் களைப்போல உண்பதும் மலங்கழிப்பதும் மாத்திரமே யல்லாமல், எவ்வளவு அறைகுறையாக வேனும், தட் டித் தடங்கியேனும், உத்தமமான நீதி ஸம்பத்தை அடைய வேண்டுமென ஆசைப்பட்டு முயலுகிறார்கள். நாம் காரியங்கள் செய்வதற்குப் பிரியப்படுவதே யல்லாமல், சரியான காரியங்களைச் செய்யவேண்டு மென்றும் விரும்புகிறோம். ஆனதனாலேயே, மனித னைக் குரங்கினத்தில் பெருமை வாய்ந்தவனெனக் கொள்ளாமல், அதைக் காட்டிலும் எத்தனையோ மடங்குமேம்பட்ட ஜந்துவெனக்கொள்ளல்வேண்டும்.

ரங்கராஜு — ஆயினும், இவ்வுலகில் எப்பொழு தும் ஒருவன் மற்றொருவனுக்குத் துன்பம் விளைத்துக் கொண்டே யிருக்கிறானல்லவா? பிரகிருதி எல்லா விதங்களிலும் எதிரிடையாயும் கடுமையாயு மிருப்பத னால், ஒவ்வொருவரும் ஜீவனத்திற்குப் போராட வேண்டி வருகிறதல்லவா? உலகத்தில் வாழ்க்கை முழுதும், 'நான் தின்கிறேன்', 'நான் தின்னப் படுகிறேன்' என்னும் இரண்டே சொற்களில் அடங் கிப் போகின்றதல்லவா ?

ஆனந்தசுவாமி—மிருக வர்க்கத்தினின்று முதிர்ந்து மானிட வர்க்கம் தோன்றிய ஆதிகாலத்தில் ஏறக் குறைய நீ சொல்கிறதுபோல, ஜீவனம் இருந்தது. அப்பொழுதும், நீ சொல்கிறதுபோல முற்றும்

அப்படியே இருக்கவில்லை. பிற்காலத்தில் நீ சொல்கிற ஸித்தாந்தத்தின் உண்மை வரவரக் குறைந்து போயிற்று. ஆனால், நீ சொல்கிற ஸித்தாந்தம் ஆதியில் உண்மையா யிருந்ததென்று நிரூபிப்பதற்குப் போதிய ஆதாரங்கள் இந்நாளிலும் காணப்பெறும். இதற்குக் காரணமென்னவெனில், மானிட வர்க்கத்தின் உடல் வலியும் மனவலியும் பயிற்சி யுற்றதற்கேற்ப, தர்மவலி பயிற்சி பெறவில்லை. இந்தக் காரணத்தினாலேயே இலக்ஷக் கணக்கான போர் வீரர்களை ஒரே வீச்சில் அழிப்பதற்கென விஷவாயுக்களையும் நோய்க் கிருமிகளையும் இந்நாளில் உபயோகிக்கின்றனர். படையாட்களை மாத்திரமேயல்லாமல், குடிஜனங்களையும் இவ்வாறு கொன்று அழிக்கிறார்கள். ஆனால், சில சமயங்களில் பூமிக்குரிய ஜடத்தன்மை குறைவதனால், அதைச் சூழ்ந்து கொண்டிருக்கிற சுவர்கள் மெலிவுறப் பரலோகத்துக்குரிய அன்புக் கிரணம் சிறிது உட்புகுவதற் காகின்றது. இந்த தர்மத்தன்மைகள் வளர்ந்துகொண் டிருக்கின்றன. இனி வருங்காலத்தில், அநேக ஆண்டுகளுக்குப் பின்னரேனும், ஜனங்கள் கொலைப் பிரியமும் குரூரமும் அற்றவர்களாக இருப்பார்களென்று நாம் திடமாக எண்ணலாம். அப்போது ஸம்பூர்ண ஆரோக்கியம் நிலைகொள்ளும். உடல் வலி மனவலிக்குச் சமானமாக தர்மவலியும் அபிவிருத்தியா யிருக்கும், இப்பொழுதுள்ள முரண்பாடு திரும்பிப்போம். இப்பொழுதோவெனின், தர்ம அனாரோக்கியத்திற்கு உதாரணங்கள் மிக அதிகமா யிருக்கின்றன. அநேக

லக்ஷ ஜனங்களின் உழைப்பைக்கொண்டு ஒருவன் கோடீசுவரன் ஆகிறான், ஒரு நாட்டார் கூசாமல், சிறிதும் வெட்கமின்றி, மற்றொரு நாட்டாரை ஏமாற்றித் தம் நயத்தை வளர்த்திக் கொள்கிறார்கள். சௌகார்கள் கடுவட்டி வாங்கிக் குடியானவர்களுடைய உயிரையே உறிஞ்சி விடுகிறார்கள், வர்த்தகர்கள் ஏழைகளை ஏமாற்றி அபரிமிதமான லாபம் சம்பாதிக்கிறார்கள், மனோஹரமாக நடித்து நம்மை ஆனந்த பரவசமாக்குகிற மயில் தன்னைத் தின்பதற்கு எந்த துராத்மா சுடுவதற்குச் சூழ்ச்சி செய்கிறானோ வென்று பயப்படவேண்டி யிருக்கிறது. ஆனால், பண்டைக் காலத்தில் இருந்த கொடுமைகளை விட இந்தக்காலத்தில் கொடுமைகள் குறைவாகவே இருக்கின்றன. கொடுமை செய்வார் விஷயத்தில் விவேகிகள் கொஞ்சம் உண்மையாகவே இப்பொழுது கோபப் படுகிறார்கள். ஆகையால், தர்மமானது அபிவிருத்தியாகிக் கிரமமான நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது.

ரங்கராஜு — அந்த அபிவிருத்திக்கு நமது ராஜ சட்டங்களும் வக்கீல்களும் துணைப்படுகிறார்களென்று நினைக்கிறேன்.

ஆனந்தசுவாமி (சிரிக்கிறார்) — என்ன பிதற்றல்! வேட்டை யாடுகிறவர்களுக்கும், சௌகார்களுக்கும், லக்ஷாதிகாரிகளுக்கும், வர்த்தகர்களுக்கும், வெடிகுண்டு போடுகிறவர்களுக்கும் மூலாதாரமா யிருப்பவர்கள் வக்கீல்களே. அவர்களைப் பற்றிய மட்டில்,

அவர்கள் உத்தம புருஷர்களாக இருக்கலாம். ஆனால், வக்கீல் தொழில் புரியும்போது நீதியும் ஞாயமும் தர்மமும் நிலை கொள்வதற்கு அவர்கள் துணைப்படுவதில்லை. நீதி குறைந்திருந்த காலத்துச் சட்டத்தையனுசரித்துப் பழைய தீர்மானங்களை உதாரணமாகக் காட்டியும், தன்னயத்தைப் பாராட்டியும் வாதித்து, அவர்கள் தர்மோன்னதிக்குப் பெருந்தடை யாகிறார்கள். அதெல்லா மிருக்கட்டும், வக்கீல்கள் கற்றுள்ள நியாயச் சட்டங்கள் யாவை? ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள், ஒப்பந்தங்கள், ஆக்கிரமங்கள், விவாகம், புத்திர ஸ்வீகாரம், நினையாக்கொலை ஆகிய இவைகளைப் பற்றிய ராஜ சட்டங்கள் மாத்திரமே அவர்களுக்குத் தெரியும். மரத்தின்மீது இலைகள் தோன்றியிருப்பானேன், கடலில் அலைகள் எழுவானேன், நக்ஷத்திராதிகிரகங்கள் முறைப்படி சஞ்சரிப்பானேன், ஸாது தனது பக்தியில் நிலைகொண்டு ஓங்குவானேன் என்பதாதிய தர்மவிதிகளை வக்கீல்கள் அறியார். கொடிய நோய்வாய்ப்பட்டவனும் தப்பிப் பிழைப்போம் என்னும் ஆசையினால் எப்படி ஜீவிக்கிறானென்றும், எல்லா நற்குணங்களைக் காட்டிலும் பரோபகார குணமே ஏன் சிறந்துநிற்கிறதென்றும் அவர்கள் அறியார். முற்காலத்து தர்மத்திற்குரிய சட்டங்களையே வக்கீல்கள் படித்துத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இக்காலத்துக்குரிய தர்மமும் அந்தப் பழைய தர்மத்தினும் மேம்பட்டது. இதற்குரிய சட்டங்களை உணராமல் வக்கீல்கள் செய்யும் நியாய வாதங்களினால் தர்மாபிவிருத்திக்கு அவர்கள் எப்படித் துணைப்படு

வதற்காகும்? தர்மாபிவிருத்திக்கு அவர்கள் துணைப் படுவதானல், நியாயவாத வியவகாரங்களினு லல்லாமல் வேறு வகையிலேயே துணைப்படவேண்டும்.

ரங்கராஜு—அது எப்படியிருப்பினும், பண்டைக் காலத்து இந்துக்கள் தர்மத்தையும் பரலோகத்தையும் வற்புறுத்துவதெல்லாம் முற்றும் பிசகேயல்லவா?

ஆனந்தசுவாமி — அது எப்படி?

ரங்கராஜு — வாலிப விவாகம் செய்ய வேண்டும் என்கிறார்கள், எல்லாரும் கட்டாயமாகக் கலியாணம் செய்துகொள்ளல்வேண்டு மென்கிறார்கள், கணவனை இழந்தவள் கைம் பெண்ணாகவே இருத்தல் வேண்டு மென்கிறார்கள். இதையெல்லாம் எண்ணிப் பாருங்கள். இவை நியாய மென்று சொல்வீர்களா?

ஆனந்தசுவாமி—அந்த விதி முறைகளில் எத்தனை லோபங்கள் இருந்தாலுமென்ன? அவைகளினல் ஏற்பட்ட ஆனந்தானுகூலதாம்பத்தியங்கள் அநேகம் உண்டென்று நீ ஒப்புக்கொள்ள வேண்டும். லக்ஷக் கணக்கான ஸ்திரீகள் விரும்பினும் விரும்பாவிடினும் பலவந்தமாகக் கன்னிகைகளாய் வாழவேண்டு மென்பதில்லாமலும், வெளிப்படையாகவாவது ரகசியமாகவாவது நீதிமுறை கடந்து நடக்கவேண்டுமென்பதில்லாமலும் ஒவ்வொரு ஸ்திரீக்கும் அந்த விதிமுறைகளினல் மணவாழ்க்கை ஏற்பட்டதென்றும் நீ ஒப்புக்கொள்ளலே வேண்டும். ஒரு முறை கலியாணம்

செய்துகொண்டு மணவாழ்க்கையின் இன்பத்தையனு பவித்துக் கைம்பெண்ணானவள் ஒதுங்கி நிற்க, கலி யாணமே யாகாதவள் மணவாழ்க்கை புகுவதற்கு அந்த விதிமுறை அனுகூலமமைத்தது. கைம்பெண் களை இகழ்வதும், அவர்களைத் துன்புறுத்துகிற கடுமை யான ஒழுக்க வகைகளும் நியாயமல்ல வாயினும், அவர்கள் புனர் விவாகம் செய்து கொள்ளக் கூடா தென வற்புறுத்துவது நியாயமே. ஆனால், அது போல, பெண்டிழந்தவர்களும் மறு மணம் செய்து கொள்ளக் கூடாதெனத் தடுத்திருக்க வேண்டும். ஆயுள் பரியந்தம் ஒருவன் ஏக பத்தினி விரதனாய் ஒருத்தியி னிடத்தே அன்பு பூண்டு ஒழுகுவதன் சிறப்பும் பெருமையும் மிக அதிகமே. அதை எடுத் துரைக்க முடியாது. மற்றொரு ஸ்திரீயின் மீது ஆசை கொள்வதற்கு இடந்தரா திருப்பது மிக மேன்மை யானதாகும். மண வாழ்க்கையினால் மனிதர் தெரிந்து கொள்ள வேண்டிய நற்பாடங்களும் லாபமும் மிகப் பெரிதாதலால், ஒவ்வொருவரும் கலியாணம் செய்து கொள்ள வேண்டு மெனக் கட்டாயப் படுத்துவது சரியே. ஆனால் இஷ்டமில்லாதவ ரிருவரைப் பிணைத் துத் தம்பதிகளாக்கலாகாது, மனத்திற்கு இசைந் தவர்களே தம்பதிகளாக வேண்டும். அன்றியும், கணவனை இழந்தவள் மறுமணம் செய்துகொள்ளக் கூடாதெனத் தடுத்துப் பலவந்தமாகக் கைம்பெண் ணாகவே இருக்கச் செய்வதனால் அதிகப் பிரஜாபி விருத்தி இல்லாமல் தடுத்துப் பிரஜோற்பத்தி ஒரு நிலையில் வைப்பதற்காயிற்று.

அதுநிற்க, உலகத்தில் வேறு எந்த தேசத்திலு மில்லாமல், நமது தேசத்தில் மாத்திரமே கோடிக் கணக்கான ஜனங்கள், பிறருடைய எவ்வகையான நிர்ப்பந்தமு மில்லாமல் தாமாகவே மனமொழி மெய் களில் புலால் உண்ணுமல், மரக்கறி பதார்த்தங் களேயே புசித்து ஜீவித்து வந்தார்கள். ஐயோ! இந்தக் காலத்திலோ, சிற்சில பிராமணர்களும் மற்ற வர்களும் புலால் உண்பது பெருமையெனப் பாராட் டிக்கொண்டு ஊழிக்காலமாக நமக்கு வந்துள்ள விலே யில்லா மாணிக்கம் போன்ற நற்பழக்கத்தை அழிக் கப் பார்க்கிருர்கள். இதனுல், பத்தியமான தேக வளர்ச்சி இல்லாமல், ஆருயிரம் வருஷ முதிர்ச்சியால் வந்த தேகலாபம் கெட்டுப் போகின்றது.

ரங்கராஜு — மறு பிறப்பு உண்டென்று இந் துக்கள் நம்புகிருர்களே, அது சரியா ?

ஆனந்தசுவாமி — நமக்கு வாய்த்துள்ள இந்த ஜன்மமே முதலாவதென்றேனும் கடைசியான தென்றேனும் புத்தியுள்ளவனெவனும் நினைக்க மாட்டான். எந்த மதஸ்தனேயானுலும் முக்தி அல்லது மோக்ஷம் என்பது ஒரு சிறிய ஆயுள் பிரமாணத்திற்குள் சாதிக்கத் தக்கதென்று சொல் லத்துணிய மாட்டான். ஒரு ராஜ்யத்திற் கேற்பட்ட பெருந் தொகைக்கடனே ஒரு தலைமுறையில் தீர்க்க முடியாதென, பல தலைமுறைகளில் தீர்ப்பதற்கு ஏற் பாடுகள் செய்கிருர்களல்லவா ? அதுபோல, ஒருவன் பட்டிருக்கிற பாபத் தொகுதி என்னும் கடன் ஒரு

ஜன்மத்திலேயே தீர்க்கமுடியாது. பல ஜன்மங்கள் எடுத்தே அதைத் தீர்க்கவேண்டும். ஆதலால், நம் முன்னவர்கள் இந்த ஜன்மத்திற்கப்பால் பலஜன் மங்கள் உளவெனக் கொண்டனர்.

ரங்கராஜு — மரணத்தினல் எல்லாம் ஒழிந்து போகிற தென்று சிலர் சொல்லுகிறார்களே, அதை மறுப்பது எப்படி? மரணத்தின் உண்மையான தத்துவம் யாது?

ஆனந்தசுவாமி — மரணத்தின் தன்மை இப்படிப் பட்டதென்று உனக்கு எடுத்துச்சொல்வது எனக்குச் சாத்தியமில்லை. ஏனெனில், நீயும் இறந்தவனன்று, நானும் இறந்தவனன்று, இறந்தவனெவனும் திரும்பி வந்து தனது அனுபவத்தைச் சொன்னதில்லை. ஆயினும், நூலாராய்ச்சியினலும், தியானுதி காரியங் களினலும் நான் தெரிந்து கொண்டதை உனக்கு ஒருவாறு சொல்வேன். நாட்டுப் புறத்து பாமரன் ஒருவன் மலைநாட்டு ரெயில் வண்டியில், முன் ஒரு போழ்தும் ஏருதவன், ஏற்றிவைககப்பட்டதாகக் கொள். அந்த ரெயில் கடற்கரையோரத்துப் பட்டண மொன்றிலிருந்து புறப்பட்டு உள்நாட்டுப் பிராந்தி யங்களில் பெரிய வட்டமாக உலவி, திரும்பத் தன் இடத்திற்கு வருவதாகக்கொள். அது மேற்சொல் லியபடி வட்டமாகப்போகிற வழியில் அநேக மலை களைக் குடைந்து உண்டாக்கிய குகை போன்ற வழி களில் போகிறது. அந்தப் பாமரன் நல்ல வெளிப் பிரதேசத்தில் சூரியப் பிரகாசத்தைக் காணும்

போது களிப்புற்றுக் கூத்தாடுவான்; இருண்ட குடைவழி நேர்ந்தால், அவன் எதையும் பார்க்க முடியாதாதலால், அது எங்கேயோ ஒரு பேரிருளில் கொண்டுபோய்ச் சேர்க்குமென நினைத்து மிகுந்த அச்சமுற்று, வண்டியினின்றும் குதித்தோடுவதற்கு எண்ணுவான். ஆயினும், அப்படி அவன் குதித்தோட முடியாமல், நிர்ப்பந்தமாக அந்த ரெயில் வண்டியிலேயே இருக்கவேண்டியவனவன். அந்தக் குடைகாலின் வழியே செல்லும்போதெல்லாம் பயத்தினுல் அவன் மூர்ச்சிக்கலாகிறுன். குடைகாலேத் தாண்டின பின் மூர்ச்சை தெளிந்து அவனுக்கு நல்ல நினைவு வருகிறது. முன்னுல் கண்ட வெயில் வெளிச்சத்தையும் குடைகாலேயும் அவன் தனக்குண்டான மனவதிர்ச்சியினுல் முற்றும் மறந்து போகிறுன். இது எதுபோலவெனின், சில நாளேக்குமுன் நடந்த யுத்தத்தில் வெடிகுண்டினுல் அதிர்ச்சியுற்றவர்களின் நிலேபோ லாகும். அவைகளே யெல்லாம் மறந்து அவன் புதிதாகத் தோன்றும் வெயிலொளியில் களித்துக் கூத்தாடிக்கொண் டிருக்கிறுன். திரும்பவும் மற்றொரு குடைகால் நேர்ந்தவுடனே, முன் போலவே, திகிற்படுகிறுன். முன் நிகழ்ந்த சம்பவங்களெல்லாம் திரும்பவும் நேர்கின்றன.

ஜீவாத்மாவானது அநாதியானதோர் இடத்திலிருந்து புறப்பட்டுச் சுற்றித் திரும்பவும் அவ்வநாதியான இடத்திற்கு வந்து சேர்வதாக நினைத்துக் கொள். அது போகும் வழி மலேயிருப்புப்பாதையிற் செல்லும் ரெயில் வண்டியின் போக்கைப் போன்

றிருக்கிறதாகக் கொள். போகும் வழியிலுள்ள வெளிச்சமான இடங்களே வாழ் நாட்களெனவும், இருள் மூண்ட குடைகால்களே அவ்வாத்மா மறு ஜன்மமெடுப்பதற்கு முன்னுள்ள மரணமும் இடைக் காலமும் ஆகுமெனவுங் கொள். உனது ஆத்மாவே அந்த ரெயிலில் பிரயாணம் செய்கிற நாட்டுப்புறத் துப் பாமரனாக வைத்துக் கொள். அப்படியானால், ரெயில் வண்டி ஒரு குடைகாலோடு நின்றுவிடாது என்று உனக்குத் தெரிகிறதல்லவா? குடைகால்கள் அமைக்கப்பட்டது அந்த ரெயில் வண்டி எளிதில் பிர யாணம்செய்வதற்காகவேஎன்றும்தெரிகிறதல்லவா? அதுபோல, எந்த ஜீவவாழ்க்கையும் மரணத்தோடு முடிவு பெறுவதில்லை. ஆத்மாவானது தன் வழியில் எளிதில் பிரயாணம் செய்யும் பொருட்டே அப் போதைக்கப்போது மரணம் என்பது அமைக்கப் பட்டிருக்கிறது. பழைய தேகம் உழைத்துப் பய னற்றதாகிப் போவதனால் அதைக் களைந்தெறிந்து, நன்றாக உழைக்கக்கூடிய புதிய தேகத்தைப் பெறும் பொருட்டே மரணம் என்பது ஏற்பட்டிருக்கிறது என்னும் உண்மை உனக்கு விளங்கும்.

ரங்கராஜு — மனிதனுக்கு ஆத்மா ஒன்று உளது என்பதற்கு என்ன ருஜு? மனிதன் என்பவன் தேகத்தினால் அமைந்தவனுமல்ல, மனத்தினால் அமைந்தவனுமல்ல, ஆத்மாவே அவன் என்று எப் படிச் சொல்லலாம்? தேகத்தையும் மனத்தையும் கடந்து வடிவமில்லாத ஆத்மா ஒன்று இருக்கின்றதா?

ஆனந்தசுவாமி—மனிதன் என்பவன் தேகமாக இருக்கமுடியாது. அப்படியிருக்குமானால், யுத்தத்திலாவது எரிமலை வெடியினாலாவது கைகளையோ கால்களையோ இரண்டையுமோ இழக்குமிடத்து ராமன் என்பவன் தனக்கும் மற்றவர்களுக்கும் அரையே யரைக்கால் ராமனாக வேண்டும்; அல்லது, முக்கால் ராமனாக வேண்டும். அப்படிப்பட்ட ஆபத்துக்கள் நேர்ந்தபோதிலும் ராமன் தன்னை முழு ராமனாகவே நினைத்துக் கொள்கிறானல்லாமல், ராமனில் ஒரு பகுதியென்று நினைப்பதில்லை; அதுபோலவே, அக்கம் பக்கத்தாரும் அவனை முழு ராமனாகவே மதிக்கிறார்கள். இதுபோலவே, மனமும் மனிதனாகாது. ஏனெனில், ராமன் அயர்ந்த நித்திரையிலிருக்கும் போதும் மயக்கமுற்று நினைவு தப்பி யிருக்கும் போதும் அவனுடைய மனம் விளங்காமல், இருக்கிற இடம் தெரியாமல், அடங்கியிருக்கையில் அவனைப் பிறர் ராமனென்றே வழங்குகிறார்கள். அவனும் தான் ராமனென்றே நினைக்கிறான். அந்த நிலைமை தாண்டின வுடனே அவன் 'நான் அயர்ந்து தூங்கினேன்,' 'நான் நினைவில்லா திருந்தேன்' என்று சொல்கிறான். அக்கம் பக்கத்தாராகிய நாமும் 'ராமன் அயர்ந்து தூங்கினான்,' 'ராமன் நினைவு தப்பியிருந்தான்' என்று சொல்கிறோம். ஆகையால், 'நான்' என்னும் மனிதன் தேகமுமன்று மனமுமன்று, ஆத்மாவே.

ரங்கராஜு—ஒரே ஆத்மா வேறு வேறு தேகங்களில் வியவகரிக்கும்போது அந்த ஆத்மாவே

யென்று எதைக்கொண்டு கண்டு பிடிப்பதற்காகும்? ஆத்மா என்பது முன்னிருந்த தேகத்தின் சூக்ஷ்ம மான கண்ணுக்குப் புலப்படாத பிரதிரூபமா?

ஆனந்தசுவாமி—இது கஷ்டமான கேள்வி. ஆயி னும், ஆத்மா என்பது தேகத்தின் சூக்ஷ்மமான பிரதி ரூபமன்று. இதற்குப் பல காரணங்கள் உள. வாழ்நாளில் ஒருவனுக்கு யானைக்கால் இருந்தால், நீ சொல்கிற கொள்கையின்படி, அவனுடைய ஆத்மா வுக்கும் யானைக்கால் இருக்கவேண்டும். இது நினைக்க முடியாத அசங்கதம், தேகமென்பது ஆத்மா வியவ கரிப்பதற்கு உபயோகித்துக் கொள்கிற வாகனமே யல்லாமல், ஆத்மாவின் வடிவத்திற்கும் அதற்கும் எவ் விதமான சம்பந்தமுமில்லை. ஆகாய விமானி ஒருவ னுடைய தேக வடிவத்திற்கும் ஆகாய விமான வடிவத் திற்கும் எவ்வித சம்பந்தமு மில்லாததுபோலாகும். அன்றியும், ஆத்மா செய்யும் ஜீவ யாத்திரையில் பல பல வடிவங்களை மேற் கொள்ளலாம். ஆகையால், அப்படிப்பட்ட எந்த தேகத்தின் சூக்ஷ்ம வடிவ மென்று ஆத்மாவைச் சொல்வதற்காகும். ஆதலால், நாம் ஒப்புக்கொண்டு பேசுகிற ஆதார நியாயத்தின் படி ஆத்மா அதுவே யென்று கண்டு கொள்வதற்கு ஏற்றவாறு ஒரே மாதிரியான வடிவமுள்ளதாக இருக்கவேண்டும்.

நீ கேட்ட கேள்விக்குச் சரியான உத்தரம் என்னவென்றால், ஆத்மா கண்ணுக்குப் புலப்படா தது; அது வேறு வேறு தேகங்களில் வியவகரிக்கும்

போது தெரிகிற அதனுடைய பழைய வாஸனைகளின லேயே அது எந்த ஆத்மா என்று கண்டுகொள்வதற் காகும். பழைய வாசனையாவது, முற் பிறப்புக் களில் அந்த ஆத்மா செய்த் காரியங்களின லேற் பட்ட சார்பு: இதனல் என்ன தெரிகிறது? ஒருவ னுடைய உறவினரேனும் அக்கம் பக்கத்தாரேனும் அவன் இன்னவன், முன் வேறுவிதமாக இருந்த ஆத்மாதான் இப்பொழுது இவ்விதமாக உடல் எடுத் துக்கொண் டிருக்கிறது என்று தெரிந்து கொள்ள முடியாது. ஏனெனில், ஆத்மாவுக்கு ரூபமில்லை. எந்த உடலிலிருந்த ஆத்மா இப்பொழுது இந்த உடலில் வந்திருக்கிற தென்று தெரிந்து கொள்ளத் தக்கவர்கள் தேவர்களே. ஒரு ஜீவாத்மாவானது பல பல தேகங்களெடுத்து ஜீவ யாத்திரை செய்து முற்றும் பரிசுத்தமாகிக் கடவுளிடம் ஐக்கியமாகும் போது அதனுடைய பழைய வாசனைகளெல்லாம் அற்றுப் போகின்றன. அப்போது அது இன்ன ஆத்மா என்னும் தனி வியக்தி அதற்கு இல்லாமற் போகின்றது. நமது சாஸ்திரங்களின் சித்தாந்தம் இதுவே.

ரங்கராஜு—சாஸ்திரங்களின் மீது சாராமல் தன் மனச்சாக்ஷியின்படியே நடக்கவேண்டுமென்று தோன்றவில்லையா?

ஆனந்தசுவாமி—எனக்கு அப்படித் தோன்ற வில்லை. நிஜமான பக்தியினலும் ஞானத்தினலும் கிரியைகளினலுமே மனச்சாக்ஷி என்பது வியவ

கரிப்பதற் காகும். ஆகையால், உலகத்து வியவ காரங்களையும் சிருஷ்டி, ஸ்திதி முதலிய விஷயங் களையும், ஜீவாத்மாவின் தன்மை. பரமாத்மாவின் தன்மை முதலான விஷயங்களையும் தெரிந்துகொள் ளும் பொருட்டு ஒருவன் தன் குலத்துக்குரிய சாஸ் திரங்களையும், மற்ற பெரிய மதங்களுக்குரிய சாஸ் திரங்களையும் நன்ருகப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போது அவன் பயபக்தி மேற் கொண்டு சாஸ்திர ஆராய்ச்சியினுல் வந்த அறிவு விளக்கத்தினுலும் தன்னுடைய ஆலோசனையினுலும் மற்றவர்களை விசாரித்துத் தெரிந்துகொள்ளும் அனு பவத்தினுலும் தன்னுடைய மனச்சாக்ஷி சரியாக வியவகரிக்கும்படி செய்துகொள்ள வேண்டும். அப் படி மனச்சாக்ஷியை அவன் திடப்படுத்திக் கொள் வானுனல் அது சொல்கிறபடி செய்யலாம். அப் போது சாஸ்திர விதிகளுக்கும் தன் மனச்சாக்ஷி யின் தீர்மானத்திற்கும் முரண்பாடு உண்டானுல், சாஸ்திரங்களைத் தள்ளிவிட்டு மனச் சாக்ஷியின் படியே நடக்கலாம். ஏனெனில், சாஸ்திரங்கள் என் பவை மனச்சாக்ஷி என்னும் கரைக்கு நம்மைக் கொண்டு போய்ச் சேர்க்கத்தக்க படகுகளின் அளவேயாகும். நதியைக்கடந்து அக்கரை சேர்ந்த பின், படகை எவனும் தூக்கிக்கொண்டு போவ தில்லை. ஆனுல், சாஸ்திரங்களையே படிக்காதவனும், சாஸ்திரங்களின் விஷயங்களையே தெரியாதவனும், படகின் உதவியில்லாமல் தானே நீந்திப்போகிற வனைப் போல, சாஸ்திரங்களின் உதவியில்லாமல்,

தானகத் தெரிந்து கொள்ளும் தற்போதம் இல்லாதவனும் மனச்சாக்ஷி என்னும் கரைக்கு இன்னும் போய்ச்சேரவில்லை. ஆகையால், அப்படிப்பட்டவன் சாஸ்திர விதிப்படியே நடக்கவேண்டும். ஞானமில்லாதவன் ஸ்வதந்திரமாக நடக்க முடியாது. ஸ்வதந்திரமாக நடப்பதற்குமுன் ஞானம் சம்பாதித்துக் கொள்வது அவசியம். விமானமோட்டி ஒருவன் பார்த்து, இவன் விமான மோட்டத்தக்க பயிற்சியுள்ளவனென்று, சொல்லுமுன், எவனும் ஆகாய விமானத்திலேறிப் பறப்பதற்கு எவரேனும் இடங் கொடுப்பரா? அதுபோல, சாஸ்திரங்கள் என்ன சொல்கின்றன என்பதை ஒருவன் தெரிந்து கொள்கிற வரையில், சாஸ்திரங்களின் உதவியில்லாமலே தற்போதத்தினல் தெரிந்துகொள்ளும் சக்திவாய்ந்தவனென்று காட்டுகிற வரையில், அவன் தன் மனச்சாக்ஷியின்படி நடப்பதற்கு இடங்கொடுக்கமுடியாது.

ரங்கராஜு — பிரார்த்தனையினல் ஏதாவது பிரயோஜனம் உண்டா? கடவுள் நியாயமாகவும் நீதியாகவும்மல்லாமல் வேறு விதமாக நடக்கக் கூடுமா? தன்னை ஸ்தோத்திரம் செய்து பிரார்த்திக்கிறவர்களுக்கு நன்மையும் ஸ்தோத்திரம் செய்யாதவர்களுக்குத் தின்மையும் செய்வரா?

ஆனந்தசுவாமி — அப்படி இல்லை இல்லை. கடவுள் நீதியே வடிவமாக உள்ளவர். ஸ்தோத்திரங்களினல் மகிழ்வுறவும் மாட்டார், ஸ்தோத்திரம் செய்யாததனல் கோபம் கொள்ளவும் மாட்டார்.

ரங்கராஜு—அப்படியானால், ஸ்தோத்திரங்களும் பிரார்த்தனைகளும் பயனற்றவை யென்று நினைக்கிறீர்களா?

ஆனந்தசுவாமி—இல்லை. சில பிரார்த்தனைகள் உபயோகமானவை, வேறு சில உபயோகமானவை யல்லாத தன்றித் தீமையும் பயக்கத் தக்கவை. பிரார்த்தனைகள் மூன்று வகையாகும். முதலாவது, கொடிய பிரார்த்தனை. அது தன் சத்துருக்கள் நாசமாக வேண்டுமென்று செய்யும் பிரார்த்தனையாம். அது பயனற்றது, தனக்குத் தீமையும் செய்யும். அப்படிப்பட்ட அதர்மமான பிரார்த்தனைகளைக் கடவுள் செவிகொடுத்துக் கேட்கமாட்டார், அப்படிப்பட்ட பிரார்த்தனைகளைச் செய்பவர்களையும் தண்டிப்பார்.

இரண்டாவது, ஒருவன் தனது துக்கம், கஷ்டம், கண்டம் முதலானவைகளைப் போக்கித் தனக்குத் தயவு செய்து ஆரோக்கியம், ஐசுவரியம், ஸம்பத்து, கீர்த்தி முதலியன அளிக்க வேண்டுமென்று செய்யும் பிரார்த்தனையாம். இது தீமையற்ற பிரார்த்தனை; குழந்தை பெற்றோரிடத்து வேண்டிக் கொள்வது போன்றதாகும். இப்படிப்பட்ட பிரார்த்தனையை, யோக்கியதை இல்லாத விடத்து, எவரும் ஈடேற்ற மாட்டார்; ஸம்பத்து கீர்த்தி முதலானவைகளை, அவற்றிற்குரிய யோக்கியதை யுள்ளவர்களுக்கு, அவர் பிரார்த்தனை செய்யவில்லை என்னும் காரணத்தால் அளிக்காமல் மறுக்கவு மாட்டார். ஆனால்,

இந்தக் காரணத்தால் இப்படிப்பட்ட பிரார்த்தனை கள் பயனற்றவை யென்று சொல்லக்கூடாது. தன்னைக் காட்டிலும் எல்லா விதத்திலும் சக்தி வாய்ந்தவர் ஒருவர்மீது சார்ந்து கொள்வதனுல் ஒருவருடைய துக்கங்களுக்கு ஒருவகையான சமனம் நிச்சயமாக ஏற்படும். இப்படிப்பட்ட மனச்சார்பினுல் ஒரு வகைத் தைரியம் தனக்குத்தானே உண்டாகும்; தைரியத்தின் பயனுகக் காரிய ஸித்தி வாய்க்கும், நீராவி யந்திரத்திற்கும் மோட்டார் வண்டிக்கும் அவைகளினின்றுகழிகடையான நீராவியும் புகையும் வெளியேறுவதற்கேற்ற ரக்ஷக கவாடமொன்று வேண்டியே இருக்கின்றது. அதுபோல, மனிதனுடைய மனத்தில் அடைபட்டு வருத்திக்கொண்டிருக்கிற துக்கம் கஷ்டம் முதலியவைகள் வெளிப்பட்டொழிவதற்குத் தெய்வப் பிரார்த்தனை, அழுகை முதலான ரக்ஷக கவாடம் ஒன்று அவசியமேயாகும்.

அன்றியும், அதிக சக்திவாய்ந்தவனெருவனுவது துரைத்தனத்தா ராவது தன்னைத் தாங்குவார் என்னும் நம்பிக்கையினுலேயே ஒருவன் அசாத்திய மாகத் தோற்றக்கூடிய காரியத்தையும் தன் முயற்சியினுல் சாதித்து விடுகிருன். இப்படிச் சாதித்தவர்கள் அநேகர் உண்டு. அவர்கள் நினைத்தபடி பெரியாருடைய ஆதரவும் துரைத்தனத்தாரது ஆதரவும் உற்ற சமயத்தில் வாய்க்கா திருப்பினும், அவர்கள் காரியஸித்தி அடைந்திருக்கிருர்கள். அதுபோலவே கடவுள் தன் பக்கத்தில் இருக்கிருரென்னும் நம்பிக்

கையினுல் ஒருவனுக்கு அபரிமிதமான தைரியமும் உறுதியும் உண்டாகின்றன. அவ்வுறுதியினுல் அவன் அசாத்தியமான காரியங்களையும் சாதிக்கலாகிருன், மலைகளையும் பெயர்க்கலாகிருன்.

மூன்ரும் வகையோ வெனின், தனக்கு அறிவுப் பெருக்கம் உண்டாகவேண்டு மென்றும் எல்லா மக்களும் க்ஷேமமடைய வேண்டுமென்றும் செய்யும் பிரார்த்தனை. இப்படிப்பட்ட பிரார்த்தனைகளினுல் ஒரு நாட்டிற்கு நேரத்தக்க க்ஷாமத்தில் க்ஷேமம் விளைப்பதற்காகும், இரண்டு நாட்டாருக்கு நேரும் யுத்தத்தைத் தடுப்பதற்காகும். ஏனெனில், இந்தப் பிரார்த்தனைகளில் தன்னல நாட்டம் இல்லை. உபநிஷத்துகள் கோஷிக்கிற "ஓ ஈசா! மாயையினின்றும் ஈடேற்றி எனக்கு சத்தியஞானம் அளிப்பாயாக, அஞ்ஞானத்தை அழிப்பாயாக, நித்தியத்வம் அளிப்பாயாக" என்னும் வார்த்தைகளும் இப்படிப்பட்ட பிரார்த்தனையேயாம். இந்தப் பிரார்த்தனையில் தன்னயம் தோன்றினும், தன்னய நாட்டமென்னும் இழிவான மலினத்தன்மை இல்லாமையால் இது உத்தமமான பிரார்த்தனையாகும். வினைக்கும் விதிக்கும் கடவுள் அதிபதியா யிருப்பதனுலும், இரக்கத்திற்கு இருப்பிடமா யிருப்பதனுலும் இம் மூன்ரும் வகைப் பிரார்த்தனைக்கு அவர் இணங்குவது இயல்பு.

ரங்கராஜு — மாபாவியாய் இருப்பவ ஞெருவன் கடவுளைச் சரணமாக அடைந்து தன்னுடைய பாவங்

களை யெல்லாம் மன்னித்துத் தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டால் போது மென்று பகவத் கீதையிலும், நம்முடைய மற்ற சாஸ் திரங்களிலும், இதர சமய நூல்களிலும் சொல்லப்பட் டிருக்கிறதே. இது ஒருவகைப் பக்ஷபாதம் அல்லவா?

ஆனந்தசுவாமி — அது பக்ஷபாதமன்று. நீ கட வுளை திரிகரண சுத்தியாகச் சரணமடைந்து, செய்த பாபங்களுக் கெல்லாம் பச்சாத்தாபப்பட்டு, கடவுள் விதித்த நேர்மையான வழிகளிலேயே இனி நடப்ப தாகப் பிரமாணம் செய்தால் பாபங்களெல்லாம் ஒழிந்து புண்ணியமே தொடங்கும். அதற்கு முன் செய்த பாபங்கள் பரிகாரமாகி, ஆத்மா சுத்தப்பட்டு, கடவுளுடன் ஐக்கியமாவதற்கு எத்தனை காலம் செல்லுமென்ப தொன்றே விசாரமாகும். பாபங்கள் பரிகாரமாவது நிச்சயமாயினும் எத்தனை நாளில் ஆகுமென்று நாம் சொல்ல முடியாது. ஒருவன் கடவுளைச் சரணமடைந்தவுடனே அவனுடைய பாபங் களை யெல்லாம் பரிகரித்து அவனைக் காப்பாற்றுகிறே னென்று கடவுள் சொல்லவில்லை யல்லவா? அவன் உண்மையில் பச்சாத்தாபப்பட்டு நற் காரியங்கள் செய்யத் தொடங்கித் தன்னுடைய திரிகரண சுத்தியை நிரூபித்தாலன்றி, அவனுடைய பாபங்களைப் பரி கரிப்பதாகக் கடவுள் சொல்லவில்லையே.

ரங்கராஜு — கடவுள் விதித்த நன்னெறியில் நடப்பதற்கு ஒருவன் என்ன செய்ய வேண்டும்?

கையினல் ஒருவனுக்கு அபரிமிதமான தைரியமும் உறுதியும் உண்டாகின்றன. அவ்வுறுதியினல் அவன் அசாத்தியமான காரியங்களையும் சாதிக்கலாகிருன், மலைகளையும் பெயர்க்கலாகிருன்.

மூன்ரும் வகையோ வெனின், தனக்கு அறிவுப் பெருக்கம் உண்டாகவேண்டு மென்றும் எல்லா மக்களும் க்ஷேமமடைய வேண்டுமென்றும் செய்யும் பிரார்த்தனை. இப்படிப்பட்ட பிரார்த்தனைகளினல் ஒரு நாட்டிற்கு நேரத்தக்க க்ஷாமத்தில் க்ஷேமம் விளைப்பதற்காகும், இரண்டு நாட்டாருக்கு நேரும் யுத்தத்தைத் தடுப்பதற்காகும். ஏனெனில், இந்தப் பிரார்த்தனைகளில் தன்னல நாட்டம் இல்லை. உபநிஷத்துகள் கோஷிக்கிற "ஓ ஈசா! மாயையினின்றும் ஈடேற்றி எனக்கு சத்தியஞானம் அளிப்பாயாக, அஞ்ஞானத்தை அழிப்பாயாக, நித்தியத்வம் அளிப்பாயாக" என்னும் வார்த்தைகளும் இப்படிப்பட்ட பிரார்த்தனையேயாம். இந்தப் பிரார்த்தனையில் தன்னயம் தோன்றினும், தன்னய நாட்டமென்னும் இழிவான மலினத்தன்மை இல்லாமையால் இது உத்தமமான பிரார்த்தனையாகும். வினைக்கும் விதிக்கும் கடவுள் அதிபதியா யிருப்பதனலும், இரக்கத்திற்கு இருப்பிடமா யிருப்பதனலும் இம் மூன்ரும் வகைப் பிரார்த்தனைக்கு அவர் இணங்குவது இயல்பு.

ரங்கராஜு — மாபாவியாய் இருப்பவ னெருவன் கடவுளைச் சரணமாக அடைந்து தன்னுடைய பாவங்

களை யெல்லாம் மன்னித்துத் தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டால் போது மென்று பகவத் கீதையிலும், நம்முடைய மற்ற சாஸ்திரங்களிலும், இதர சமய நூல்களிலும் சொல்லப்பட்டிருக்கிறதே. இது ஒருவகைப் பக்ஷபாதம் அல்லவா ?

ஆனந்தசுவாமி — அது பக்ஷபாதமன்று. நீ கடவுளை திரிகரண சுத்தியாகச் சரணமடைந்து, செய்த பாபங்களுக் கெல்லாம் பச்சாத்தாபப்பட்டு, கடவுள் விதித்த நேர்மையான வழிகளிலேயே இனி நடப்பதாகப் பிரமாணம் செய்தால் பாபங்களெல்லாம் ஒழிந்து புண்ணியமே தொடங்கும். அதற்கு முன் செய்த பாபங்கள் பரிகாரமாகி, ஆத்மா சுத்தப்பட்டு, கடவுளுடன் ஐக்கியமாவதற்கு எத்தனை காலம் செல்லுமென்பதொன்றே விசாரமாகும். பாபங்கள் பரிகாரமாவது நிச்சயமாயினும் எத்தனை நாளில் ஆகுமென்று நாம் சொல்ல முடியாது. ஒருவன் கடவுளைச் சரணமடைந்தவுடனே அவனுடைய பாபங்களை யெல்லாம் பரிகரித்து அவனைக் காப்பாற்றுகிறேனென்று கடவுள் சொல்லவில்லை யல்லவா ? அவன் உண்மையில் பச்சாத்தாபப்பட்டு நற் காரியங்கள் செய்யத்தொடங்கித் தன்னுடைய திரிகரண சுத்தியை நிரூபித்தாலன்றி, அவனுடைய பாபங்களைப் பரிகரிப்பதாகக் கடவுள் சொல்லவில்லையே.

ரங்கராஜு — கடவுள் விதித்த நன்னெறியில் நடப்பதற்கு ஒருவன் என்ன செய்ய வேண்டும் ?

ஆனந்தசுவாமி — வெற்றி தோல்விகளையும் கௌரவா கௌரவங்களையும் பாராமல், தான் செய்கிறேன் என்னும் அபிமானம் சிறிதுமின்றி, ஒருவன் தன் தர்மத்தை (கடமையை) நடத்தவேண்டும். அவன் செய்யும் காரியம் ஒவ்வொன்றையும், யஜ்ஞமென நினைத்து, ஈசுவரார்ப்பணம் பண்ணவேண்டும். கர்மா செய்வதில் முயற்சி மாத்திரமே அவனுடைய காரியமாக இருக்கவேண்டுமல்லாமல், அதன் பயன்களைக் குறித்து அவன் சிறிதும் கவலைப்படக் கூடாது. எல்லா ஜீவராசிகளின் க்ஷேமத்தைக் கருதியே அவன் ஒவ்வொரு காரியமும் செய்யவேண்டும். அவன் செய்ய வேண்டிய காரியங்களெல்லாம் முடிந்தபின் அவனுக்கு இயமனின் ஓலை வரும்போது அவன் சிறிதும் அச்சப்படக்கூடாது. குழந்தையாயிருந்தபோது தாயின் மடியில் படுத்து உறங்கியது போல அவ்வளவு சந்தோஷமாகவும் அமைதியாகவும் அவன் மரணம் மேற்கொள்ள வேண்டும். அவன் இரண்டு விதமாக முக்தி பெறலாம். அவன் மனம் விரிவுற்று மேலும் மேலும் பெருகிப் பிரபஞ்சம் முழுவதையும் தழுவத் தக்கதாகிக் கடவுளோடு ஐக்கியமாகலாம்; அல்லது, தான் என்பதை வரவர ஒடுக்கிக்கொண்டு மேலும் மேலும் சிறியதாகித் தான் என்பதே அறவொழிந்து பிரபஞ்சத்தோடு ஒன்றித்துக் கடவுளோடு ஐக்கியமாகலாம்.

ரங்கராஜு — மனமாரவல்லாமல், ஒருவன் அறியாமற் செய்கிற பாபங்கள் என்னவாகும்?

ஆனந்தசுவாமி — அறியாமற் செய்கிற பாபங்கள் மோக்ஷத்தில் கணிக்கப்பெறு. இந்த ஆதாரத்தைக் கொண்டே சமயக் கொள்கைகள் எல்லாம் வியவகரிக்கின்றன.

ரங்கராஜு — யாகம் செய்வதாகப் பாசாங்கு பண்ணி நல்ல நெய்யை நெருப்பில் வார்க்கிற வீணை வழக்கங்களை நாம் தவிர்க்க வேண்டாமா?

ஆனந்தசுவாமி — நெய்யை நெருப்பில் வார்ப்பதில் கடவுளுக்கேனும் இயற்கைக்கேனும் விரோதம் ஒன்றுமில்லையே. இயற்கையில் என்ன காண்கிறாய்? கோடிக்கணக்கான ரூபாய் விலை மதிக்கத்தக்க சக்தியை நக்ஷத்திரங்கள் நிமிஷந்தோறும் எரித்துச் செலவழிக்கின்றன. எதையும் பிரயோஜனப் படுத்த வேண்டுமென்னும் அற்பத்தனமான கருத்து அவைகளுக்கு இருக்கின்றதா, இல்லை. ஆகையால் இந்த நெய்த்துளிகளைக் குறித்து நீ ஏன் துக்கிக்கின்றாய்? எதையும் பிரயோஜனப் படுத்திக்கொள்ள வேண்டுமென்று அதிகமாக நினைக்கிறவன் குறுகிய மனம் உடையவனாய் மானிட தரகதிக்குக் கீழ்ப்பட்டவனவன்; கதைகளில் எறும்புகள் பொன் தோண்டிய கதியாவன்.

ரங்கராஜு — ஸ்ரீகிருஷ்ண பகவானையும் பகவத்கீதையையும் நீங்கள் பெரிதும் பாராட்டிப் பின்பற்றுகிறதாகத் தோன்றுகிறது.

ஆனந்தசுவாமி — ஆமாம். கீதாசாரியரே நமக்கு உற்ற துணை. கீதா வாக்கியங்களின்படி நடந்தால்

நமக்கு முக்தி கிடைக்கும். அவை வெல்லத்துக்குள் வைத்து மூடிய வேப்பம் விழுதல்ல. உண்மையில் அவை இனிமையான அமிருதமேயாகும். அந்த அமிருதம் ஒழுக்க முறைகளிலும் தர்ம விதிகளிலும் பொதியப்பெற் றிருக்கிறது. அந்த தர்ம விதிகள் பார்வைக்குக் கஷ்டமெனவும் அசாத்திய மெனவும் தோன்றும். ஆனல், சாதிக்கும் பக்ஷத்தில் ஞான முள்ளவன் செய்யத்தக்க இன்றியமையாத காரியங் களே யெனத் தெளிவுபடும்.

ரங்கராஜு — நான் அபசாரமாகப் பேசுகிறே னென்று நினைக்காமல் என்னை மன்னிக்கவேண்டும். கிருஷ்ண பரமாத்மா செய்த காரியங்கள் பலவற்றை ஜனங்கள் நிந்திக்கிருர்களே. அவைகளுக்குத் தக்க சமாதானம் சொல்வீர்களாக?

ஆனந்தசுவாமி — எனக்குத் தெரிந்த வரையில் சமாதானம் சொல்லப் பார்க்கிறேன். அந்த நிந்த னீயமான காரியங்கள் யாவை?

ரங்கராஜு — கிருஷ்ணன் குழந்தையா யிருக்கும் போது வெண்ணெய் திருடினரென்றும், திருட னெரு வன் தெய்வமாக மாட்டானென்றும் சொல்கிருர்கள்.

ஆனந்தசுவாமி — நமது இருதயம் மிக பந்தோபஸ் தாகப் பாதுகாத்து வைக்கப்பட் டிருந்தபோதிலும், அதைக் கடவுள் திருடுகிருர், அதனல் அவருடைய தெய்வத் தன்மைக்கு லோபம் இல்லை. அன்றியும், எந்த ஸ்திரீகளின் வெண்ணெயைக் கிருஷ்ணன் திருடினரோ அந்த ஸ்திரீகள் தமது வெண்ணெயை

அவர் வந்து திருடிக் கொண்டு போகச் சம்மதித் திருந்தார்கள்; அவர் அப்படிப்பட்ட லீலை செய்ய வேண்டுமென்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். ஆதலால், அவர் வெண்ணெய் எடுத் தது திருட்டெனத் தகாது. மற்றும், கிருஷ்ணனே ஸர்வேசுவரனுக அவதரித்த குழந்தை. சாமானிய மாக எந்தக் குழந்தையும் பொருள் விஷயத்தில் 'எனது' 'உனது' என்னும் உரிமையை இயற்கையில் பாராட்டாது. பெரியவர்களாகிய நாமே அவ்வித மான வேற்றுமை பாராட்டிக் கெட்டு அழிகிறோம்.

ரங்கராஜு—அவருக்கு 16,008 மனைவியர் இருந் தனராமே.

ஆனந்தசுவாமி (நகைக்கிறார்)— அது அர்த்தாலங் காரமாகச் சொல்லிய சங்கியையாகும். கிருஷ்ணன் என்பவர் எல்லா ஸ்திரீகளுக்கும் உரிய விசுவ பர்த்தா என்பதைக் குறிப்பதற்காகவே அந்தச் சங் கியை சொல்லப்பட்டது. அது எதுபோலவெனின், எல்லாச் சமயக் கோட்பாடுகளிலும் கடவுள் விசுவ பிதா எனக் கொண்டாடப்படுவது போலாகும். எல் லாக் கொள்கைகளுக்கும் கடவுள் ஸ்தூலத்தில் எப் படி பிதாவாக மாட்டாரோ அப்படியே, கிருஷ்ணன் எல்லா ஸ்திரீகளுக்கும் ஸ்தூல கணவன் ஆக மாட்டார்.

ரங்கராஜு — விவாகமாகி யிருந்த ராதா என் பவளை அவர் ஏமாற்றி இழுத்துக் கொண்டு போனு ராமே?

ஆனந்தசுவாமி — ராதையின் சரித்திரமும் உருவகமாகச் சொல்லிய கதையேயாம். ராதையே ஆத்மா, அவளுடைய கணவனே உலகம், கிருஷ்ணனே கடவுள். மற்ற எல்லா சாதுக்களையும் முனிவர்களையும் போல ராதையும் மாறிமாறி உலகப்பற்றினுலும் தெய்வப்பற்றினுலும் இழுக்கப் பெறுகிருள். முடிவில் உலக மாயையினின்றும் தப்பித்துக்கொண்டு கடவுளை அடைகிருள். அவள் கணவனை விட்டோடிக் கிருஷ்ணனை யடைந்து சுகித்தாள் என்பதற்கு அர்த்தம் அதுவே.

ரங்கராஜு — ஜயத்ரதனை வஞ்சித்துக் கிருஷ்ணன் தமது சக்கரத்தை வானத்தில் வீசிச் சூரியாஸ்தமனம் ஆகியதுபோலக் கற்பனை செய்து அவனை மாய்ப்பதற்கு வழி வகுத்தாராமே.

ஆனந்தசுவாமி — கடவுளே கிருஷ்ணனுக அவதரித்துள்ளாரென்றும், பாண்டவர்களாகிய தனது சத்துருக்கள் தர்மமாகவும் நியாயமாகவும் நடப்பதனுலே அவர்களுக்குக்கிருஷ்ணன் துணைப்பட்டிருக்கிருரென்றும் ஜயத்ரதனுக்குத் தெரியும். அர்ஜுனனுக்குக் கடவுள் சகாயம் செய்கிருரெனத் தெரிந்தே ஜயத்ரதன் குழந்தையாகிய அபிமன்யுவைக் கொன்ருன்; சூரியாஸ்தமனத்திற்கு முன் தன்னைக் கொல்வதாக அர்ஜுனன் செய்துள்ள சபதத்தினின்றும் தப்பித்துக் கொள்வதற்காக அப்படிச் செய்தான். அர்ஜுனன் செய்துள்ள சபதத்தை அவன் நிறைவேற்றுவதற்குக் கடவுள் துணைப்படாமற் செய்தே

னென்னும் பெருமை பாராட்டும் பொருட்டு ஜயத்ரதன் வேண்டுமென்றே கடவுளுக்கு நேர் எதிரிடைசெய்யத் துணிந்தான். கடவுளுக்கு எதிரிடை செய்யத் துணிந்த இந்த ஜயத்ரதன உண்மையான சூரியாஸ் தமனம் இன்னது, போலியான சூரியாஸ்தமனம் இன்னது என்று தெரிந்துகொள்ளும் விவேகமில்லாத மூடன் என்று உலகத்திற்கு அறிவிக்க வேண்டி, கிருஷ்ணன் அப்படிச் செய்தார். கடவுளை எதிர்த்து வெல்வேனென்று முன்வருகிற அக்கிரமக்காரனை மானிடனுடைய மூடத்தனத்தையும் அசக்துவத்தை யும் உலகோர்க்கு எடுத்துக் காட்டும் பொருட்டே கிருஷ்ணன் அவ்வாறு செய்தார்.

ரங்கராஜு—பயங்கரமான மகா பாரத யுத்தத் தைக் கிருஷ்ணன் மூட்டிவைத்தாராமே.

ஆனந்தசுவாமி—கௌரவமாகச் சமாதானப் படுத்துவதற்குக் கிருஷ்ணன் தம்மாலியன்ற வரை யில் முயன்றார். பாண்டவர்களுக்கு நியாயமாக ராஜ் யத்திற் பாதி கிடைக்கவேண்டி யிருந்தாலும் அதை யொழித்து அந்தப் பாண்டவர்கள் ஐவரும் நிவசிப்ப தற்கு ஒரே ஒரு வீடு மாத்திரமாவது கொடுக்கும்படி அவர் மன்றாடிக் கேட்டார். ஊசி முனையளவு தரை கூடத் தரமாட்டே னென்று துர்யோதனன் மறுத்த பின்னரே, கிருஷ்ணன் இனிப் போர் புரிவதே சரி யெனச் சார்ந்தார். அந்த நிலைமையில் அப்படிப் பட்ட கோரமான அதர்மத்திற்கு உட்பட்டு அக்கிர மத்தைப் பலப்படுத்துவதைக் காட்டிலும், போர்

புரிவதே எவருக்கும் கர்த்தவ்யமாகும். நீ வக்கீலாக இருக்கிறாயல்லவா? உன்னுடைய கக்ஷிக்காரன் ஒருவன் அப்படிப்பட்ட நிலைமையில் இருந்தால் அந்த அநீதிக்கு உட்பட்டுத் தலை குனிந்துகொண் டிராமல் கடைசிவரையிற் போராட வேண்டுமென்று நீ அவனுக்கு ஆலோசனை சொல்லியிருப்பாய்.

ரங்கராஜு — தம் பிள்ளைகள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுச் சாகும்படி கிருஷ்ணன் ஏன் விட்டார்?

ஆனந்தசுவாமி — அவர் கடவுளானமையின், எல்லார் விஷயத்திலும் ஒரே மாதிரியாக நடந்துகொண்டார். அவருடைய பிள்ளைகள் துர்மார்க்கர்களாகவும் சண்டைக்காரர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் ஒருவரோ டொருவர் போரிட்டுப் பாழானார்கள். கௌரவர்கள் அழிந்து போகும்படி அவர் விட்டது போலவும், நீதிவாய்யுள்ள அரசன் தனது வழக்கு சரியானதாக இல்லாத விடத்து, அதைத் தனக்கு விரோதமாக நீதிச்சாலையில் நியாயாதிபதிகள் தீர்மானிக்க விடுவதுபோலவும், தம் மக்கள் அவ்வாறு மாண்டு போகும்படி கிருஷ்ணன விட்டார்.

ரங்கராஜு — அர்ஜுனன் தன் சத்துருக்களின் விஷயத்தில் இரக்கப்பட்டு அவர்களைக் கொல்ல மாட்டேனென்று சொல்லியது மிகப் பெருந்தன்மையாயிருக்க, கிருஷ்ணன் அவனை ஏளனம் பண்ணி அவனுடைய எண்ணம் இழிவானதென ஏன் இகழ்ந்து தடுத்தார்?

ஆனந்தசுவாமி — ஏனெனில், அது துர்மதியினுல் உண்டான எண்ணம், அது சரியானதன்று. துர்யோததனனுக்குச் சகாயமாகப் பல அரசர்கள் படைத் துணை கொண்டுவந்தார்க ளல்லவா? அந்தப் படைகளில் இலக்ஷக் கணக்கான குடிஜனங்கள் ராஜ விசுவாசத்தையும் கடமையையும் மேற்கொண்டு போர்புரியவந்திருந்தார்களல்லவா? நிரபராதிகளான அந்த இலக்ஷக்கணக்கான ஜனங்களைக் கொல்வதற்கு அர்ஜுனன் மனம் கூசவில்லை. தன் சுற்றத்தாரைக் கொல்வதற்கு மாத்திரம் மனம் கூசி அவன் இரக்கப்பட்டான். அந்தச் சுற்றத்தார் யாவர், துர்மார்க்கனுன துர்யோதனனும் மற்றவர்களுமே யல்லவா? அவர்கள் தமது அக்கிரம நடவடிக்கையினுல் அந்த யுத்தத்திற்கு மூலகாரண மாவர்.

அவர்களன்றி, தனக்கு ஆசிரியராக இருந்த துரோணரையும் பீஷ்மரையும் கொல்லவேண்டுமே யென அவன் கூசினுன். அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? துர்யோதனுதியருடைய அநீதியையும், துரௌபதிக்கு அந்த துர்மார்க்கர்கள் செய்த தௌர்ஜன்யத்தையும் கண்டு காணுததுபோல வாளா இருந்து அவர்களை ஆதரித்தவர்கள்.

தர்மத்தையும் நீதியையும் நிலை நிறுத்தும் பொருட்டுப் போர்புரியாமல் அர்ஜுனன் யுத்தத்தில் எல்லாரும் இறந்துபோனுல் பிதுருக்களுக்குப் பிண்ட சிராத்தம் இல்லாமற்போமே யெனக் கவலைப்பட்டு, உறவினரையும் ஆசிரியர்களையும் கொல்லத் துணிய

மாட்டேனென்ருன். அந்தப் பிதுருக்கள் எப்படிப் பட்டவர்கள்? தர்மத்தையும் நீதியையும் நிலைநிறுத்த வேண்டுமென்னும் க்ஷத்திரிய தர்மத்தைப் பெரிதாகப் பாராட்டத் தக்கவர்களே யல்லாமல், சிரார்த்தம் பண்ணிச் சமர்ப்பிக்கும் அன்னபிண்டத்தைப் பெரிதாகப் பாராட்டுபவர்களல்ல.

போரில் புருஷர்கள் இறந்துபோனல், அவர்களுடைய மனைவியர்கள் கற்புநிலை குலைந்து கெட்டுப் போவார்களே யெனக் கவலையுற்று அவர்களுடைய மானத்தைக் காப்பாற்றுவதற்குக் கணவர்களை உயிரோடுவைக்க வேண்டுமெனக் கருத்துக் கொண்டு அவன் போருக்குப் பின்வாங்கினன்.

நிராயுத பாணியாகச் சத்துருக்களை எதிர்த்து அவர்களுடைய கைப்பாணங்களினுற் சாவதே நலமெனக் கூறினன். இப்படிப்பட்ட சத்திய ஆக்கிரகம் பூணுவது க்ஷத்திரியனுகப் பிறந்த அர்ஜுனனுடைய இயல்புக்கு ஒவ்வாது.

இப்படிப்பட்ட ஆக்ஷேபணைகளும் காரணங்களும் அவைகளினு லுண்டான மனப்பான்மையும் தவறெனக் கிருஷ்ணன் எடுத்து இடித்து உரைத்தார். முடிவில், அர்ஜுனனே தனது கொள்கைகள் தவருனவை யெனத் தேர்ந்து தெளிந்தான். பகவத் கீதையில் கிருஷ்ணன் போதித்துள்ளதைக் காட்டிலும், உத்தமமான தத்துவ ஞானம் எவருக்கும் எக்காலத்தும் உலகோர்க்கு உபதேசித்ததில்லை. இத்

தனை நேரமாக நான் உன்னோடு பேசிக்கொண்டிருக்கிறேன். உண்மை உரைக்கின், பேச்சினல் மனம் உறுதிப்படாது, மோக்ஷமும் வராது; குலைக்கிற நாய் கடிக்காது; பேச்சுப் பேசுகிறவன் முக்தி பெருன்; பேசாமல் மௌனமாகத் தியானத்தில் ஆழ்ந்திருக்கிற முனிவனே முக்தி பெறுவானென்று நமது முன்னோர்கள் மிக்க அறிவோடு மொழிந்திருக்கிறார்கள்.

ரங்கராஜு — மௌனத்தினல் முக்தி வாய்க்குமா?

ஆனந்தசுவாமி — பேசாமை யெல்லாம் மௌனமாகாது. ஊமையா யிருக்கிறவன் ஒருவன் வாய் பேசாததனல் முக்தி பெறமாட்டான். நிஜமாக நன்மை அடைய வேண்டுமாயின், வாக்கு வல்லமையினல் பிரகாசிக்கக்கூடிய சக்தியும் சந்தர்ப்பமும் வாய்ந்திருக்க, ஒருவன் அதைத் தவிர்த்துத் தானகை விரும்பி மேற்கொள்ளும் மௌனவிரதமே முக்திக்குச் சாதனமாகும். தேக பலம் நிரம்பி, பரஸ்திரீ கமனத்திற்கு வேண்டிய அனுகூலங்களும் வாய்ந்தவனொருவன் அவ்வழிச் செல்லாமல், இந்திரியங்களை அடக்கிக் கொள்வதே சிறப்பாம் அல்லவா, மௌனமும் அது போலவேயாம். சில விஷயங்களைப் பற்றி வாதிக்க வேண்டு மென்று நீ விரும்பியதனல் நான் இத்தனை நேரம் உன்னோடு பேசினேன். ஆத்ம ஸாம்ராஜ்யம் பெறுவதற்காக மோன மார்க்கத்தைக் கைக்கொள்ளு முன், பேச்சினற் பயனில்லையென்று ஒருவன் திடமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென நம் முன்னோர் சொல்லுவர்.

ரங்கராஜு—மோன மார்க்கத்தின் பெருமையை எனக்கு யார் காட்டவல்லார்?

ஆனந்தசுவாமி — எனது குருமூர்த்தி யாகிய பிரம்மானந்த யோகி காட்டுவார். அவர் இப்பொழுது ஆவடியில் இருக்கிறார்; அவர் அங்கே இன்னும் ஒரு மாதம் இருப்பார்.

ரங்கராஜு—அவரைப்பார்த்துஎனக்குக்கொஞ்ச மெஞ்சம் இருக்கிற சந்தேகங்களையும் களைந்து கொள்ளவேண்டும். மதுமாமிசாதிகளை விட்டொழிக்க வேண்டு மென்றும், என் வீட்டுக்குள்ளே அவை வரக்கூடா வென்றும் அநேகமாகத் தீர்மானித்து விட்டேன்.

ஆனந்தசுவாமி — நல்லது. ஆனால், மனைவி மக்கள் முதலானவரை அவ்விஷயத்தில் நீ பலவந்தப் படுத்தாதே. அது தர்மரீதியாக ஒப்புக் கொள்ளத்தக்க தல்ல. பலவந்தமாகச் செய்கிற சீர்திருத்தம் பயன் படாது. பலவந்தம் செய்வதனால் மற்றவர் உனக்கு இணங்குவது போலப் பாசாங்கு செய்வதற்காகும்; பாசாங்கான நடவடிக்கை வெறுக்கத்தக்கது. அப்படி இல்லையெனின், திடீரென அவர்கள் முரண் பட்டு வெடிப்பதுபோலப் பிளவுபடுவார்கள். ஹித போதனை செய், பலவந்தமாகத் திருத்த முயலாதே.

ரங்கராஜு—மதுவும் மாமிசமும் என் வீட்டுக்குள் வரக்கூடாதென்று நான் கண்டிப்பாகத் தடுக்கக் கூடுமல்லவா?

ஆனந்தசுவாமி — நீ தடுக்கக்கூடு மென்பதும் சரியே. ஆனால், உன்னைப்போல உன் மனைவியும் நினைக்கும்படி இதபோதனைகளினால் அவளுடைய மனத்தைத் திருப்பு. மதுமாமிசாதிகளினால் விளையும் தீப்பயன்களை அவளுக்கு எடுத்து ஓது. உன் வீட்டுக்குள் மதுமாமிசாதிகள் வழங்கக்கூடாதென நீ மறுக்கலாம். ஆனால், மதுமாமிசாதிகளினால் விளையும் பயனையும் அவைகளைத் தவிர்த்து மரக்கறிப் பதார்த்தங்களினால் விளையும் பயனையும் எடுத்துரைத்தபின் அவ்விரண்டினுள் அவள் எதைக் கைக்கொள்வதற்கு இஷ்டப்படுகிறாளோ அப்படிச் செய்வதற்கு இடங்கொடு. கிருஷ்ணபகவானும் அர்ச்சுனனைப் பார்த்து, தர்மயுத்தம் புரிவதனால் விளையும் பயனையும் அதற்குப் பின்வாங்குவதனால் விளையும் பயனையும் எடுத்தோதி, 'அவ்விரண்டினுள் எது நல்லதெனத் தெரிந்து செய்கிறாயோ அப்படிச் செய்' என்று சொல்லினரேயல்லாமல், போர் புரியும்படி அர்ச்சுனனைக் கட்டாயப்படுத்தவில்லை என்பதை நினைத்துப் பார். ஏனெனில், ஒரு காரியம் செய்வதனால் உண்டாகத்தக்க பிரயோஜனம் தன் மனமாரத் தானே தெரிந்து செய்வதனாலேயே நன்கு ஏற்படும்.

ரங்கராஜு — நீங்கள் சொல்கிற விஷயம் தெரிந்தது. என் வீட்டில் மதுமாமிசாதிகளை விலக்க வேண்டும். மரக்கறிப் பதார்த்தங்களையே வழங்க வேண்டும் என்று நான் பலவந்தம் ஒரு போதும் செய்யமாட்டேன்; முரட்டுத்தனமாக நடக்க மாட்

டேன். நீங்கள் சொல்கிற வழியே பின்பற்றி நடப்பேன். இன்னும் ஒரே ஒரு கேள்வி. அதோடு முடித்து விடுகிறேன். இல்லற வாழ்க்கை முக்திக்குச் சாதனமாகுமா?

ஆனந்தசுவாமி—துறவி எப்படி முக்தி பெறுவதற்காகுமோ அவ்வளவு எளிதாகவே இல்லறத்தானும் முக்தி பெறுவதற்காகும். ஆனால், அவன் சந்தான உற்பத்தியின் பொருட்டு மாத்திரம் மனைவியுடன் புணர வேண்டுமே யல்லாமல், காம சாந்திக்காகப் புணரக்கூடாது.

ரங்கராஜு—எனக்கு ஏற்கெனவே இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். இன்னும் சிறிது காலம் வரையில் வேறு குழந்தை வேண்டாம். ஆதலால், மத சம்பந்தமான தத்துவ ஆராய்ச்சிக்கும் ஆத்ம விசாரத்திற்கும் போதிய காலம் எனக்கு இருக்கிறது.

ஆனந்தசுவாமி— இனி நான் போக வேண்டும்.

ரங்கராஜு (அவருக்கு நமஸ்கரிக்கிறான்)—உங்கள் சம்பாஷணையினால் நான் பெரிய நன்மை பெற்றேன். ஆத்ம ஸாம்ராஜ்யம் பெறுவதற்குரிய சாதனை சிறிது மின்றி, மிருகத் தன்மையான இன்பங்களில் ஈடுபட்டு நான் இதுவரையில் நடந்து வந்த விதம் தவறானதென்று இப்போது எனக்குத் தோன்றுகிறது.

ஆனந்தசுவாமி — குழந்தாய்! ஆசீர்வாதம். சன்மார்க்கத்தில் நீ அபிவிருத்தி யாவதற்குக் கடவுள் துணை செய்வாராக! ஆவடியில் என் குருவுடன் நான் ஒரு மாத காலம் இருப்பேன். எப்பொழுது வேண்டுமாயினும், நீ என்னை வந்து பார்த்துப் பேசலாம்.

(எழுந்து தன் கைத்தடியை எடுத்துக்
கொண்டு போகிறார்).

ரங்கராஜு — (எழுந்து, போகிறவரைப் பார்த்துக்கொண்டே, தனக்குத்தானே சொல்லிக்கொள்கிறான்).—இந்த மனிதனிடத்தில் சாந்தம் குடிகொண்டிருக்கிறது; இவருக்கு அறிவும் அதிகமாக இருக்கின்றது; மிக்க விவேக முடையவரென்பது திண்ணம். இவருக்கு பொருட்பற்று இல்லை. இவர் என்னை வசப்படுத்தி என் வழிகளினின்றும் ஏறக்குறைய திருப்பி விட்டாரென்றே சொல்லலாம். இவருடைய குரு பிரம்மானந்த யோகியைப் பார்க்க வேண்டும். இப்பொழுது வாக்கு வல்லமையைக் கண்டேன். இனி மௌனத்தின் பிரபாவத்தையும் காண்பேனாக. வாழ்க்கை விஷயத்தில் என்மனத்தில் நிகழும் இன்னும் சில சந்தேகங்களையும் அந்த முனிச் சிரேஷ்டர் நிவர்த்தி செய்யக் கூடுமே. இந்த சுவாமியின் கொள்கைகளை முழுதுமே நான் மேற்கொள்வேனாயின், எனது வாழ்க்கை ஒரு புரள் புரளும்; பழைய வழக்கங்கள் போய்ப் புதிய வழக்கங்கள் ஏற்படும்; படாடோபமும் வீண் அலைச்சலும் அவசர

மும், மதுபானமும், மாமிச உணவும், கூத்தும், கொம் மாளமும் ஒழிந்து, சாமானிய கேவல வாழ்க்கையும், தியானமும், மரக்கறி யுணவும், தெள்ளிய நீர்ப்பான மும் ஏற்படும். என் தாயார் களிப்புறுவாள். ஆனால், சுபத்திரையோ? அவளைச் சரிப்படுத்துவது கொஞ்சம் கஷ்டமாயிருக்கும். ஆனால், முடிவில் எல்லாம் சரிப் பட்டுப்போம்.

(உள்ளே போகிறான்)

Printed at the 'Caxton Press', Madras. — 1940